


ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ 3] [தனி இதழ் 25 ந. பை.

| மலர் 30 | ஏப்ரல் 1966 | இதழ் 4 |
|---|---|---|

# தித்திக்கும் திருநாள்

தமிழக முதலமைச்சர் திருவாளர் பக்தவத்சலம் அவர்கள், சில நாட்களுக்கு முன்னர், தமிழகச் சட்டமன்றத்தின் வாயிலாக ஒரு சிறிய—ஆனால் சீரிய செய்தியைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அவர்கள் அளித்துள்ள இந்தச் செய்தி, தமிழ் மண்ணில் பிறந்த ஒவ்வொருவர் உள்ளத்திலேயும் தேனாக இனிக்கிறது; தென்றலாக வீசுகிறது; மாண்புமிகு மல்லிகையாக மணக்கிறது.

இத்தகைய ஒரு செய்தி கிடைக்காதா என்று தமிழ் நெஞ்சங்கள் நீண்ட பல ஆண்டுகளாக ஏங்கிக் கிடந்தன. செய்தி கிடைத்திருக்கிறது இப்போது. எனவேதான், மகிழ்ச்சிப் பூங்காற்று, தமிழ் மக்களின் உள்ளங்களை, பெருமிதத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுகிறது.

இந்த ஆண்டு முதல், ஆண்டுக்கு ஒருநாள், திருவள்ளுவப் பெருந்தகையின் நினைவு நாளாக அறிவிக்கப்பட்டு, அன்றைய தினம் அரசாங்க விடுமுறை அளிக்கப்படும் என்பதே, அமைச்சர் அளித்துள்ள அரிய செய்தி.

இந்தியப் பெருநாடு விடுதலைபெற்ற உடனே—1947 ஆம் ஆண்டிலேயே—அறிவிக்கப்பட்டிருக்க வேண்டிய செய்தி இது. தமிழக அரசாங்கம் அந்த ஆண்டிலேயே இந்தச் செய்தியை அறிவித்திருந்தால் தமிழ் மக்களின் பூரிப்பு எல்லையற்றதாக இருந்திருக்கும்.

ஏனோ தெரியவில்லை — 1947லேயே எடுத்திருக்கவேண்டிய இந்த முடிவை இப்போதுதான் எடுத்திருக்கிறது தமிழக அரசு.

பதினெட்டு ஆண்டுக் காலத் தாமதத்திற்குப் பிறகு இந்த முடிவுக்கு வந்திருக்கிறது தமிழக அரசு என்றபோதிலும், மேலும் சில பல ஆண்டுகளை உருட்டிவிடாமல், இப்போதேனும் இந்தத் திட்டவட்டமான முடிவுக்குத் தமிழக அரசு வந்திருக்கிறதே என்பதை எண்ணி, நாம் உண்மையிலேயே பூரிப்பும் பெருமையும் அடைகிறோம்.

எழிலும் ஏற்றமும் மிகுந்த இந்தச் செய்தியை அறிவித்ததற்காகப் பொதுவாகத் தமிழ் நாட்டு அரசாங்கத்திற்கும், சிறப்பாக அதன் முதலமைச்சருக்கும், தமிழ்த் திருநாட்டு ஆரம்ப ஆசிரியர்கள்—ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் ஆகியோரின் சார்பில் நம் மனமார்ந்த பாராட்டுக்களையும் நன்றியுணர்வையும் தெரிவிக்க விழைகிறோம்.

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் ஒன்று வேண்டும் என்பது முத்தமிழ் நாட்டு முதுமொழி. திருவள்ளுவர் திருநாளுக்கு விடுமுறை விடுதல் என்னும் இந்த முடிவைப் பொறுத்தவரை, அத்தகைய தூண்டுகோலாக விளங்கியவர் **திருவாளர் புலவர் கோவிந்தன் அவர்கள் ஆவர்.**

வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சேயாறு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரும், செந்தமிழ்ப் புலமை நிறைந்தவரும், அழகழகான பல நூல்களை அணிஅணியாக இயற்றி அருந்தமிழ் அன்னைக்கு அணிகலன்களாகப் பூட்டியவரும் ஆகிய புலவர்

கோவிந்தன் அவர்கள்தான், திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடும் வகையில் ஆண்டுக்கு ஒருநாள் அரசாங்க விடுமுறை அளிக்க வேண்டும் என்கிற தனி ஆள் தீர்மானத்தைத் தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தில் கொண்டு வந்தவர்.

அப்புலவர் பெருமகனார் கொண்டுவந்த தீர்மானத்தின் நேரடி விளைவாகத்தான், விடுமுறை விடுவது என்கிற சிறந்த முடிவுக்கு வந்திருக்கிறது அரசாங்கம். ஆகவே, செந்தமிழ்ப் பணிபுரியும் அச்சிந்தனைச் செல்வருக்கும் நம் உளம் கனிந்த நன்றியை உரிமையாக்குகிறோம்.

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்று பாடினார் புத்துலகக் கவிஞர் பாரதியார். இந்த ஒரே ஒரு வாக்கியத்தின் வாயிலாகக் கவிஞர் பாரதியார் இரண்டு பேருண்மைகளை எழில்மிகு முறையில் சுட்டிக்காட்டியுள்ளார். திருக்குறள் என்னும் ஈடு இணையற்ற இலக்கியத்தைப் படைத்த பேரறிஞர் திருவள்ளுவர் தமிழகத்தில் பிறந்தவர் என்றபோதிலும், அவருடைய அரிய நூல், தமிழகத்திற்கு மட்டுமல்ல, உலகம் முழுவதற்கும் உரியது என்பது, கவிஞரின் சொல்லில் பொதிந்துள்ள ஓர் உயர்ந்த உண்மை. உலகம் முழுவதற்கும் பொருந்தக் கூடிய இத்தகைய பேர் இலக்கியத்தை இயற்றி அளித்ததன் வாயிலாக, வள்ளுவர், தமிழகத்திற்கு ஒப்பு உயர்வற்ற பெருமையை ஈட்டித் தந்துள்ளார் என்பது, அப்பாடல் வரியிற் பொதிந்துள்ள மற்றோர் அரிய உண்மை.

திருக்குறள், மனித சமுதாயத்திற்குக் கிடைத்துள்ள கிடைத்தற்கரிய ஓர் அறிவுப் பெட்டகம்; சிந்தனைச் சுரங்கம்; கருத்துக் கருவூலம். தொட்டனைத்து ஊறும் மணற்கேணி அது. அதனைக் கற்றனைத்து ஊறும் அறிவு. எல்லாப் பொருளும் அதன்பால் உள; அதன்கண் இல்லாப் பொருள் ஏதும் இல்லை.

இக்காலத்திற்கு மட்டும் அல்லது இந்நாட்டிற்கு மட்டும் உரிய நூல் அது என்று கூறமுடியாது; எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கும் உரிய நூல். நாடு, இனம், சமயம், மொழி, காலம்— அத்தனையையும் கடந்த இலக்கியம், குறள்.

ஒவ்வொரு குறட்பாவும் இரண்டு அடிகளைத்தான் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த இரண்டு அடிகளால், தமிழகத்தை

மட்டுமல்ல, உலகத்தையே அளந்திருக்கிறார் அறிஞர் பெருந்தகை யாம் வள்ளுவர். ஆகவேதான், திருக்குறளை நன்கு உணர்ந்தால், உலகத்தையே உணர்ந்தவர்கள் ஆவோம் என்று புலவர் பெருமக்கள் பொன்னுரை பகர்கிறார்கள்.

உலகம் என்னும் பெருங்கடலில், செல்லும் திசையையும் செல்லவேண்டிய திசையையும் அறியாமல் தத்தளிக்கும் ஒரு கப்பலாக விளங்குகிறது மனித சமுதாயம் என்றால், அந்தத் தத்தளிப்பை அகற்றி, அது செல்லவேண்டிய பாதையைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டும் கலங்கரை விளக்கம், திருக்குறள். மனித குலத்தின் மாண்புமிக்க வழிகாட்டி, அந்நூல்.

காலம் என்னும் கடும் புயலாலும் அழிக்கப்பட முடியாத இந்த அணையாத விளக்கைப் பெற்றளித்ததின் வாயிலாக, என்றென்றும் மங்காத புகழைத் தமிழ்த் திருநாட்டிற்கு ஈட்டித் தந்துள்ள அறிவுப் பெருந்தகைக்குத் தன் பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் வகையில், ஆண்டுக்கு ஒரு நாளேனும் விடுமுறை அளித்து விழாக் கொண்டாடுவது, தமிழகத்தின் தலையாய கடமையாகும். "எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பது வள்ளுவரின் தெள்ளுதமிழ் அல்லவா? எனவேதான், அரசாங்கத்தின் அறிவார்ந்த முடிவு, நம் இதயத்தை மகிழ்ச்சிப் பெருங்கடலில் நீராட்டுகிறது.

இனி ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளன்று தமிழ்நாடு முழுவதும் திருக்குறள் முழக்கம் செழித்திடவேண்டும். அந்நாளில், தமிழகத்தில் உள்ள ஒவ்வோர் ஊரிலும்—அது, பெரு நகரமாயினும், சிறு நகரமாயினும், பேரூர் ஆயினும் சிற்றூர் ஆயினும்—திருவள்ளுவர் விழா, வலிவும் பொலிவும் மிக்க முறையில் கொண்டாடப்படுதல் வேண்டும். அந்த விழாவில் புலவர் பெருமக்களைக்கொண்டு வள்ளுவர் வகுத்த வாழ்க்கை வழியைப் பற்றிய விளக்கவுரைகள் ஆற்றச்செய்தல் வேண்டும். மாணவர்களுக்கும் ஏனையோருக்குமான திருக்குறள் தொடர்பான—ஒப்பித்தல் போட்டி, கட்டுரைப் போட்டி, சொற்பொழிவுப் போட்டி, சொற்போர்ப் போட்டி ஓவியப் போட்டி முதலியன விரிவான வகையில் நடத்தப்பட்டுச் சிறப்பான வகையில் பரிசுகள் வழங்கப்படுதல் வேண்டும். இந்த விழாக்களுக்கெல்லாம் தலையாய விழாவாக, தமிழகத்தின் தலைநகரமாம் சென்னையில், தமிழ் நாட்டு அரசாங்கத்தால், மாபெரும் அளவில்—நூறாயிரக்கணக்கில் மக்கள் திரளும் வகையில்—ஈடு இணையற்ற

முறையில்—திருவள்ளுவர் நினைவு நாள் விழா கொண்டாடப்படுதல் வேண்டும். உலகத்தின் வேறு எந்த விழாவும் இந்த விழாவுக்கு ஈடு இல்லை என்று எவரும் வியந்து கூறத்தக்க அளவிலும் முறையிலும் தமிழகத்தின் இச்சொந்த விழா அமைதல்வேண்டும்.

குறள் நெறி தமிழகத்தின் இல்லந்தோறும்—தமிழ் மக்களின் உள்ளந்தோறும் இடம் பெறுதற்கு உரிய வாயிலாகத் திருவள்ளுவர் நினைவு நாளும் விழாவும் அமைதல் வேண்டும். தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு கட்சிகள்—கழகங்கள்—மன்றங்கள்—அமைப்புகள் ஆகிய அனைத்தின் நினைவும், அன்று ஒருநாள், திருக்குறள் ஒன்றின்மீது மட்டுமே பதிக்கப்படுதல் வேண்டும். அன்று, திரைப் படக் கொட்டகைகள் அனைத்திலும், படக்காட்சி தொடங்கப்படுவ தற்கு முன்னர், திருவள்ளுவருடைய இலக்கியத்தின் உள்ளுறையை யும் சிறப்பையும் எடுத்துக்காட்டும் தன்மையில் அமைந்த சிறிய படம் ஒன்று காட்டப்படுதல் வேண்டும். அன்றைய தினம் வெளி யாகிற தமிழகத்து நாளிதழ்கள் யாவும் திருக்குறட் சிறப்பு மலர்களாகவும், திருவள்ளுவர் நினைவு மலர்களாகவும் அமைந்து குறள் விளக்கக் கட்டுரைகளையும், ஓவியங்களையும் மக்கள் மன்றத் திற்கு அளித்திடவேண்டும். அனைத்திந்திய வானொலியிலும், அன்று, திருக்குறளைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் அமைந்த சொற்பொழிவுகள், நாடகங்கள், பட்டி மன்றங்கள், கவிதை அரங்குகள் முதலியன சிறப்பான வகையில் ஒலி பரப்பப்படுதல் வேண்டும். திருவள்ளுவரின் நினைவு நாள் வருகிற காலம், தமிழ கத்தின் கல்விச்சாலைகள் பணியாற்றுகின்ற காலமாக இருக்குமா னால், அன்று அவை அத்தனைக்கும் விடுமுறை விடப்படுதல் வேண்டும். அன்று விடுமுறையாக அமைந்துவிடுகிற காரணத்தால் அதற்கு முந்திய நாளே, அவற்றில் வள்ளுவர் விழாக் கொண்டாடப் படுதல் வேண்டும். சுருக்கமாகக் கூறவேண்டுமானால், திருவள்ளுவர் நினைவு நாளன்று தமிழ்நாடு முழுவதும் திருக்குறள் மயமாக விளங்குதல் வேண்டும்; அங்கிங்கெனாதபடி எங்கும், எங்கெங்கும் குறள் ஒலி கேட்டிடல் வேண்டும்.

இந்த ஆண்டில், திருவள்ளுவர் திருநாள், ஜூன் திங்கள் இரண்டாம் நாளன்று வருகிறது. அதிகார பூர்வமான முறையில் திருவள்ளுவர் திருநாள் விடுமுறையோடு கொண்டாடப்படுகிற முதல் ஆண்டல்லவா இது! எனவே, இந்த ஆண்டின் வள்ளுவர் விழா முதல்தரமானதாக அமைதல் வேண்டும். ஒவ்வோர் ஊரிலும் உள்ள தமிழ்ப் பெருமக்கள் விழாவை இணையற்ற முறையில் கொண்டாடுதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்வதில் இப்போதிருந்தே ஈடுபடுதல் வேண்டும் என்பது நம்முடைய பேரவல்.

---

# காலமும் கருத்தும்

## முதல்வர் வில்சனின் மாபெரும் வெற்றி

மார்ச் திங்கள் இறுதியில் பிரிட்டானிய நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தல், அந்த நாட்டின் முதலமைச்சர் திருவாளர் ஹெரால்ட் வில்சன் அவர்களுக்கும், அவரைத் தலைவராகப் பெற்றுள்ள தொழிற் கட்சிக்கும் மாபெரும் வெற்றியைப் பெற்றுத் தந்திருக்கிறது. அந்தத் தேர்தலின் விளைவாக லிபரல் கட்சிக்கு 9 இடங்களும், கன்சர்வேடிவ் கட்சிக்கு 249 இடங்களும்தான் கிடைத்துள்ளன. ஆனால் தொழிற் கட்சிக்கோ 362 இடங்கள் கிடைத்துள்ளன. ஆகவே, எதிர்க் கட்சிகள் இரண்டிற்கும் கிடைத்துள்ள மொத்த இடங்களைவிட ஆளும் கட்சியாகிய தொழிற் கட்சிக்குக் கூடுதலாக 104 இடங்கள் கிடைத்துள்ளன. தலையாய எதிர்க் கட்சியாகிய கன்சர்வேடிவ் கட்சிக்குக் கிடைத்துள்ள இடங்களை மட்டும் கணக்கில் எடுத்துப் பார்த்தால், தொழிற் கட்சிக்குக் கிடைத்துள்ள கூடுதல் இடங்கள், 113 ஆகும். இந்தப் பொதுத் தேர்தலுக்கு முன்னர் கூடத் தொழிற் கட்சிதான் பிரிட்டனின் ஆளும் கட்சியாக இருந்து வந்தது. ஆனால் அப்போது அந்தக் கட்சி எதிர்க் கட்சிகளைவிட ஐந்தே ஐந்து இடங்களைத்தான் கூடுதலாகப் பெற்றிருந்தது. பதினேழு மாதங்களுக்கு முன்னால் நடைபெற்ற பொதுத் தேர்தலின் விளைவாகப் பிரிட்டனின் ஆட்சிப் பீடத்தில் அமரும் உரிமை தொழிற் கட்சிக்குக் கிடைத்தது என்றபோதிலும், அப்போது அந்தக் கட்சிக்குக் கிடைத்த பெரும்பான்மை அதாவது மெஜாரிடி, இவ்வளவு குறுகியதாகத்தான் இருந்தது. இதன் விளைவாக அந்தக் கட்சியின் அமைச்சரவை, சென்ற பதினேழு மாதங்களாக, முட்கள் நிறைந்த நாற்காலியின்மீது உட்கார்ந்திருப்பவனைப்போல் திண்டாடிக்கொண்டும் தத்தளித்துக் கொண்டும் இருக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு நாளும் அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தவறாமல் மன்றத்திற்கு வந்தால்தான் அமைச்சரவையின் தீர்மானங்களும், மசோதாக்களும் நிறைவேறும் என்கிற நிலை இருந்து வந்தது. இப்போது நடைபெற்ற பொதுத் தேர்தலின் பயனாக இந்த இடைவிடாத் தலைவலி தீர்ந்து, தொழிற் கட்சியின் ஆட்சிக்கும், அதன் முதலமைச்சர் வில்சனின் அதிகாரத்திற்கும் நிம்மதியான ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பதினேழு மாதங்களுக்கு முன்னால் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐந்து இடங்களைமட்டுமே கூடுதலாகப் பெற்ற தொழிற் கட்சிக்கு இப்போதைய பொதுத்

தேர்தலின் விளைவாக நூற்றி நான்கு இடங்கள் கூடுதலாகக் கிடைத்துள்ளன என்றால்—இவ்வளவு குறுகிய காலத்தில் அந்தக் கட்சிக்குப் பிரிட்டிஷ் பொது மக்களின் ஆதரவு இவ்வளவு கூடுதலாகப் பெருகியிருக்கிறது என்றால், இந்தப் பதினேழு மாதங்களில் அந்தக் கட்சி எவ்வளவு சிறப்பாக ஆட்சி புரிந்து, பொது மக்களின் உள்ளங்களை எவ்வளவு விரைவாகக் கவர்ந்திருக்கிறது என்பதையே அது எடுத்துக் காட்டுகிறது. பிரிட்டிஷ் வாக்காளர்கள், படிப்பறிவு அற்றவர்கள் அல்லர்; நூற்றுக்கு நூறு பேரும் படித்தவர்கள். அரசியல் துறையின் நுட்பங்களையும் உண்மைகளையும் உணராத அப்பாவிகள் அல்லர்; அரசியல் கட்சிகளின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் திட்டங்களையும் போக்குகளையும் தெள்ளத் தெளிவாக அறிந்தவர்கள். பணத்தைக் காட்டியோ, சாதி பேதத்தை வற்புறுத்தியோ, பொருத்தமற்ற பொய்யுரைகளைப் புகன்றோ அவர்களுடைய வாக்குகளைப் பெற்றுவிட முடியாது. இருக்கின்ற நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து, செய்வன திருந்தச் செய்யும் ஆற்றலும் அறிவும் மிகுந்தவர்கள். பல நூற்றாண்டுகளாகப் பாராளுமன்ற ஜனநாயக முறையைக் கையாண்டு உரமேறிய அனுபவம் படைத்தவர்கள்—மரபை உடையவர்கள், பிரிட்டிஷ் மக்கள். பதினேழு மாதங்களில், ஹெரால்ட் வில்சனின் தலைமையில் அமைந்த ஆட்சி மிகச் சிறந்த நன்மைகளைச் செய்திருந்தாலொழிய அவர்கள் இத்துணைப் பேராதரவை அந்தக் கட்சிக்கு அளித்திருக்கமாட்டார்கள் என்பது தெளிவு.

முந்திய பொதுத் தேர்தல் நடைபெற்றுப் பதினேழு மாதங்கள் தான் ஆகியிருக்கின்றன. வில்சன் விரும்பியிருந்தால், மிச்சமுள்ள மூன்றரை ஆண்டுகளையும், மற்றொரு பொதுத் தேர்தலை நடத்தாமலே, ஆட்சித் தலைவராக இருந்து கழித்திருக்க முடியும். மிகக் குறுகிய பெரும்பான்மைதான் அவருடைய கட்சிக்கு இருந்தது. அத்தகைய பெரும்பான்மையின் பயனாக அக்கட்சிக்குப் பல சமயங்களில் நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கிறது. இது உண்மைதான் என்றபோதிலும், இத்தகைய நெருக்கடிகளுக்கு இடையே, ஆட்சிப் பீடத்திலிருந்து கவிழ்ந்து விழாமல் சென்ற ஒன்றரை ஆண்டுகளைக் கழித்துவிடவில்லையா அவருடைய கட்சி. அதுபோல அந்தக் கட்சியும், அதன் தலைவரும் நினைத்திருந்தால், மிச்சமுள்ள மூன்றரை ஆண்டுகளையும் ஓட்டியிருக்க முடியும். எப்படியாவது பதவி நாற்காலிகளில் ஒட்டிக்கொண்டிருந்தால் போதும் என்கிற இழிவு மனப்பான்மை உடைய ஒரு தலைவராக வில்சன் இருந்திருந்தால்—அல்லது அத்தகைய ஒரு கட்சியாகத் தொழிற் கட்சி இருந்திருந்தால், அப்படித்தான்

நிலைமை உருவாகி யிருக்கும். ஆனால் முதல்வர் வில்சன் அத்தகைய எளிய மனப்பான்மையைக் கொள்ளவில்லை. துணிச்சலான முறையில் பொதுத் தேர்தலுக்கு ஏற்பாடு செய்து, பொது மக்கள், தன் கட்சியின் ஆட்சி நீடிப்பதை விரும்புகிறார்களா இல்லையா என்பதைத் திட்டவட்டமான முறையில் அறிய விரும்பியிருக்கிறார். அவருடைய இந்த முடிவு, அன்னாரின் பெருந்தன்மையையும், தன் நலனையும், தன் கட்சியின் நலனையும்விடத் தன் நாட்டின் நலனையே பெரிதாகக் கருதும் அவருடைய பரந்த உள்ளத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

பிரிட்டிஷ் பெரு நாட்டின் அரசியல் தலைவர்கள் இத்தகைய பரந்த நோக்கமும், விரிந்த உள்ளமும், செயலாற்றும் திறனும் படைத்தவர்களாக இருக்கின்ற காரணத்தால்தான், அண்மைக் காலத்தில் அந்த நாட்டு சாம்ராஜ்யத்தின் பெரும் பகுதிக்கு விடுதலை வழங்கப்பட்டு அந்த நாட்டின் அரசியல் அதிகார எல்லை மிகக் குறுகியதாக ஆகிய பின்னரும்கூட, அந்த நாடு, இன்றளவும் உலகப் பெரு வல்லரசுகளில் ஒன்றாகத் தலைநிமிர்ந்து நிற்கிறது. இத்தகைய உயர்ந்த நோக்கும், சீரிய செய்நேர்த்தியும் இந்திய நாட்டு அரசியல் தலைவர்களுக்கும் ஏற்படவேண்டும் என்பது நம்முடைய பேராவல்.

## ஆற்றல் வீரரின் அரிய செயல்

இந்தியாவின் தென் பகுதிக்கும், இலங்கையின் வட பகுதிக்கும் இடையே உள்ள கடலின் நீளம், இருபத்து இரண்டு மைல்கள். இந்தக் கடற் பகுதியில் சுறா மீன்களும், நச்சுப் பாம்புகளும் மிகுதி. இத்தகைய கடற் பகுதியை, கொந்தளிப்பு மிகுதியாக உள்ள முழு நிலா இரவில் ஒருவர் நீந்திக் கடப்பது என்பது ஈடு இணையற்ற அருஞ்செயலாகும். அத்தகைய செயலைச் செய்து முடித்திருக்கிறார் வங்க மாநிலத்தைச் சேர்ந்த தங்கம் நிகர் காளை ஒருவர். **மிஹிர் சென்** என்னும் பெயர் படைத்த அந்த ஆற்றல் மறவர், வங்காளத்தைச் சேர்ந்த டாக்டர் ரமேச சந்திர சென் என்பாரின் திருமகனார். அவர், ஏப்ரல் 6ஆம் நாள் காலை இலங்கைத் தீவின் தென் பகுதியைச் சேர்ந்த தலைமன்னாரில் பழைய கலங்கரை விளக்கத்திற்கு அருகாமையில் உள்ள கரையிலிருந்து நீந்தத் தொடங்கி, மறுநாள் காலை, தமிழகத்தின் தென் பகுதியில் உள்ள தனுஷ்கோடிக் கரையை அடைந்துள்ளார். 1954 ஆம் ஆண்டில் நவரத்தினசாமி என்பவரும், 1963ல் ஆனந்தன் என்பவரும் இந்தக் கடலை வெற்றியுடன் நீந்திக் கடந்துள்ளனர் என்றபோதிலும் அவர்கள் இருவரும் இலங்கைக் குடிமக்கள். ஆனால் இப்போது இக்கடலைக் கடந்துள்ள பெருமகனார், இந்திய

நாடு ஈன்றெடுத்த ஓர் இணையிலா வீரர். எனவே இலங்கை—இந்தியக் கடலை வெற்றியுடன் நீந்திக் கடந்த முதல் இந்தியர் என்கிற புகழும், பெருமையும் இவருக்குக் கிடைத்துள்ளன. இந்திய இளைஞர்களின் வீரச் செயல்கள் பற்றிய வரலாற்றில் மிஹிர் சென்னின் பெயர் தனிச் சிறப்புள்ள இடம்பெறும் என்பதில் துளியும் ஐயமில்லை. மிஹிர் சென்னின் வயது 36. அவருடைய மனைவி, திருமதி பெல்லா என்னும் ஒரு பிரிட்டிஷ் பெண்மணி. பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையேயுள்ள கடலையும் முன்னரே நீந்திக் கடந்த பெருமை படைத்தவர் திருவாளர் சென். அன்னாருக்கு நம் உள்ளம் நிறைந்த பாராட்டுக்கள். வாழ்க அவர் திறன்! வளர்க அவர் புகழ்!

## உயர்கிறது பஞ்சப்படி! உயர்ந்தால் போதுமா?

தமிழ் நாட்டு அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பஞ்சப்படியை 5 ரூபாய் முதல் 12 ரூபாய்வரை உயர்த்தியிருப்பதாகவும், இந்த உயர்வு, ஜூலை முதல் தேதி வாங்கப்படும் ஜூனின் மாத சம்பளத்திலிருந்து நடைமுறைக்கு வரும் என்றும், மார்ச் திங்கள் இறுதியில், தமிழ் நாட்டு முதலமைச்சர் திருவாளர் பக்தவத்சலம் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பை நாம் மனமார வரவேற்கிறோம். இத்தகைய அறிவிப்பை அளித்ததற்காகத் தமிழக அரசுக்கு நம் உளம் கனிந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் நம் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிற அதே நேரத்தில் மிக முதன்மையான ஓர் உண்மையையும் எடுத்துக் காட்ட வேண்டியது நம் கடமையாக இருக்கிறது. பஞ்சப்படியை அவ்வப்போது உயர்த்திக்கொண்டிருப்பதால் மட்டும், அரசாங்க ஊழியர்களுக்கோ, ஆசிரியர்களுக்கோ நிலையான நிவாரணம் ஏற்பட முடியாது என்பதே அந்தத் திட்டவட்டமான உண்மை. அந்த இரு சாராருக்கு மட்டுமல்ல, சமுதாயத்தில் உள்ள எல்லா ஏழை மக்களுக்கும், நடுத்தர வகுப்பினருக்கும் உருவான நன்மையும், நிலையான வசதியும் ஏற்படவேண்டுமானால் மடமடவென ஏறிவரும் விலைகள் உடனடியாகக் கட்டுப்படுத்தப் படவேண்டும். சென்ற பதினைந்து ஆண்டுகளாகவே விலைகள் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக உயர்ந்து ஓங்கி வளர்ந்து செழித்துவந்திருக்கின்றன. குறிப்பாகவும், சிறப்பாகவும் சென்ற இரண்டு ஆண்டுகளில், குடித்தனத்தை நடத்திச் செல்வதற்குத் தேவையான பண்டங்களின் விலைகள் 'ராக்கெட்' வேகத்தில் உயர்ந்து விட்டிருக்கின்றன. சமையலுக்குத் தேவையான உணவுப் பொருள்கள், எண்ணெய் வகைகள், பருப்பு வகைகள் விறகு, கரி ஆகியவற்றின் அண்மைக் கால விலை உயர்வு, ஏழை எளிய

மக்களையும், நடுத்தர மக்களையும் நடுநடுங்க வைத்திருக்கிறது. இந்தப் பயங்கரமான விலை உயர்விலிருந்து பொது மக்களைக் காப்பாற்ற வேண்டியது, மாநில அரசுகள்—மத்திய அரசு ஆகியவற்றின் முதற்பெரும் பொறுப்பாகும். 'இந்த அரசுகள் அவசரமாகவும், அவசியமாகவும் செய்ய வேண்டிய முதற்பணி, விஷம் போல ஏறியுள்ள விலைகளை மேலும் ஏறுதபடி, இருக்கும் அளவிலேயே நிறுத்துவதாகும். அவை அடுத்தாற்போல் செய்ய வேண்டிய பணி, விலைகளை வெட்டிக் குறைத்து நியாயமான அளவில் அவற்றை நிற்கும்படிச் செய்வதாகும். இந்த இன்றியமையாத பணியில் இந்த நாட்டு அரசாங்கங்கள் முழு மூச்சுடன் உடனடியாக ஈடுபட்டாக வேண்டும். விலைக் குறைப்புப் பணியில் ஈடுபடாமல், அவ்வப்போது பஞ்சப்படியை மட்டும் உயர்த்துவதால் அரசாங்கத்தின் செலவில் சில கோடி ரூபாய் அளவுக்கு உயர்வு ஏற்படுகிறதே தவிர, பஞ்சப்படியைப் பெறுபவர்கட்குக் குறிப்பிடத்தக்க நன்மை எதுவும் ஏற்படுவதில்லை. ஏனென்றால் பஞ்சப்படி அறிவிப்பு செய்யப்பட்ட சில வாரங்களுக்கு உள்ளாகவே, பொருள்களின் விலைகள் முன்னிலும் உயர்கின்றன; அப்படி உயர்வதால் ஏற்படக்கூடிய நன்மை அழிந்து விடுகிறது. இந்த உண்மையை அரசாங்கத்தார் நன்கு உணர்ந்து, விலைகளைக் கட்டுப்படுத்தும் நற்பணியில் விறுவிறுப்பாக ஈடுபடவேண்டும் என்பது நம் வேண்டுகோள். விலைகள் குறையட்டும்—மக்கள் வாழ்வில் வளம் பெருகட்டும்.

## "1954–ல் பீகிங் சென்றபோதே சீன அபாயத்தை உணர்ந்தேன்"

### ஆனால் நேரு ஒப்புக்கொள்ளவில்லையாம்: கெய்ரோ பத்திரிகைக்கு இந்திரா பேட்டி

கெய்ரோ, பிப். 18—1954-ல் தமது தந்தையுடன் சீனாவுக்கு தாம் முதல் தடவையாக விஜயம் செய்த போதே, சீன அபாயத்தை உணர்ந்ததாகப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி "அல் அஹறாம்" பத்திரிகை ஆசிரியருக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்தார்.

அவரது பேட்டியை "அல் அஹறாம்" இன்று பிரசுரித்துள்ளது. இவ்வித அச்சம் ஆதாரமற்றது என்று அதுசமயம் நேரு ஒதுக்கித் தள்ளிவிட்டதாக திருமதி இந்திரா காந்தி குறிப்பிட்டார்.

"ஓராண்டுக்குப் பின்னர், பாண்டுங் மகாநாட்டின் போது சீன அபாயத்தை நேருவே உணர்ந்தார். சீனா பற்றிய அச்சத்தில் தாமும் பங்கு கொள்வ

[11-ஆம் பக்கம் பார்க்க]

# ஆடு மேய்த்த ஒபோடே பிரதமராக நாடு மேய்க்கிறார்

நைரோபி, மார்ச். 3—ஆட்டு இடையராக இருந்து தேசியத் தலைவராக உயர்ந்த உகாண்டாவின் முதல் 'பிரதமர் 'மில்டன் ஒபோடே மூன்றரை ஆண்டுக் கால பிரதமர் பதவிக்குப் பிறகு இப்போது அதிகார மனைத்தையும் தன் வசப்படுத்திக் கொண்டுள்ளார்.

காங்கோவிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட தங்கத்தை மந்திரிகள் பெற்றதாகக் கூறப்பட்ட ஊழலைத் தொடர்ந்து அரசியல் சட்டத்தைக் குலைக்க சில அதிகாரிகளும், ராணுவ அதிகாரிகளும் விரும்பினர் என்ற குற்றச்சாட்டுக்கு மில்டன் ஒபோடே பதிலளித்த 9 நாட்களுக்குப் பிறகு மேற்கூறியவாறு அதிகாரமனைத்தையும் கைப்பற்றினார். கொள்ளையடித்த தங்கத்தை சப்ளை செய்ததற்காக ராணுவத்தின் உதவி கமாண்டரை விலக்க வேண்டுமென்றும், மந்திரிகள் பற்றி ஆராய வேண்டுமென்றும் சட்ட சபை கோரியது.

அதிகாரமனைத்தையும் கைப்பற்றிய டாக்டர் ஒபோடே 5 மந்திரிகளை சிறைப்படுத்தினார். தனது ஒற்றை நபர் புரட்சியை அவர் "சுயேச்சையான செயல்" என வருணித்தார். உகாண்டாவின் ஆளும் கட்சியான மக்கள் கட்சியிலுள்ள பிளவுகள் ராணுவத்திலும் பிரதிபலிக்கின்றன. ராணுவத்தின் கமாண்டரான பிரிகேடியர் ஒபோலோட்டோவுக்கும் ஒபோடே ஆதரிப்பதாகக் கூறப்படும் உதவி கமாண்டர் லெப்டினண்ட்-கர்னல் அமீனுக்கும் விரோதம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ராணுவக் கிளர்ச்சி எதுவும் இருக்காது என்று விஷயமறிந்த வட்டாரத்தினர் கூறுகின்றனர். நெருக்கடி நிலைமையை டாக்டர் ஒபோடே சாதகமான வகையில் பயன்படுத்திக் கொண்டுள்ளதாகச் சிலர் கருதுகின்றனர்.

41 வயதான டாக்டர் ஒபோடே திறமையான அரசியல்வாதி. அவர் கூட்டரசாங்கம் ஒன்றுக்குத் தலைமை வகிக்க ஆரம்பித்த

---

[10-ஆம் பக்கம் தொடர்ச்சி]

தாக அவர் என்னிடம் தெரிவித்தார். ஆனால் அபாயத்தின் தன்மையை அவர் குறிப்பிடவில்லை" என்று இந்திய பிரதமர் மேலும் கூறினார். ஆசியாவில் தனக்கு இணையாக ஒரு நாடு இருப்பதை சீனா விரும்பவில்லை போலும் என்று பாண்டுங்கில் நேரு தம்மிடம் கூறியதாக திருமதி இந்திராகாந்தி தெரிவித்தார்.

5 மாதங்களில் அதாவது 1962 அக்டோபரில் உகாண்டா விடுதலை பெற்றது. மில்லன் ஒபோடே ஆட்டிடையாளராகவும், தொழிலாளியாகவும், ஆசிரியராகவும் வேலை பார்த்து பின்னர் 30ஐ நெருங்கிய போது தீவிர அரசியலில் ஈடுபட்டார். அவர் பெரும் தைரியசாலி.

தனது உயிருக்கு ஏற்பட்ட பல ஆபத்துகளை அவர் நிராயுத பாணியாக சமாளித்தது பற்றிய செய்திகள் இன்று சாகசக்கதைகள் போலாகிவிட்டன. ஒரு தடவை அவர் சிறுத்தையினால் தாக்கப்பட்டார்; இன்னொரு தடவை அவருடைய முதுகில் ஈட்டி வீசப்பட்டு காயமடைந்தார்; மாவ்மாவ் இயக்கத்தினர் அவரைச் சுட்டுக் கொல்ல முயற்சித்தனர்.

மகாரேரே சர்வ கலாசாலைக் கல்லூரியில் பொருளாதாரம் படித்துவந்த அவர் படிப்பைப் பாதியில் விட்டுவிட்டு, தொழிற் சங்க இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். கென்யா ஆப்பிரிக்க யூனியன் கட்சியை நிறுவ உதவினார். அக் கட்சி 1952-ல் தடை செய்யப்பட்டதிலிருந்து 1956 வரை அவர் நாடு கடத்தப்பட்டிருந்தார். ஓராண்டுக்குப் பிறகு சட்ட மன்ற மெம்பரானார்.

1962 ஏப்ரலில் பிரதமரான அவர் வியட்நாம் பிரச்னையில் சீனாவை ஆதரித்து வருகிறார். ஆப்பிரிக்கா குறித்த ரஷியக் கொள்கைகளைப் புரிந்து கொண்டவராக இருக்கிறார். எனினும் 2 ஆண்டுகளுக்கு முன்னர் உகாண்டாவில் ராணுவப் படைகள் கலகம் செய்த போது அதை அடக்க பிரிட்டிஷ் ராணுவ உதவியைக் கோர அவர் தயங்கவில்லை.

---

## பி. யு. ஸி. மாணவர்களுக்கு என். ஸி. ஸி.-யை இஷ்டபூர்வமாக்குவது பற்றி ஆலோசனை

சென்னை, மார்ச். 19— பி.யு.சி. மாணவர்களுக்கு என். ஸி. ஸி. பயிற்சியை கட்டாயமில்லாமல் இஷ்டபூர்வமானதாக்குவதுபற்றி சென்னை சர்க்கார் யோசித்து வருகிறது. இப்போது பி.யு.ஸி. மாணவர்கள் கட்டாயமாக அப் பயிற்சியைப் பெறவேண்டும் என்றிருக்கிறது.

அஸெம்பிளியில் இத்தகவலைத் தெரிவித்த முதன் மந்திரி திரு. பக்தவத்சலம், இப்போது என். ஸி. ஸி. அணி வகுப்புகளில் குறைந்த பட்சம் 75 சதவிகிதம் அணி வகுப்புகளில் ஆஜராகியிருந்தால்தான் ஆண்டு இறுதிப் பரீட்சைகளில் அமரலாம் என்று விதி இருக்கிறது என்று கூறினார்.

# கல்வித் துறைச் செய்திகள்

## ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் புத்தகங்கள்

அளிக்க சர்க்கார் திட்டம்

சென்னை, மார்ச், 19—1 வது வகுப்பிலிருந்து 3-வது வகுப்பு வரை உள்ள, மதிய உணவு பெறும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகங்கள் வழங்க சர்க்கார் உத்தேசித்துள்ளது. இந்த ஏற்பாடு ஏப். 1-ந் தேதியிலிருந்து அமுலுக்கு வரும் என்று முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் இன்று அசெம்பிளியில் கூறினார்.

திருவாளர்கள் வி. சங்கரன், எஸ். மாதவன் ஆகியோரின் கேள்விக்கு அவர் பதிலளித்தார். பள்ளியில் படிக்கும் ஏழைக் குழந்தைகளுக்கு சீருடை வழங்க ஏற்கனவே ஒரு திட்டம் இருக்கிறது. ஏழைக் குழந்தைகளுக்கு சாப்பாடு, தங்குமிடம் ஆகியவற்றை இலவசமாக அளிக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று அவர் கூறினார்.

## தமிழகத்தில் 15 லட்சம் குழந்தைகளுக்கு மதிய உணவு

திட்டக் கமிஷன் மதிப்பீடு

புதுடில்லி, மார்ச். 26 — சென்னை ராஜ்யத்தில் பள்ளிகள் அபிவிருத்தி திட்டத்தின் ஒரு பகுதியாக மக்களது ஆதரவுடன் சுமார் 15 லட்சம் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது.

ரூ. 9 கோடி செலவில் ராஜ்யத்தில் 32,000-க்கும் அதிகமான பள்ளிகளின் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள தெரிந்தெடுக்கப்பட்டுள்ள இடங்களில் சர்வே நடத்திய பின்னர், திட்டக் கமிஷன் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் இந்த விவரங்கள் காணப்படுகின்றன.

இதர விவரங்களுடன் கூட, சென்னை சர்க்கார் ஸ்தாபனங்களும், ஆசிரியர் சங்கங்கள் போன்ற ஸ்தாபனங்களும் பள்ளி விஷயங்களில் உள்ளூர் மக்கள் அக்கறை கொள்ளும்படிச் செய்வதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைப்பற்றியும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பல்கலைக் கழக மாணவர்களின் வாழ்க்கை

சுவையான சில தகவல்கள்

சிதம்பரம், மார்ச். 24 — அண்ணாமலை சர்வகலாசாலையில் மொத்தம் 4000 மாணவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 60 சதவிகிதத்தினர் (சுமார் 2500 பேர்) சர்வகலாசாலை

ஹாஸ்டல்களில் தங்கியிருக்கின்றனர்.

சர்வகலாசாலை மாணவர்கள் எப்படி வாழ்க்கை நடத்துகிறார்களென்று சர்வகலாசாலையின் திட்ட அரங்கு சமீபத்தில் ஒரு ஆராய்ச்சி நடத்தியது.

ஹாஸ்டலில் உள்ள மாணவர்களைப்பற்றி மட்டுமே அந்த ஆராய்ச்சி நடந்தது. அதில் பின் கண்ட ருசிகரமான தகவல்கள் கிடைத்தன.

வருடத்தில் பத்துமாதம்தான் வகுப்புகள் நடக்கின்றன. இந்தப் பத்து மாதங்களில் மாணவர்கள் ஹோட்டல்களுக்காக மட்டும் ரூ. 1,20,000 செலவிட்டிருக்கிறார்கள்.

சினிமா—ரூ. 60,000, பத்திரிகைகள், சஞ்சிகைகள் ரூ 36,000, சோப்பு வகைகள் ரூ. 18,000, சிகரெட்டுகள் ரூ. 15,000. அதாவது சிற்றுண்டிகள் 18·9 சதவிகிதம், பத்திரிகைகள் புஸ்தகங்கள் 14·5 சதவிகிதம், சினிமா 10·2 சதவிகிதம், சலவை 10·2 சதவிகிதம், பிரயாணங்கள் 9·2 சதவிகிதம், மத விஷயங்கள், தர்மம் முதலியவற்றுக்காக 1 சதவிகிதம்தான்.

## தமிழகத்தில் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 40,000 உதவி

—

பரிசோதனைக் கூடங்களை நிறுவத் திட்டம்

திருச்சி, மார்ச். 27—பள்ளிகளில் விஞ்ஞான பாட போதனைக்காக பரிசோதனைச் சாலைகளைக் கட்டவும் அவசியமான பரிசோதனைக் கருவிகளை வாங்கவும் 1966-67 ஆம் ஆண்டில் ராஜ்யத்தில் பள்ளியொன்றுக்கு ரூ. 40,000 வீதம் உதவி அளிக்கப்படும். ராஜ்யத்தில் 200 பள்ளிகளுக்கு இந்த உதவி கிடைக்கும். இத்தகவலை செகண்டரி கல்வி கூட்டு டைரக்டர் திரு. சிட்டிபாபு இன்று இங்கு தெரிவித்தார்.

நான்காவது திட்ட காலத்தில் ராஜ்யத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் 1250 பள்ளிகளுக்கு இந்த உதவி கிடைக்கும் என்றார். 1966-67ல் 200 பள்ளிகள் இந்த உதவியைப் பெறும் என்றார். இதைத் தவிர 1966-67ம் ஆண்டில் 'முக்கியமான பாடங்கள்' போதனை அபிவிருத்திக்காக பள்ளியொன்றுக்கு ரூ. 25,000 வீதம் 100 செகண்டரி பள்ளிகளுக்கு உதவியளிக்கப்படும் என்றார்.

நான்காவது திட்ட காலத்தில் ராஜ்யத்தில் கல்வி தர அபிவிருத்திக்கு அதிகம் கவனம் செலுத்தப்படுமென்றார். 4வது திட்ட கால இறுதியில் ராஜ்யத்தில் 6 முதல் 11 வயதுள்ள எல்லாக் குழந்தைகளும் பள்ளிகளில் சேருவர் என்றார்.

## ராஜ்யத்தில் மேலும் 3 மாலை நேரக் கல்லூரிகள்

—

சென்னை, மார்ச். 8—ராஜ்யத்தில் மூன்று மாலை நேரக் கல்லூரி

களில் விஞ்ஞானப் பாட வகுப்புகளை துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவையாவன: சென்னையில் கலைக்கல்லூரி, ராணி மேரிக் கல்லூரி, கோவையில் சர்க்கார் கலைக் கல்லூரி. இக் கல்லூரிகளில் பட்ட வகுப்புகளும் துவக்கப்படும்.

ராஜ்யத்தில் மேலும் மூன்று மாலை நேரக்கல்லூரிகள் ஆரம்பிக்கப்படும். அவையாவன: மதுரை மீனாட்சி கல்லூரி (பெண்கள்), சேலம் கலைக் கல்லூரி, தஞ்சாவூர் சரபோஜிக் கல்லூரி. இவற்றில் புகுமுக வகுப்புகள் துவக்கப்படும்.

1966-67ஆம்ஆண்டில் சென்னையில் ராஜதானிக் கல்லூரியில் தெலுங்கிலும் ஆங்கிலத்திலும் பிற்கால பட்டப் படிப்புக்கான வகுப்புகள் ஆரம்பிக்கப்படும். ராணிமேரி கல்லூரியில் சமூகப் பணி வகுப்பு ஆரம்பிக்கப்படும்.

கிண்டி எஞ்ஜினீயரிங் கல்லூரியில் உலோக இயலில் 5 வருஷ பட்டப் படிப்பும், கோவை சர்க்கார் தொழில் நுட்பக் கல்லூரியில் ஒன்று அல்லது இரண்டு பட்ட பிற்கால படிப்பு வகுப்புகளும் ஆரம்பிக்கப்படும். இதற்கு மத்திய சர்க்கார் அங்கீகாரம் கிடைக்க வேண்டும். கோவை சர்க்கார் தொழில் நுட்பக் கல்லூரியில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படும். எண்ணிக்கை 180லிருந்து 240 ஆகவும் மதுரை எஞ்சினீயரிங் கல்லூரியில் 180லிருந்து 210 ஆகவும் அதிகரிக்கப்படும்.

பிஎஸ்ஜி தொழில் நுட்பக் கழகத்தில் டெலிவிஷன் துறையில் டிப்ளோமா வகுப்பு ஒன்றை துவக்கும் பிரேரணை யொன்றும் உள்ளது.

## 4-வது திட்டத்தில் கல்விக்கு ரூ. 1260 கோடி முதலீடு

மாநிலங்கள் பங்கு
ரூ. 880 கோடி
மத்திய சர்க்கார் பங்கு
ரூ. 380 கோடி.

புதுடில்லி, மார்ச். 14—கல்விக்காக 4வது ஐந்தாண்டுத் திட்டத்தை கல்வி அமைச்சகம் திட்டக் கமிஷனின் ஆலோசனையுடன் வகுத்துள்ளது. இந்த திட்டத்துக்கான முதலீடு ரூ. 1260 கோடியாகும். இதில் ராஜ்யங்களின் பங்கு ரூ. 880 கோடி. மத்திய சர்க்காரின் பங்கு ரூ. 380 கோடி.

திட்ட விவரங்கள் கல்வி அமைச்சகத்தில் பார்லிமெண்டரி ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் இன்று தெரிவிக்கப்பட்டன.

முதலீட்டில் ஒதுக்கீடு விவரம்: துவக்கக் கல்வி ரூ. 398·50 கோடி; செகண்டரி கல்வி ரூ. 279·17 கோடி; சர்வகலாசாலை கல்வி 132·45 கோடி; ஸ்காலர்ஷிப் ரூ. 55 கோடி; சமூக கல்வி ரூ. 71 கோடி; தொழிற் கல்வி ரூ. 252·70 கோடி; கலாசார திட்டங்கள் ரூ. 16·18 கோடி. இதர இனங்கள் ரூ. 55 கோடி.

## தமிழ் நாட்டில் இரண்டு கிராமப் பல்கலைக் கழகங்கள்

### தேசியக் கிராமக் கல்விக் கவுன்சில் முடிவு

சென்னை, மார்ச். 20—காந்தி கிராமத்திலுள்ள கிராமக் கல்வி கழகத்தையும், கோவை ஜில்லாவிலுள்ள ராமகிருஷ்ண வித்யாலயத்தையும் கிராமப் பல்கலைக் கழகங்களாக மாற்றி, பலப்படுத்தலாம் என்ற சர்வகலாசாலை மானிய கமிஷன் உட்குழு சிபாரிசை தேசிய உயர்தரக் கிராமக் கல்விக் கவுன்சில் 19உயன்று டில்லியில் நடந்த கூட்டத்தில் அங்கீகாரம் செய்ததாக இங்கு தகவல் கிடைத்துள்ளது. கவுன்ஸில் தலைவர் கல்வி மந்திரி திரு. எம். ஸி. சாக்ளா இம் முடிவுகளைச் செயல் படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென்று உறுதியளித்தார்.

ஆக்ரா அருகில் பீஜப்பூரிலுள்ள கிராம கலாசாலையும் கிராமப் பல்கலைக் கழகமாகும்.

கிராம கலாசாலைகளில் விவசாயக் கல்வியை மேம்படுத்துவதன் அவசியத்தையும் கவுன்சில் வற்புறுத்தியது. இரண்டு வருஷ 'சர்டிபிகேட்' படிப்பை பட்டப் படிப்பாக மாற்றுவதென்றும் முடிவாகியது. பட்டப் படிப்பில் விவசாயம், கால்நடை, விஞ்ஞானம் இரு பாடங்களும் முக்கியமாக அமையும்.

## பஞ்சாயத்துக்களிடமிருந்து ஆரம்பக் கல்வியை சர்க்கார் மேற்கொள்ளாது

### சட்டமன்றத்தில் முதலமைச்சர் தகவல்

சென்னை, மார்ச். 15—ஆரம்பக் கல்வி நிர்வாகத்தை பஞ்சாயத்துகளிடமிருந்து மேற்கொள்ளும் உத்தேசம் சர்க்காருக்கு இல்லை என்று முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் இன்று ராஜ்ய சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

ஆரம்பக் கல்வி நிர்வாகத்தை சர்க்காரே மேற்கொள்ள வேண்டுமென்று கோரிக்கைகள் வந்திருப்பது உண்மையே என்றும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன்கள் தங்களை சரிவர நடத்துவதில்லை என்று சில ஆசிரியர்கள் கருதுவது இதற்குக் காரணமாயிருக்கலாம் என்றும் அவர் சொன்னார். ஆனால், இந்தப் புகார் சரிதான் என்று தாம் கூறவில்லை என்றார்.

சிறையிலிருக்கையிலே இரண்டுபேர் பஞ்சாயத்து தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எஸ். எம். ஏ. மஜீத் மற்றொரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் கூறினார். ஒருவர் விஷயத்தில் உபதலைவரே பஞ்சாயத்து நிர்வாகத்தைக் கவனித்து வருவதாகவும், இன்னொருவர் விஷயத்தில் அவருடைய பிரதிநிதி கவனித்து வருவதாகவும் மந்திரி சொன்னார்.

# ஒழுங்கும் கட்டுப்பாடும்

திரு. எஸ். மீனாட்சிசுந்தர முதலியார், பி.ஏ., எல்.டி.
(முதல்வர். கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு)

ஒரு மணிக்கு 24,000 மைல் வேகத்தில் வான வெளியில் செவ்வாய்க் கிரகத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் விண்வெளிக்கோள் — மாரினர் 4— தான் செல்ல வேண்டிய பாதையைவிட்டு விலகிச் செல்ல ஆரம்பித்தவுடனே, அமெரிக்க விண்வெளி விஞ்ஞானிகள் பூமியிலிருந்து அதற்குக் கட்டளை பிறப்பித்து, சரியான பாதைக்குத் திருப்பிவிட்டனர். உயிரற்ற அக்கோள் உத்தரவுக்கு அடங்கி, இப்போது செவ்வாயை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருக்கின்றது. 1966 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அது செவ்வாய்க் கிரகத்திற்கு 8000 மைல் சமீபமாகச் சென்று, படங்கள் பிடித்து, பூமிக்கு அனுப்பும். அதை நன்றெடுத்த பெரியவர்களுக்கு அடங்காமல் தன்னிச்சை போல் செல்லத் தொடங்கிவிட்டால், அதைப் படைத்தவர்களுக்கு மன வேதனை; கோடிக் கணக்கான பணச் செலவு; பல ஆண்டுகள் பட்டபாடெல்லாம் வீண்.

சூரியனும், சந்திரனும், கோள்களும் ஒரு நியதிக்கு உட்பட்டுச் செல்லவேண்டிய பாதையை விட்டு விலகாமல் செல்லுவதாலேயே இப் பிரபஞ்சம் அழியாமல் இருக்கின்றது. ஒன்பது கோடி மைல்களுக்கு அப்பால் சுடர் விட்டு எரியும் சூரியன் நம் மீது அன்பு கொண்டு, நம்மைப் பார்க்க எண்ணி, பூமிக்கு அருகில் வரத் தொடங்கினால், நமது கதி என்னவாகும்? கனவேகத்தில் தானும் உருண்டுகொண்டு சூரியனையும் சுற்றி வரும் நம் பூமி ஒரு மணி நேரம் சுழலாமலும் சுற்றாமலும் ஓய்வெடுத்துக்கொண்டால், நாம் எங்கு இருப்போம்? அறிவற்ற சடப் பொருள்கள்-அணு முதல் அண்டகோளங்கள் வரை-ஒரு பெரும் சட்டத்திற்கு உட்பட்டு, நியதிக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றன. நாம் புரிந்துகொள்ள முடியாத ஒரு பெரும் சக்தி இவ்வண்ட பிண்ட சராசரங்களை இயக்குகின்றது என்ற பேருண்மையை இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞானிகள் தங்கு தடையின்றி ஒப்புக்கொள்கின்றனர்.

இஃது இவ்வாறு இருக்க, ஆறு அறிவு படைத்த மக்கள் மனம் போனபடி நடக்கத் தொடங்கினால், சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் அடங்காமல் தான்தோன்றித் தனமாக நடந்தால் நாட்டில் நல்லாட்சி நடக்குமா? சமுதாயத்தில் அமைதி நிலவுமா? தனி

மனிதன்தான் சந்தோஷமாக வாழ முடியுமா?

ஒரு ஸ்தாபனத்தின் விதிகளுக்கோ, நாட்டின் சட்டங்களுக்கோ கட்டுப்பட்டு நடவாவிடில் தண்டிக்கப்படுவோம் என்ற பயத்தால் அடங்கி நடப்பவன் மதிக்கத்தக்க மனிதனல்ல. தன் மனச்சாட்சிக்கு மதிப்புக் கொடுத்து, தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கொள்பவன்தான் நன்மகன்.

நமது நாடு விடுதலை பெற்று ஜனநாயக ஆட்சி நடைபெற்று வரும் இக் காலத்தில் எல்லோருக்கும் அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. சர்வாதிகார நாடுகளில் இருப்பது போல பேச்சு உரிமை, கூடும் உரிமை, தொழில் உரிமை முதலியவைகளுக்குக் கட்டுப்பாடில்லை. மக்கள் தத்தம் கடமைகளை உணர்ந்து, தாங்களாக இந்த உரிமைகளுக்கு தாங்களே வரம்பு கட்டிக்கொள்ள வேண்டும் என்பது தான் ஜனநாயகத் தத்துவம். கட்டுப்பாட்டை அடிமைத்தனம் என்றும், கட்டுப்பாடின்மைமையைச் சுதந்திரம் என்றும் நம்மில் பலர் எண்ணத் தொடங்கிவிட்டனர். நமக்கு வழிகாட்ட வேண்டிய பெரியவர்களே இந்த விஷயத்தில் அடக்கமின்றி நடந்துகொள்வது நம் நாட்டுக்கே அகௌரவத்தைத் தேடித் தருகின்றது. இளைஞர்களுக்கும் சரியான முன்மாதிரியும் அல்ல. பல ஸ்தாபனங்களிலும், நாட்டிலும் அமைதியின்மைக்கும், சண்டை சச்சரவிற்கும் காரணம் சுதந்திரத்தின் உட்கிடக்கை அடக்கமும் கட்டுப்பாடும் என்பதை மறந்துவிடுவதேயாகும்.

1964-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் டில்லியில் கூடிய முதலமைச்சர்கள் மகாநாட்டில் விவாதிக்கப்பட்ட முக்கிய விஷயம் மாணவர்களிடையே காணப்படும் கட்டுப்பாடின்மையைப் பற்றியதாகும். வருங்காலத்தில் இந்நாட்டைக் காக்க வேண்டியவர்களும் கட்டுப்பாடுகளையும் சட்டங்களையும் மீறித் தங்கள் இஷ்டம் போல் நடந்துகொண்டால், இந் நாட்டின் வருங்காலம் எப்படி இருக்குமோ என்று கவலை தெரிவித்தனர். இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

1963-இல் மாணவர்கள் 119 முறை வேலை நிறுத்தம் செய்தனர். 1964 இல் நவம்பர் முடிய அவர்கள் வேலை நிறுத்த எண்ணிக்கை 261. கடந்த ஏழு ஆண்டுகளில் மாணவர்கள் ஈடுபட்ட மொத்த வேலை நிறுத்தம் 1237. இவைகளில் 54 பல்கலைக்கழகங்களிலும், 670 கல்லூரிகளிலும், 513 உயர்நிலைப் பள்ளிகளிலும் நடைபெற்றன. நாட்டின் நலனை விரும்பும் அனைவருக்கும் இது மன வேதனையைத் தானே தருகிறது.

பெற்றோர்க்கு அடங்கி நடத்தல், பெரியோர் வார்த்தைக்குக் கீழ்ப்படிதல், ஆசிரியர்களுக்கு அடங்கி நடத்தல் இவைகள் எல்லாம் ஏதோ அடிமைத்தனத்தின்

அறிகுறியெனச் சிலர் தவருக எண்ணுகின்றனர். கிரிக்கட், ஹாக்கி, உதைபந்து முதலிய விளையாட்டுகள் ஒவ்வொன்றுக்கும் சில விதிகள் இருக்கின்றன. இவ் விதிகளை மீறும்போது, foul, penalty என்று தண்டனை விதிக்கப்படுகின்றது. விளையாட்டு விதிகள் ஒழுங்காகப் பின்பற்றப்படுகின்றனவா என்று கவனிப்பதற்கென்றே நடுவர்கள் (umpire) நியமிக்கப்படுகின்றனர்.

வாழ்க்கையிலும் புறச்சட்டம் அகச்சட்டங்களுக்கு மதிப்புக் கொடுத்து வாழ்பவன் தான் பேரும் புகழும் பெருவாழ்வும் பெறுகிருன். சட்டத்தை மீறும் போது தண்டிக்கப்படுவதில் என்ன தப்பு? அப்படித் தண்டிக்காவிட்டால் நாட்டில் அமைதி நிலவுமா? பெண்கள் தெருவில் நடக்க முடியுமா? நாம் கஷ்டப்பட்டு உழைத்த சம்பாத்தியம் நம்மிடம் இருக்குமா? எப்படி அரசன் ஆட்சி செய்ய வேண்டும் என்று நீதி கூறப் புகுந்த வள்ளுவர் "நல்லவர்களுக்கு அவர்கள் ஏதோ தெரியாமல் செய்த குற்றத்தை எடுத்துச் சொல். அவர்கள் திருந்திவிடுவார்கள்; ஆனால் கயவர்களை நையப் புடைத்துத்தான் திருத்த முடியும்" என்று சொல்லுகிருர்.

சொல்லப் பயன்படுவர் சான்
றோர் கரும்புபோல்;
கொல்லப் பயன்படும் கீழ்.

நிர்வாகத் தலைமை வகிக்கும் ஒவ்வொருவரும் நன்கு கவனிக்க வேண்டிய குறள் இது.

மனம், மொழி, மெய் மூன்றிலும் அடக்கம் வேண்டும். நல்ல எண்ணங்கள் நல்ல பேச்சுக்கும் நற்செயலுக்கும் அடிப்படையாக இருப்பது போலவே, தீய எண்ணங்கள் தீய சொற்களுக்கும் தீய செயல்களுக்கும் வழிகோலும். எனவேதான் "மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்" எனச் சின்னஞ்சிறு வகுப்பில் நமக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது. மனம் கெட்டபிறகுதான் களவும் காமமும் குடியும் கொலையும் பொய்யும் புரட்டும் நிகழ்கின்றன. நல்ல நூல்களைக் கற்பதாலும், நாள்தோறும் கடவுளை வழிபடுவதாலும் நல்லோரோடு நட்புக் கொள்வதாலும் மனம் கெடாமல் இருக்கும். மனம் லகான் இல்லாத குதிரை போல. ஐம் புலன்களின் வழியாக நம்மை இழுத்துக் கொண்டு போகாமல், அறிவைக் கொண்டு அடக்க வேண்டும்.

சென்ற விடத்தாற் செலவிடா
தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு.

எல்லாச் சமயங்களும் மன அடக்கத்தையும் புலனடக்கத்தையும் வலியுறுத்துகின்றன. ஒருவன் எண்ணுகின்ற எண்ணங்கள் அவன் மன அணுக்களை அசைக்க அவ்வலைகள் புறத்திலே உள்ள மன அணுக்களை அசைக்க, அதனால் ஏற்படும் அலைகள் பரவி, பலரைத் தாக்கி, அவர்கள் மனத்திலும் இதே மாதிரி எண்ணங்களை உண்டாக்கும் என்று உளநூல் கூறுகின்றது. எண்ணங்

களுக்கு நிறங்கள் உண்டு. வடிவங்கள் உண்டு; ஆற்றலும் உண்டு என **எண்ணங்களின் உருவங்கள் (Thought Forms)** என்ற நூல் கூறுகின்றது. ஆஸ்திரேலியாக் கண்டத்தின் பூர்வீகக் குடிகள் வேட்டையாட உபயோகிக்கும் பூமராங் என்ற வளைந்த மரக்கட்டை போன்றது மனம். அந்த ஆயுதம் குறித்த மிருகத்தைத் தாக்கிவிட்டு, மீண்டும் எறிந்தவனிடமே திரும்பி வரும். இது போலவே நாம் வெளியே அனுப்பும் எண்ணங்களும் அனுப்புபவர்கள் பால் சென்று, மீண்டும் அனுப்பியவரிடமே வந்து சேரும். நல்ல எண்ணங்கள் நன்மையை விளைத்துவிட்டு, நம்மிடம் வந்து, நமக்கும் நன்மையைக் கொடுக்கும். தீய எண்ணங்களுக்கும் இதே விதி பொருந்தும். "தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்ற பழமொழி இதைத் தான் விளக்குகின்றது. மறந்து கூட பிறனுக்குக் கெடுதியை நினைக்காதே. அப்படி நினைத்தால் அறச்சக்தி கெடுதி விளைக்கும் என்கின்றது குறள்.

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ் சூழும் சூழ்ந்தவன் கேடு.

எனவே நல்ல எண்ணங்களையே எண்ண வேண்டும்.

செல்வச் செருக்கு, கல்விச் செருக்கு என இரண்டு விதமான கர்வம் உண்டு. செல்வச் செருக்கை விட கல்விச் செருக்கே கெட்டது. செல்வம் ஒருவனை விட்டுப் போய்விட்டால், அதனால் ஏற்படும் கர்வமும் போய்விடும். கல்வி அழியாப் பொருளாகையால், அது பற்றி வரும் கர்வமும் அழியாது. அதனால் தான் கற்றறிந்து அடங்குதல் வலியுறுத்தப்படுகின்றது.

நாவினால் நாம் நான்கு குற்றங்களைப் புரிகின்றோம்; பொய் பேசுதல், கடுஞ்சொல் பேசுதல், பயனில பேசுதல், புறங் கூறுதல். சிறு வயதிலிருந்தே நாம் நாவடக்கத்தைக் கற்றுக் கொள்ளவேண்டும். மகாத்மாவின் பெருமைக்கு முக்கிய காரணம் அவரிடம் இருந்த நாவடக்கம் என்பதை நாம் நன்கு அறிவோம். 'யாகாவா ராயினும் நாகாக்க' என்பது குறளின் கட்டளை.

மகாத்மா காந்தி தன்னுடைய குருமார்கள் என்று சொல்லி வந்த மூன்று குரங்கு பொம்மைகளைப் பற்றி நாம் அறிவோம். பார்க்கத் தகாதவற்றைப் பார்க்காதே என்று சொல்வது போல் ஒரு குரங்கு கண்களை மூடிக் கொண்டிருக்கின்றது. கேட்கத் தகாதவற்றைக் கேளாதே என வலியுறுத்த ஒரு குரங்கு காதுகளைப் பொத்திக் கொண்டிருக்கின்றது. பேசத் தகாதவற்றைப் பேசாதே என்று காட்ட ஒரு குரங்கு வாயை மூடிக்கொண்டிருக்கின்றது. புலனடக்கத்திற்கு இதை விடச் சிறந்த உதாரணம்

என்ன வேண்டும்? பிரமசரியத்தைப் பற்றி மகாத்மா காந்தி எழுதியுள்ள நூலை ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் படிக்கும் மாணவ மாணவியர் கண்டிப்பாகப் படிக்க வேண்டும்.

அடக்கத்தோடு வைத்து எண்ணத் தக்க மற்றொரு பண்பு பொறுமை. இப்பண்பும் மாணாக்கர்களிடம் குறைந்து வருவது வருந்தத் தக்கது.

'வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தையும் காட்டு' என்றும், 'ஒருவன் உனக்குத் தீங்கு இழைத்தால் ஏழு முறை மட்டுமல்ல, எழுபது ஏழு முறை மன்னித்து விடு' என்பதும் கிறிஸ்துவப் பெருமானின் உபதேசம். தனிமனிதர்களுக்குள் சமாதானமும் சாந்தியும், நாடுகளுக்குள் நல்லுறவும் சமாதானமும் பொறையுடைமையாலே தான் ஏற்படும். இவ்வொரு குணம் இல்லாததால் பெரும் போர்கள் நிகழ்கின்றன. நாட்டின் விடுதலைப் போராட்டம் நடத்திய போது நம் தலைவர்கள் எத்தனை முறை சிறை சென்றனர். அஹிம்சை என்பது பொறையின் மேல் கட்டப்பட்ட கோவில்.

ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.

பெண்களுக்குப் பொறுமையை விடச் சிறந்த பூஷணம் வேறொன்றும் இல்லை. சிறிது சகிப்புத் தன்மை குடும்பத்தில் சாந்தி நிலவச் செய்யும். "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்" என்று வார்த்தைக்கு வார்த்தை எதிர்த்துப் பேசுவதால் எவ்வளவோ குடும்பங்கள் சிதறுண்டு போயிருக்கின்றன. "பொறுத்தார்" என்பது எல்லோருக்கும் பொதுவான ஒரு பழமொழி.

மாணாக்கர்கள் அடக்கமுடைமையையும் பொறையுடைமையையும் இரண்டு கண்கள் போல் காக்கக்கடவர்கள். நாட்டின் தலைவராக வர விரும்புவோர் இவ்விரண்டு குணங்களையும் பொன்னே போல் போற்றி வளர்க்க வேண்டும்.

---

சென்ற டிசம்பர் மாதம் 15-ஆம் தேதி எழுதப் பெற்றது இக்கட்டுரை.

(நல்வழி)

# பஞ்சம், பற்றாக்குறை மனப்பான்மை விடுபட வேண்டும்

## போதும் போதும் என்ற அளவுக்குத் தேவையான பொருள்கள் குவியவேண்டும்

**பம்பாய், பிப். 25—இந்தியா இப்போது பல சங்கடங்களுக்குள்ளாகியிருக்கிற தென்றாலும், பீதியடையும் படியாக ஒன்றும் இல்லை என்று பிரபல தொழிலதிபர் திரு. ஜி. டி. பிர்லா இன்று கூறினார். அது இல்லை; இது இல்லை; ஆகையால், அதைக் குறைக்க வேண்டும், இதைக் குறைக்க வேண்டும் என்ற மனப்பான்மையும் மாற வேண்டுமென்று வற்புறுத்தினார்.**

*இந்திய வர்த்தக சங்கத்தின் 58வது வருஷாந்திரக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து திரு. பிர்லா பேசுகையில், வர்த்தக சமூகத்தினர் மத்திய சர்க்காருக்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்றும், இன்றுள்ள பற்றாக்குறைகள், சிக்கல்களிலிருந்து நாட்டை சுபிட்சப் பாதைக்குக் கொண்டு வர, என்ன செய்யலா மென்பதைப் பற்றி நிர்வாகிகளுடன் விவாதம் நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.*

*வெளிநாட்டு உதவிகள் மீண்டும் வர ஆரம்பித்தால் கூட, மார்ச் அக்டோபர் மாதங்களுக்கிடையே நாட்டின் பொருளாதாரம் மேற்கொண்டு மோசமாகக் கூடும் என்று திரு. பிர்லா எச்சரித்தார்.*

### விலைவாசிகள் பிரச்னை

*சர்க்காருடன் வர்த்தக சமூகத்தினர் எந்தெந்த விஷயங்களைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்றும் திரு பிர்லா ஒரு ஜாப்தா கொடுத்தார்.*

*1. விலைவாசிகள் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் ஸ்திரப்படுத்தப்பட வேண்டும். ஆனால், இதற்கு உற்பத்தி பெருக வேண்டும். முக்கியமாக, உணவு தானியங்கள், சர்க்கரை, துணி, சமையலுக்குத் தேவையான எண்ணெய் வகைகளின் உற்பத்தி பெருகினால்தான் விலைகளைக் கட்டுப்படுத்த முடியும்.*

*இந்த அத்யாவசியப் பொருள்கள் போதும் போதும் என்ற அளவுக்கு ஏராளமாக மார்க்கெட்டில் வந்து குவியக் கூடிய விதத்தில் சர்க்காரின் வரிக் கொள்கைகளும் நிதிக் கொள்கைகளும் வகுக்கப்பட வேண்டும். கடன் வசதிகளைக் கட்டுப்படுத்துவது, எல்லோரும் ஒரே*

மாதிரியான சில முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பன போன்ற அர்த்தமில்லாத நிர்ப்பந்தங்களால் விலைகளைக் கட்டுப்படுத்த முடியாது.

## உணவு உற்பத்தி

2. உணவு தானிய உற்பத்திக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். இதற்கு நல்ல விவசாயக் கருவிகள், நல்ல விதைகள், இன்னும் அதிகப் பாசன வசதிகள், பெரும் அளவில் உர உற்பத்தி ஆகியவைகள் அவசிய மாகும்.

சென்ற காலத்தில் இவற்றை உற்பத்தி செய்ய நாம் தவறி விட்டோம். மேலும் தாமதிப்பது விபரீதத்தில் முடியும். இவற்றைப் பெரும் அளவில் உற்பத்தி செய்வதற்கு நம்மிடம் ஏதாவது திட்டமிருக்கிறதா வென்று நிர்வாகிகள் தம்மைத் தாமே கேட்டுக் கொள்ள வேண்டும். இதற்கென்று ஒரு திட்டத்தைத் தயாரித்து, என்ன கிடைக்கும், எப்போது கிடைக்கும் என்பதை மக்களிடம் சொல்ல வேண்டும்.

## தனியார் துறை பங்கு

3. கனரக இயந்திரங்கள், இறக்குமதி செய்யப்படும் உதிரிப்பு களுக்கான மாற்றுகள் முதலியவைகளை இங்கேயே உற்பத்தி செய்வதற்கு விசேஷ தூண்டுதல்களை அளிக்க வேண்டும். (இதற்காக 18 மாதங்களுக்கு முன்பு சர்க்காருக்கு அனுப்பப்பட்ட ஒரு திட்டம் இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கிறது.)

4. மேற்கூறிய உற்பத்திகளில் தனியார் துறை முக்கிய பங்கெடுத்துக் கொள்ளமுடியும். ஆனால் இதற்கெல்லாம் எப்படி மூலதனம் திரட்டுவது? மூலதன மார்க்கெட் இப்போது அனேகமாக உயிரற்ற நிலையில் தேங்கிக் கிடக்கிறது. அதை எப்படி உயிர்ப்பிப்பது என்பதைப்பற்றி சர்க்கார் சிந்தனை செய்ய வேண்டும்.

5. அவசர உணர்ச்சியுடனும், உருவான விதத்திலும் காரியங்கள் செய்யும் மனப்பான்மை நிர்வாகிகளுக்கு ஏற்பட வேண்டும். டில்லியில் இப்போது அத்தகைய மனப்பான்மை காணப்படவில்லை. ஒரு காரியத்தை செய்யாமல் இருப்பதற்கு வழி என்ன என்றே தேடிக் கொண்டிருக்கிறார்கள். இது மாற வேண்டும்.

6. நமது வெளிநாட்டு இருப்புகளைப் பலப்படுத்துவதற்கு வழி வகைகள் செய்ய வேண்டும். இதனால் வெளிநாட்டினர் இங்கு வந்து முதலீடு செய்வதற்கு ஊக்கமளிக்க வேண்டும். நமது கொள்கைகளை மறுபரிசீலனை செய்தால்தான் இது சாத்தியமாயிருக்கும்.

7. வெளிநாட்டுச் செலாவணி சம்பாதிக்க வேண்டுமானால், நமது ஏற்றுமதிகளைப் பெருக்க வேண்டும். இதற்கு உணர்ச்சி பூர்வமான வேண்டுகோள்கள் மட்டும் போதாது. ஏற்றுமதிகளுக்கு அளிக்கும் தூண்டுதல்கள் தெளிவாகவும், கைமேல்

கைப்பவைகளாகவும இருக்க வேண்டும்.

## மனப்பான்மை மாற வேண்டும்

8. பஞ்சம், பற்றுக்குறை என்ற மனோபாவத்துடன் காரியங்கள் செய்வது மாற வேண்டும். பஞ்சம், பற்றுக்குறை மனோபாவம் காரணமாகத்தான் கண்ட்ரோல்கள், ஊழல்கள் தலையெடுக்க ஆரம்பித்தன.

சில பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவை கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. உற்பத்தியைக் குறைப்பதென்ற எண்ணமே ஒரு குற்றமாகும். உற்பத்தி பெருகினால் தான் விலைகள் இறங்கும். உண்மையான உற்பத்தியாளருக்கும் நன்மை ஏற்படும்.

9. வர்த்தக சமூகத்தினரும் சர்க்காரும் ஒருவரை யொருவர் இன்னும் நன்குபுரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். நிர்வாகத்தினர் தாக்கீதுகள், உத்தரவுகள் பிறப்பிப்பதை மாற்றிக் கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக சம்பந்தப்பட்டவர்களைக் கலந்தாலோசித்துக் கொண்டும், பரஸ்பர அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டும் காரியங்கள் செய்ய வேண்டும்.

சர்க்காரைக் குறை கூறுவதும், கண்டிப்பதும் சுலபம். ஆனால், இப்போதுள்ள நிலைமையில் இது தான் சிறந்த சர்க்கார். இது ஸ்திரத்தன்மை வாய்ந்தது. பெரும்பாலோரின் ஆதரவைப் பெற்றது. இது வேண்டாம் என்றால் கம்யூனிஸ்ட் ஆட்சி தான் வரும். அது இன்னும் மோசமாயிருக்கும். ஆகையால், இந்தச் சர்க்காருக்குப் பக்கபலமாயிருக்க வேண்டும். அதனால் உருவான முறையில் குறைகளை எடுத்துக் காட்டி விவாதம் நடத்தக்கூடாதென்று அர்த்தமில்லை. பிரச்னைகளுக்குத் தீர்வுகாண சர்க்காருக்கு யோசனைகள் கூறுவதை வர்த்தக சமூகத்தினர் தமது கடமையாகக் கருதவேண்டும். சர்க்காரும் வர்த்தக சமூகத்தினரும் சமூகத்தின் ஒத்துழைப்பைக் கோர வேண்டும்.

இன்று நாட்டின் முன்புள்ள பிரச்னைகளுக்குச் சுலபமாகத் தீர்வு கண்டு விடமுடியாது. ஜனநாயகம் வேரூன்றியுள்ள இந்தியாவில் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது சர்க்காரின் பொறுப்பு மட்டுமல்ல. பிரச்னைகள் எவ்வளவு பெரியதாயிருந்தாலும் பீதியடையும்படியாக ஒன்றுமில்லை.

திட்டமிடுதலில் ஏற்பட்ட தவறுகள், அவற்றை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தவறுகள், சித்தாந்த ரீதியான நடைமுறைகள் ஆகியவைகளே இன்று நம்முடைய பெரும்பாலான தொல்லைகளுக்குக் காரணமாகும். இன்னும் சற்று விவேகத்துடன் நடந்து கொண்டிருந்தால், மனிதனின் மனம் எப்படி வேலை

செய்யக்கூடும் என்பதை உணர்ந்திருந்தால் இதையெல்லாம் தவிர்த்திருக்க முடியும். அதிகம் சாதித்திருக்கவும் முடியும்.

எவ்வளவு பெரியவர்களாயிருந்தாலும், நிபுணர்களாயிருந்தாலும், அனுபவமில்லாத சிலரிடம் எல்லாப் பொறுப்புகளையும் கொடுத்திருக்கக் கூடாது. ஒரு காரியத்தை இயக்கும் பொறுப்பை ஒரு சிலரிட மின்றிப் பலரிடம் கொடுத்திருந்தால், உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்கமளித்திருப்போம். ஆனால், நாம் அப்படிச் செய்யாததின் பலனை இப்போது அனுபவிக்கிறோம். சுதந்திரம் பெற்று 18 வருஷங்களாகியும் இன்னும் உணவு தானியங்களை இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது.

பாகிஸ்தானுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பொருளாதார அபிவிருத்தி விஷயத்தில் இந்தியாவின் முன்னேற்றம் குறைவுதான்.

## அபாய எச்சரிக்கை

நமது பிரதம மந்திரி யு. எஸ். ஜனாதிபதியைப் பார்த்துப் பேசிய பிறகு வெளிநாட்டு உதவி மீண்டும் வர ஆரம்பிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி வர ஆரம்பித்தாலும், மார்ச் - அக்டோபர் மாதங்களில் நமது பொருளாதாரம் நெருக்கடியான நிலைமையில் இருக்கும். உதவி நிறுத்தப்பட்டிருந்த காலத்தில் ஏற்பட்ட தேக்கம் அந்தக் காலத்தில் நமது நடவடிக்கைகளைப் பாதிக்கும்.

இந்தியாவில் வரி விதிப்பு மிகக் கடுமையாக இருக்கிறது. ஆனால், நமது பந்தோபஸ்துக்கு ஆபத்து, நாட்டில் பஞ்சம் என்ற சூழ்நிலையில் வரிச்சுமை கணிசமான அளவில் குறையுமென்று எதிர்பார்க்க முடியாது. இருப்பதைப் பார்த்தால் பட்ஜெட்டில் துண்டு விழும் தொகை பெரும் அளவில் இருக்குமென்று தோன்றுகிறது.

உற்பத்திப் பெருக்கத்திற்கு கண்ட்ரோல்கள் பெரிய தடைகளாக இருக்கின்றன. துரிதமான அபிவிருத்தி ஏற்பட வேண்டுமானால், லைசென்ஸ் முறை போக வேண்டுமென்பதை வர்த்தக சமூகத்தினர் சர்க்காருக்கு உணர்த்த வேண்டும். வெளி நாட்டுச் செலாவணி தேவைப்படாத தொழில்களுக்கு லைசென்ஸ் முறை அவசியமில்லை யென்று காங்கிரஸ் அக்ராசனர் கூறியது முற்றிலும் சரி.

## காலத்திற்கு ஒவ்வாத ‘ஜனநாயக சோஷலிஸம்’

காலத்திற்கு ஒவ்வாத ஒரு கோஷத்தை வைத்துக் கொண்டு

"ஆரம்பக் கல்வி"
ஆபீஸ்.
94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.


நாம் சங்கடப்படுகிறோம். "ஜனநாயக சோஷலிஸம்." என்று பேசிக் கொண்டிருப்பதில் எதுவும் அர்த்தமிருப்பதாகத் தெரியவில்லை. ஜனநாயக சோஷலிஸம் என்றால் என்ன என்றே யாருக்கும் தெரிந்திருப்பதாகத் தோன்றவில்லை. மக்களுக்குத் தேவையான பொருள்கள் இன்னும் அதிகமாகக் கிடைக்க வேண்டும். அவர்கள் ஆரோக்கியமாயிருக்க வேண்டும்; கல்வி வசதிகள் பெருகவேண்டும்; வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்று திரு. நேரு விரும்பினார்.

சோஷலிஸ்ட் நாடுகளிலேயே "ஜனநாயக சோஷலிஸம்" என்ற கோஷத்திற்கு மதிப்பில்லாமற் போய்க்கொண்டிருக்கிறது. பெரும்பாலான சோஷலிஸ்ட் நாடுகள் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றன என்று திரு. பிர்லா கூறினார்.

தனியார் துறைக்கும், வர்த்தகத் துறையினருக்கும் ஊக்கமும், உதவியும் அளிக்கப்படுமென்று பிரதம மந்திரியே வாக்களித்திருப்பதை எடுத்துக் காட்டி, இது தைரியமளிப்பதாயிருக்கிற தென்றார். ஆனால், காலத்தின் தேவைகளுக் கேற்ப வர்த்தகர்களும், தமது முறைகளை மாற்றிக் கொண்டால் தான் பயன் பெற முடியுமென்றார்.

---

# புதிய மந்திரி சபை

"நஜன்"

சுதந்திர இந்தியாவின் மூன்றாவது பிரதம மந்திரியாக திருமதி இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இந்தியாவின் முதல் ஸ்திரி பிரதமர் என்பது மட்டுமின்றி, அதிக வயதும் ஆகாதவர். இவரது மந்திரி சபையில் சஞ்சீவய்யா ஒருவரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் இவரைவிட வயது அதிகமானவர்களே. நேருஜியுடன் இருந்து, நிர்வாகத்தின் போக்கைக் கவனித்துள்ளவர். அயல் நாட்டுத் தலைவர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டவர்; சமூக சேவையிலும், கலாசார அபிவிருத்தியிலும் விசேஷ அக்கறை காட்டியுள்ளவர்; குடியரசு தின விழாவில் நாடோடி நடனங்கள், தேச அபிவிருத்தியைக் காட்டும் ரதக் காட்சிகள் முதலியவை சேர்க்கப்பட்டதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் இந்திரா காந்திதான். மலையேறுதல், பட்சிகளின் போக்கைக் கவனித்தல், நீந்துதல் ஆகியவைகளில் இவருக்கு விசேஷ நாட்டம் உண்டு.

நேருஜி காலமான பின்பு லால் பகதூர் மந்திரிசபையில் செய்தித் துறை மந்திரியாக இந்திரா காந்தி சேர்த்துக் கொள்ளப்பட்டார். அணுசக்தி இலாகா தவிர வேறு இலாகாக்களை இவர் இப்போது வைத்துக்கொள்ளவில்லை. இது, கொள்கைகள் நிர்ணய விஷயமாக இவர் அதிக கவனம் செலுத்த உதவும். இவர் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் அக்கிராசனராகப் பதவி வகித்தவர். (பிறந்த தேதி: 19-11-1917).

## குல்ஜாரிலால் நந்தா

இருமுறை "தாற்காலிகப்" பிரதமராகப் பதவி வகிக்க நேர்ந்த நந்தா, இன்றைய மந்திரி சபையில் பிரதமருக்கு அடுத்ததான இரண்டாமவர் பதவியைப் பெற்றதுடன் லோக சபையில் சர்க்கார் கட்சித் தலைவராகவும் நியமிக்கப் பட்டிருக்கிறார். இவர் தொடர்ந்து உள்நாட்டுத் துறையைக் கவனித்து வருவார். தொழிலாளர் நலனில் விசேஷ அக்கறை காட்டி வந்துள்ள இவர் பம்பாய் மாநிலத்தில் தொழில் மந்திரியாக 1950-ல் இடம் பெற்றார். பின்னர், திட்டக் கமிஷனின் உப தலைவராக நியமிக்கப்பட்டு, அதன்பின் மத்திய அரசாங்கத்தில் திட்ட மந்திரியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர். காமராஜ் திட்டத்தினால், நீடித்த காலம் பதவி வகித்துள்ள மந்திரிகள் பலர்

வெளியேறிய சமயம், இவர் மந்திரிசபையில் நேருஜிக்கு அடுத்தபடியான ஸ்தானத்தைப் பெற்ருர். லால்பகதூரிடம் மொரார்ஜி தேசாய் தமக்கு மந்திரிசபையில் இரண்டாமவர் ஸ்தானம் வேண்டும் என்று வற்புறுத்தியபோது,' தாற்காலிகப் பிரதமராக இருந்தவரை மூன்ருவது ஸ்தானத்திற்குத் தள்ள முடியாது. உங்களுக்கே மூன்ருவது ஸ்தானத்தைத் தருகிறேன்' என்று லால்பகதூர் கூறிவிட்டார். நந்தாவுக்கு "இடைக்காலப் பிரதமர்" என்ற பெயர் நிலைத்துவிட்டது. (பிறந்த தேதி: 4-7-1898).

## ஜகஜீவன்ராம்

தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்து மிக உயர்ந்த பதவியை அடைந்தவர் ஜகஜீவன்ராம். இடைக்கால மந்திரிசபை ஏற்பட்டதிலிருந்து, காமராஜ் திட்டம் அமுல்வரை இடைவிடாது மந்திரியாக சேவை செய்தவர். இவர் காசி ஹிந்து சர்வ கலாசாலையில் படிக்கச் சேர்ந்தார். அங்கு தீண்டாமை வேற்றுமைகள் இருந்ததைப் பார்த்து மனம் நொந்து, கல்கத்தா வித்யாசாகர் கல்லூரியில் சேர்ந்து படித்தார். சுபாஷ்சந்திர போஸ், பி. ஸி. ராய், பிரபுல்ல சந்திர கோஷ் ஆகிய வங்கத் தலைவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. காந்திஜியுடனும் இவருக்குச் சில சமயங்கள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டதுண்டு. எனினும் காந்திஜியிடமிருந்து இவர், "புடம் போட்ட தங்கம்" என்ற பாராட்டுரையைப் பெற்றிருக்கிருர். ஹரிஜனங்களுக்குத் தரப்படும் சலுகைகளை மேலும் பத்து வருடகாலத்திற்கு நீடிக்க வேண்டும் என்று இவர் வற்புறுத்தி வந்துள்ளார். (பிறந்த தேதி: 5-4-1908).

## சர்தார் ஸ்வரண்சிங்

மிக்க நிதானமும் திறமையுமுள்ள இவருடைய சேவையை நேருஜியே அறிந்து, சமரஸப் பேச்சுக்களில் பயன்படுத்திக் கொள்ள முயன்றிருக்கிருர். ஆகவே லால்பகதூர் இவரிடம் அயல்நாட்டுத் துறையை ஒப்படைத்ததில் ஆச்சரியம் இல்லை. மத்திய மந்திரி சபையில் பல முக்கிய இலாகாக்களையும் இவர் வகித்திருக்கிருர். சுதந்திரத்துக்கு முன், 1946-இல் பஞ்சாபில் ஏற்பட்ட கிஸர் ஹயத்கான் திவானவின் கலப்பு மந்திரி சபையில் பார்லிமெண்டரி காரியதரிசியாக இவர் பதவி வகித்தார். நாட்டுப் பிரிவினையின்போது, பஞ்சாபின் ஆஸ்திப் பொறுப்புகளை நிர்ணயிக்கும் கமிட்டியில் இவர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். சுதந்திரம் பெற்றபின், கிழக்கு பஞ்சாபின் உள்துறை மந்திரியாக சேவை செய்து, பிறகு மத்திய அரசாங்கத்தில் மந்திரியாக இவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இந்தியா-பாகிஸ்தான் எல்லைத் தகராறு பற்றி நடந்த சமரஸப் பேச்சுகளிலும், இந்திய-சீன

எல்லைத் தகராறு பற்றிய பேச்சுகளிலும் இவர் முக்கிய இடம் பெற்றார். (பிறந்த தேதி: 19-8-1907).

### யஷ்வந்த்ராவ் சவாண்

நாட்டின் பாதுகாப்புப் பொறுப்பு சிவாஜி ஆண்ட வீர மிக்க மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த சவாணிடம் விடப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமே. சுதந்திரப் போரில் நாட்டு மக்களைத் திரட்டி, விடுதலைப் போரில் ஈடுபடுத்திய தளபதிகளில் இவர் ஒருவர்.

ஆகஸ்டு (1942) போராட்டத்தில் சதாரா ஜில்லாவுக்கு முக்கியமான பங்கு உண்டு என்றால், இதற்குக் காரணமானவர் சவாண்தான். தமது பதினறுவது வயதிலேயே இவர் விடுதலை இயக்கத்தில் பங்கு பெற்றார். முன்னாள் பம்பாய் முதல் மந்திரி, காலஞ்சென்ற பி. ஜி. கேருக்கு வலது கை போல் இருந்தவர். ஆரம்பத்தில் புரட்சி வீரர் எம். என். ராயின் சீடராக இருந்தார். ராய் கோஷ்டியினரின் யுத்த ஆதரிப்பு முயற்சிகளைக் கண்டு இவர் ராயிடமிருந்து விலகி விட்டார். பம்பாயில் மொரார்ஜி தேசாய் மந்திரி சபையில் மந்திரியாக சேவை செய்தார். இவர் பம்பாய் முதல் மந்திரியாகப் பணியாற்றியபோது, பம்பாய் நிர்வாகத்தில் சிறந்த பெயர் எடுத்தது. (பிறந்த தேதி 12-3-1914).

### எஸ். கே. பாட்டீல்

காங்கிரஸ் ஸ்தாபனத்தை மிகத் திறமையாக நிர்வகிப்பவர்கள் ஒரு சிலருள், பாட்டீல் ஒருவர். சுதந்திரப் போராட்டங்களில் கலந்து கொண்டு எட்டுத் தடவை சிறைவாசம் அனுபவித்திருக்கிறார். இவர் 20 வருடங்களுக்கு மேலாக பம்பாய் கார்ப்பரேஷனில் கௌன்சிலராகவும், மும்முறை மேயராகவும் பணியாற்றியிருக்கிறார். சுதந்திர பாரதத்தின் முதல் பொதுத் தேர்தல் முதற்கொண்டே இவர் லோகசபை மெம்பராக இருந்து வருகிறார். சினிமா விசாரணைக் கமிட்டியின் தலைவராகப் பணியாற்றி, அத்தொழில் வளம் பெற இவர் பேருதவி செய்திருக்கிறார். 1957-இல் மத்திய அரசாங்க மந்திரியாக ஆன இவர், காமராஜ் திட்டம் காரணமாக ராஜிநாமாச் செய்தார். உணவு இலாகாவை இவர் திறம்பட நிர்வகித்தார். லால்பகதூர் மந்திரி சபை அமைத்த போது, இவர் மீண்டும் மந்திரிசபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். (பிறந்த தேதி: 14-8-1900).

### சி. சுப்பிரமணியம்

கோயமுத்தூர் வக்கீலான இவரை நிர்வாகத்திற்கு ஏற்றவர் என்பதைக் கண்டறிந்தவர் ராஜாஜி. 1952-இல் பதவிப் பிரமாணம் முடிந்த பின்பு, ராஜாஜி சி. சுப்பிரமணியத்தைக் காட்டி, நிருபர்களிடம், "இந்த இளைஞரின் பரந்த தோள்களில் தான் நான் பெரும் பொறுப்பைச் சுமத்தியிருக்கிறேன். என்

நம்பிக்கை வீணுகாது என்பதை இவர் நிரூபிப்பார்'' என்ருர். ராஜாஜி அன்று சொன்னது மிகவும் சரியாகிவிட்டது. சென்னை ராஜ்யத்தின் நிதி மந்திரியாக இருந்தபோதே இவர் நேருஜியின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தார். ஒவ்வொரு காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திலும் அயல்நாட்டு விவகாரத் தீர்மானத்தின்மீது நேருஜிக்கு அடுத்தபடியாகப் பேசுவது இவர் தான். பாரத மந்திரி சபையில் இரும்பு-உருக்குத் துறை மந்திரியாக இருந்தபோது, அத்தொழில் வளம் பெற இவர் வழிவகுத்தார்.

மிக்க கஷ்டமான உணவுத் துறையை லால்பகதூர் இவரிடம் ஒப்படைத்தார். இவர், உற்பத்தி பெருக, உணவு விவசாய இலாகாவுடன் சமுதாய நலக் கூட்டுறவு இலாகாவும் ஒருவர் வசமே இருக்க வேண்டும் என்று வற்புறுத்திஞர். இந்திரா காந்தி இந்த யோசனைப் படியே, அவ்விரண்டு இலாகாக்களேயும் இணைத்து, இவரிடம் ஒப்படைத்திருக்கிருர். தமிழில் நன்ருகப் பேசி எழுதவும் கூடியவர் சி. சுப்பிரமணியம். (பிறந்த தேதி: 30-1-1910).

## சத்திய நாராயண ஸின்ஹா

பார்லிமெண்டரி விவகாரங்களில் மூழ்கி எழுந்தவர் சத்ய நாராயண சின்ஹா. சட்டசபைத் துறையில் நீண்டகால அனுபவம் பெற்ற இவருக்குத் தெரியாத அரசியல் நுணுக்கங்களோ அரசியல் வாதிகளோ இல்லை. இவர் 1952-இல் டில்லிக்கு வந்தவர். மிகவும் அனுபவம் வாய்ந்த கட்சிக் 'கொறடா' இவர்; சம்ஸ்கிருதத்தில் தேர்ந்த பண்டிதர். (பிறந்தது 1900-இல்)

## எம். சி. சாக்ளா

சட்ட அறிஞர், ஆசிரியர், நீதிபதி, ராஜதந்திரி, வெளி நாட்டில் தூதர், கல்வி மந்திரி ஆகிய பல பதவிகளைத் திறம்பட வகித்துள்ளவர் சாக்ளா. பம்பாயிலும், பிரிட்டனில் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலும் கல்வி கற்ற இவர், 1927-ல் சட்டக் கல்லூரியில் ஒரு ஆசிரியராக வாழ்க்கையைத் துவக்கிஞர். புகழ் பெற்ற ஜின்னவிடம் ஜூனியராக சட்டத் துறையில் விளங்கிஞர். 1941-இல் பம்பாய் ஹைகோர்ட்டின் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். தென் ஆப்பிரிக்க இந்தியர்களின் நிலைமை பற்றிவாதிக்க 1946-இல் இவர் ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்தியப் பிரதிநிதியாக அனுப்பப்பட்டார். 1947-இல் பம்பாய் ஹைகோர்ட்டின் பிரதம நீதிபதியாக நியமனம் பெற்று, 11 வருடகாலம் அப்பதவி வகித்தார். முந்திரா விவகாரக் கமிஷன் தலைவராக நியமிக்கப்பட்ட இவரது தீர்ப்பின் விளைவாக, டி. டி. கிருஷ்ணமாச்சாரி அப்போது நிதி மந்திரி பதவியிலிருந்து விலக நேரிட்டது.

1958 முதல் 1961 வரை இவர் அமெரிக்காவில் இந்திய

தூதராக இருந்து, இரு நாடு களுக்குமிடையே நல்லுறவு பலப்பட உதவினர். 1962-இல் பிரிட்டனில் இந்திய ஹைகமிஷனர் பதவி வகித்தார். (பிறந்த தேதி: 30-9-1900).

**நீலம் சஞ்சீவ ரெட்டி**

சென்னை ராஜ்யத்தில் மதுவிலக்கு மந்திரியாக இருந்து, பின்னர், ஆந்திரத்தில் பிரதம மந்திரியாகி, காங்கிரஸின் அக்கிராசனர் பதவி வகித்து, பிறகு மத்திய மந்திரிசபையில் இடம் பெற்றவர் சஞ்சீவ ரெட்டி. "எந்தப் பதவியிலும் நான் இரண்டு வருடத்திற்கு மேல் இருப்பதில்லை" என்று அவரே ஹாஸ்யமாகக் கூறுவதுண்டு. மந்திரி பதவி அவரை விட்டு நீங்காமலிருந்த போதிலும், இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை அவருடைய இலாகாக்கள் மாறுகின்றன. இவருடைய உறவினர்கள் மிகவும் செல்வாக்கு மிக்க கம்யூனிஸ்டுகள். அவர்களையும் எதிர்த்து இவர் காங்கிரஸ் வாதியாகவே விளங்கி வருகிறார்.

ஆந்திராவில் இவர் சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போதும், மூத்த காங்கிரஸ்காரரான திரு. பிரகாசத்தை முதல் மந்திரியாக்கி, அவருக்குக் கீழ் பணி புரிந்தார். (பிறந்த தேதி: 16-5-1913).

**திரு. டி. சஞ்சீவய்யா**

நாடு சுதந்தரம் அடைந்து இரு வருடங்கள் கழித்துத்தான் இவர் காங்கிரசிலேயே சேர்ந்தார். காந்திஜியை இவர் நேரில் பார்த்ததில்லை. அப்படிப்பட்டவர் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது ஆச்சரியம் தான். இதை விட அதிசயம் என்னவென்றால் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொள்ள டில்லிபோய்ச் சேரும்வரை சஞ்சீவய்யாவுக்கே இவ்விஷயம் தெரியாது. இவரை காங்கிரஸ் அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்க மிகவும் பாடுபட்டவர் இந்திரா காந்தியே. காங்கிரஸ் அக்கிராசனராகப் பதவி பெற்ற முதல் ஹரிஜனத் தலைவர் சஞ்சீவய்யாதான்.

1952-இல் ராஜாஜி சென்னையில் மந்திரிசபை அமைத்த போது, சஞ்சீவய்யாவை ஒரு மந்திரியாக நியமித்தார். பின்னர், ஆந்திரத்தில் பிரகாசம் அமைத்த மந்திரி சபையில் பணியாற்றி விட்டு, இவர் ஆந்திர முதல் மந்திரியாகி, சிறந்த நிர்வாகி என்ற பெயரும் எடுத்தார். காங்கிரஸ் அக்கிராசனர் பதவி வகித்த பின், நேருஜி அவரைத் தமது மந்திரி சபையில் சேர்த்துக் கொண்டார். (பிறந்த தேதி: 14-2-1921).

**சச்சீந்திர சௌத்ரி**

டி. டி. கே. சமீபத்தில் ராஜினாமாச் செய்தவுடன் அவர் வகித்த நிதிமந்திரிப்பதவிக்கு நியமிக்கப்பட்டவர் வங்காளத்தைச் சேர்ந்த சச்சீந்திர சௌத்ரி. பிரபல பாரிஸ்ட

ரான இவர், கம்பெனி சட்டம் விஷயங்களில் நிபுணர். இவரது நியமனத்தை டி. டி. கே. யே வரவேற்றிருக்கிறார். நிதி விஷயங்களில் இவர். டி. டி. கே.க்கு ஆலோசகராகவும் இருந்திருக்கிறார். (பிறந்த தேதி: 24-2-1903).

## மனுபாய் ஷா

குஜராத்தில் சௌராஷ்டிரா வைச் சேர்ந்த இவர் ஏற்றுமதி வர்த்தகத்துறையை மிகக் கவனமாகக் கண் காணித்து வருகிறார். ராஜாங்க மந்திரியாக இருந்து வரும் தமக்கு ஏன் "காபினெட்" மந்திரி அந்தஸ்து அளிக்கக் கூடாது என்று நேருஜியினிடமே சண்டை போட்டவர். இந்திரா காந்தி இதை மனதில் வைத்துக் கொண்டு, இவருக்குப் பதவி உயர்வு அளித்திருக்கிறார். முன்னாள் சௌராஷ்டிர ராஜ்யத்தில் இவர் மந்திரியாக இருந்தவர். 1957-இல் இவர் லோக் சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர். அப்போது இவர் கைத்தொழில் துறையின் ராஜாங்க மந்திரியாக நியமிக்கப் பட்டார். (பிறந்த தேதி: 1-11.1915).

## அசோக மேத்தா

மாணவராக இருந்த போதே பொருளாதாரத் துறையில் நிபுணராக விளங்கிய இவரைக் கவர்ந்தது, காந்திஜியின் உப்பு சத்தியாக்கிரகம். இவர் ஆறு தடவை சிறை சென்றிருக்கிறார். காங்கிரஸ் ஸ்தாபனத்துக்குள்ளேயே காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியை ஆரம்பித்தவர்களுள் இவர் ஒருவர். பிரச்சினைகளையும் தத்துவங்களையும் அலசிப் பேசுவதிலும் நன்கு எழுதுவதிலும் இவர் ஆற்றல் மிகுந்தவர். பிரஜா சோஷலிஸ்ட் கட்சியில் பணியாற்றி பின் திட்டக் கமிஷன்உபதலைவராக நியமிக்கப் பட்டார்.

பிரஜா சோஷலிஸ்ட் கட்சியில் இதற்கு ஆட்சேபம் இருக்கவே, இவர் அக் கட்சியிலிருந்து விலகிக் கொண்டுவிட்டார். தாம் வகுக்கும் திட்டத்தை அமல் படுத்தும் பொறுப்பு இப்போது இவருக்கு ஏற்பட்டிருக்கிறது. (பிறந்த தேதி 24-10-1911)

## பக்ருதீன் அகமது

இவர் சமீப காலம் வரையில் அஸ்ஸாமில் நிதிமந்திரியாக இருந்தவர். அஸ்ஸாமில், சுதந்திரத்துக்கு முன்பு, கோபிநாத் பார்தோலாய் அமைத்த காங்கிரஸ் சுதந்திரத்திற்கு முன்பே, கோபிநாத் மந்திரிசபையிலேயே ஒரு மந்திரியாக இடம் பெற்று நிர்வாகத் துறையில் நீண்ட அனுபவம் பெற்றவர். 1928-ல் காங்கிரசில் சேர்ந்து பல முறை சிறை சென்றிருக்கிறார். மத்திய அரசாங்கத்தில் இடம் பெறும் முதல் அஸ்ஸாமியர் இவர்தான். (பிறந்த தேதி 13-5-1905.)

## ஜி. எஸ். பாட்டக்

ராஜ்ய சபையில் மிகவும் வயதான அனுபவசாலியான

அங்கத்தினர் இவர். சமீபத்தில் பார்லிமெண்ட் காங்கிரஸ் கட்சித் தலைவர் போட்டியை நடத்தும் பொறுப்பு இவரிடமே விடப் பட்டது. இவர் அலகாபாத் ஹைகோர்ட்டில் வழக்கறிஞராகவும் நீதிபதியாகவும் பணியாற்றியிருக்கிறார். இவர் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்கு இந்தியப் பிரதிநிதியாகப் பல தடவை சென்றிருக்கிறார். மந்திரி சபையில் மிகவும் அதிக வயதுள்ளவர் இவரே.

# தமிழ் நாட்டிலிருந்து ராஜாங்க மந்திரிகள்

## சி. ஆர். பட்டாபிராமன்

சத்திய மூர்த்தியின் பிரசங்கங்களினால் கவரப்பட்டு, அன்று சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட இவர், இன்று சுதந்திர இந்தியாவில் அமைச்சராகப் பணியாற்றுகிறார். சர். சி. பி. ராமஸ்வாமி அய்யருடைய புதல்வர் இவர். 1955-இல் காந்திஜி சென்னை வந்திருந்தபோது தொண்டர் படைத் தலைவராக இவர் சேவை செய்தார். முன்பு ஸைமன் கமிஷனை ஸி. பி. வரவேற்றபோது, அதைப் பகிஷ்கரிக்கும் மாணவர் கூட்டத்தின் தலைவராக பட்டாபிராமன் இருந்திருக்கிறார். இவர் 1955-இல் ஐ. நா. சென்ற இந்தியக் கோஷ்டிக்கு சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டார். 1961-இல் ஐ. நா. வில் இந்தியப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். இந்திரா காந்தி செய்தித் துறை மந்திரியாக இருந்தபோது, அவருக்குத் துணை மந்திரியாக இருந்தார்.

விளையாட்டுத் துறையில் இவர் ஒரு சிறந்த நிபுணர். இவருக்கு மிகப் பிடித்தது கிரிக்கெட். இவர் பிறந்த தேதி (11-11-1906).

## ஓ. வி. அளகேசன்

சென்னை ராஜ்ய முதல் மந்திரி பக்தவத்ஸலத்தின் உறவினரான அளகேசன், 1952 வரை தமிழ் நாடு அரசியலிலேயே முக்கியப் பங்கு பெற்றுவந்தார். தேர்தலில் வெற்றி பெற்ற பின், மத்திய மந்திரி சபையில் ரயில்வே துணை மந்திரியாக நியமிக்கப்பட்டார். அரியலூர் ரயில் விபத்தின் போது ரயில்வே மந்திரி லால் பகதூர் சாஸ்திரி ராஜிநாமா செய்தபோது, இவரும் ராஜிநாமா செய்திருக்க வேண்டும் என்று எதிர்க் கட்சியினர் வற்புறுத்தினர். 1957 பொதுத் தேர்தலில் இவர் தோல்வியுற்றதால், மீண்டும் தமிழக அரசியலுக்கே திரும்ப வேண்டியதாயிற்று. 1962 இல் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். எண்ணெய் இலாகா பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்போது ராஜாங்க மந்திரியாகப் பதவி உயர்வளிக்கப்பட்டு, எண்ணெய்-எரிபொருள் இலாகாவின் முழுப்பொறுப்பும் இவரிடம் விடப்பட்டிருக்கிறது.

# தமிழ் நாட்டிலிருந்து துணை மந்திரிகள்

## திருமதி மரகதம் சந்திரசேகர்

சமூகப் பாதுகாப்புத் துறையில் மிகவும் ஊக்கத்துடன் பணியாற்றும் இவர், முதல் பாரத மந்திரிசபையில் சுகாதார மந்திரி ராஜகுமாரி அமிருத கௌரின் துணை மந்திரியாக இருந்தார். மந்திரி பதவி வகிக்கும்போதே நிர்மாணத் தொண்டிலும் இவர் அதிகமாக ஈடுபட்டு வருகிறார். காங்கிரஸ் தலைவர் வித்வான் திருக்களத்தூர் முனுசாமிப் பிள்ளையின் குமாரி இவர். இவர் லண்டன் பல்கலைக் கழகத்திலும் கல்வி பயின்றிருக்கிறார். இவர் ஆர். சந்திரசேகர் என்பவரை 1950-இல் மணந்தார். இவர் இரண்டாவது சம்பளக் கமிஷனில் அங்கத்தினராக சேவை செய்திருக்கிறார். நெற்றியில் திருநீறும், பெரிய அளவில் குங்குமப் பொட்டும் இல்லாமல் இவரைக் காணமுடியாது. தெய்வ பக்தி நிறைந்தவர்.

## திருமதி சௌந்தரம் ராமச்சந்திரன்

காந்திஜி எதற்காகப் பாடுபட்டாரோ, என்ன லட்சியங்களைக் கனவு கண்டாரோ, அந்த லட்சியங்களைக் கொண்டதாக உள்ள காந்தி கிராமத்தைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்தி, அதைத் திறம்பட நடத்தி வருபவர் திருமதி சௌந்திரம் ராமச்சந்திரன். தமிழகத்தின் தொழில் அதிபராக விளங்கிய டி. வி. சுந்தரம் அய்யங்காரின் செல்வப் புதல்வியான இவர், காந்திய நிர்மாணத் தொண்டரான ஜி. ராமச்சந்திரனை மணந்து, காந்தி கிராமத்தை நடத்தி வருகிறார். கலப்பு மணம். ராமச்சந்திரன் ஹரிஜன வகுப்பினர்; பட்டம் பெற்றவர். கதர் கிராமத் தொழில் போர்டின் தலைவியாகப் பணியாற்றிய இவர், சென்ற தேர்தலில் வெற்றி பெற்றபின், மத்திய மந்திரி சபையில் கல்வித் துறைத் துணை மந்திரியாக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து அத்துறையில் பணியாற்ற திருமதி இந்திரா காந்தி வாய்ப்பு அளித்திருக்கிறார்.

# இதர ராஜாங்க மந்திரிகள்

பி. எஸ். நாஸ்கர் (உள்நாடு).

ஷியாம்தார் மிச்ரா (பாதுகாப்பு).

ஷாம்நாத் (ரயில்வே).

ஷா நவாஸ் கான் (தொழிலாளர் நலன்).

பி. ஸி. சேட்டி (இரும்பு, உருக்கு).

டி. ஆர். சவான் (திட்டம்)

பக்த் தர்சன் (கல்வி).

பி. எஸ். மூர்த்தி (சுகாதாரம்).

அன்னா சாகேப் ஷிண்டே (உணவு, விவசாயம்).

எல். என். மிச்ரா (நீர்ப் பாசனம்).
வி. ஸி. சுக்லா (பார்லி மெண்ட் விவகாரம்).
பி. பகவதி (சுரங்கம்).
நந்தினி ஸத்பதி (செய்தி, ஒலிபரப்பு).
இக்பால் சிங் (எண்ணெய்)
ஷாகி குரோஷி (வர்த்தகம்)

**இதர துணை மந்திரிகள் :**

ஸி. பி. பூனச்சா (போக்கு வரத்து, சுற்றுலா).
பி. கோவிந்த மேனன் (உணவு, விவசாயம்).
ராம்சு பாக் சிங் (ரயில்வே).
வி பூ தேந்திர மிச்ரா (தொழில்).
பி. ஆர். பகத் (நிதி).
ஜே. எல். ஹாதி (உள் நாடு).
ஏ. எம். தாமஸ் பாது காப்பு).
தினேஷ் சிங் (அயல்நாடு).
ரகுராமையா (தொழில் நுணுக்க அபிவிருத்தி).
சுசிலா நய்யார் (சுகாதாரம்).
ராஜ்பகதூர் செய்தி, ஒலி பரப்பு).
கே.எல். ராவ் (நீர்ப்பாசனம்).
ஜகந்நாத ராவ் (தொழி லாளர் நலன்).
எஸ். கே. டே (சுரங்கம்).
டி. என். சிங் (இரும்பு, எஃகு).
மேகர்சந்த் கன்னா (மரா மத்து).

—"தினமணி கதிர்"


# புதுமுறை சங்க வாய்பாடு

**V.K. சேஷாத்திரி. B.A., L.T.**

(Retired Deputy Inspector of schools. )

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய் பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**

# பண்டித மதன்மோகன் மாளவியா

**பழம்பெரும் தேசபக்தர் பண்டித மதன்மோகன் மாளவியா. தியாகத் தீயிலே புடம் போட்டு எடுத்த பத்தரை மாற்றுத் தங்கம் அவர். காசி இந்து பல்கலைக்கழகம் கண்டவர். அவர்தம் தியாக வரலாறு, படிப்பவரையும் புனிதப்படுத்தி விடும் என்பதில் ஐயமில்லை.**

1886-ம் ஆண்டு கல்கத்தா நகரில் காங்கிரஸ் மகாசபை கூடியது. மகாசபையின் தலைவரான தாதாபாய் நௌரோஜியும் மற்றும் சிலரும் அரசாங்கத்தின் போக்கைக் காரசாரமாகக் கண்டித்துப் பேசினர். அதைக் கேட்ட, பிரதிநிதியாக வந்த ஒருவருக்கு, தானும் அவர்களைப் போல் பேச வேண்டும் என்ற ஆவல் உள்ளத்திலிருந்து கிளம்பியது. சட்டென்று எழுந்தார். நிதானமாக, ஆனால் கம்பீரமாக, முழங்கினார் அவர் :—

“ஆண்டு தோறும் சட்டங்களும் சாசனங்களும் கிளம்புகின்றன. அவற்றிற்கு உட்பட்டு நாமும் வாழ்கின்றோம். வருந்துகின்றோம். எனவே, அவற்றைக் குறித்து நம் கருத்தைத் தெரிவிக்க நமக்கு உரிமை வேண்டாமா ? ஒரு வார்த்தை கூட சொல்ல வகையில்லையே ! சட்ட சபைகளில் நமக்கு பிரதிநிதித்துவம் கிடையாது. இந்தியரையும் சரி சமமாக நடத்துவோம் என்ற ராணியின் வாக்குறுதி எங்கே ? நமக்கு மட்டும் ஏன் இந்தப் பாரபட்சம் ?

இருபத்தி ஐந்தே வயது நிரம்பிய இளைஞரின் கணீர் என்ற அந்தப் பேச்சைக்கேட்டு, மகாசபைக்கு வந்திருந்தோர் உற்சாகத்துடன் கை தட்டினர். இவ்வளவு அழகாக கோவையாகப் பேசுகிறாரே என்று பலரும் வியந்தனர். அன்று அப்படிப் பலராலும் பாராட்டப்பட்ட இளைஞர் தான் பண்டித மதன்மோகன் மாளவியா! “விடுதலை பெற்ற பின்பே மாள்வேன்” என்று சூளுரைத்தவர் அவர். தேச சேவைக்காகத் தன் உயிரையும் உடலையும் அர்ப்பணித்தவர். சொன்ன சொல் தவறாதவர். சத்தியவான் என்றால் நம் கண் முன் நிற்பவர் மகாத்மா! அவருக்கு ஈடான ஒரு மனிதரைக் குறிப்பிட வேண்டுமென்றால், மாளவியாவைத்தான் குறிப்பிட வேண்டும். சுயநலமற்ற தியாகி. கண்ணால் கண்டதை மட்டுமே நம்புவார். கண்டது தவறென்றால் கண்டிக்கவும் தயங்கார். அதற்கு உதாரணம், 1933-ல் கல்கத்தாவில் நடந்த கலகம் பற்றி, அவர் கொதித்தெழுந்த சம்பவம் !

அவ்வருடம் கல்கத்தாவில் காங்கிரஸ் மகா சபை நடந்தது. கூட்டம் நடத்தக் கூடாது என்று போலீசார் உத்தரவிட்டனர். மீறிக் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் ஆயிரக்கணக்கானோர் கைது

செய்யப்பட்டனர். அப்படியும் சுமார் 300 பேர் குழுமியிருந்தனர். போலீஸ் வந்தது. அடக்குமுறை நடந்தது. தடியடிப்பிரயோகம் நடத்தினர். யாரும் அசையவில்லை. கண் மூடித்தனமாகத் தாக்கினர் போலீஸார். அது கேட்டு மாளவியா கல்கத்தாவிற்கு விரைந்தார். காயமுற்றோரைக் கண்டு கண்ணீர் வடித்தார். அரசினரின் அக்கிரமத்தைக் குறித்து, உடனடியாக ஓர் அறிக்கை வெளியிட்டார். அப்போதைய லண்டன் காமன்ஸ் சபையில் கேள்வி பிறந்தது. அன்றைய இந்திய மந்திரியாக இருந்த ஸர். சாமுவேல் ஹோர், மாளவியாவின் அறிக்கையை மறுத்து, ஓர் இந்தியத் தலைவர் தவறான அறிக்கையை வெளியிட்டு இருப்பது வருந்தக் கூடியது என்று கூறினார். இது கேட்ட மாளவியா உடனே தந்தி யடித்தார். "அரசாங்கம் நடந்தது பற்றி விசாரணை நடத்தட்டும். தகுந்த ஆதாரத்தோடு மெய்ப்பிக்கிறேன். நடந்தவை பொய் யன்றால் என் மீது தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்" என்று. அரசாங்கம் விசாரணை நடத்தவுமில்லை. மாளவியா மீது நடவடிக்கை எடுக்கவுமில்லை. நடந்ததை அப்படியே மறைத்து விட்டது!

## படிப்பாளி மாளவியா

வசதியிருந்தால் வாழ்நாள் முழுவதும் படிப்பதிலேயே காலத்தைக் கழிக்கவும் சித்தமாயிருந்தார் மாளவியா. சிறு வயதிலேயே நல்ல அறிவாளியாகத் திகழ்ந்தார். எல்லா வகுப்பிலும் முதன்மையாகத் தேறினார். பண்டிதரின் அறிவுத் திறன் கண்டு அவருடைய ஆசிரியரும் அதிசயித்தனர். ஒரு முறை கேட்டால் போதும். மீண்டும் மறக்கவே மாட்டார். தன்னுடைய இருபத்தி இரண்டாவது வயதில் பி. ஏ. பட்டம் பெற்றார். வடமொழி, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாளவியா பெரிதும் தேர்ச்சி பெற்றிருந்தார்

மேலும் மேலும் படிக்கத்தான் விரும்பினார் மாளவியா. ஆனால் குடும்பத்தின் பொருளாதார நெருக்கடியால் படித்த பள்ளியிலேயே ஆசிரியராக அமர்ந்தார். கிடைத்ததைக் கொண்டு இனிமையாக வாழ்க்கை நடத்தினார்.

சிறிது காலம் 'இந்துஸ்தான்' பத்திரிகையிலும் இந்தியன் யூனியன் பத்திரிகையிலும் வேலை பார்த்தார். பத்திரிகையின் மூலம் மக்கள் மனத்தில் விடுதலை உணர்ச்சியை எழுப்பினார். அனைவரும் விரும்பிப் படிக்கும் வண்ணம் கட்டுரைகள் எழுதினார்.

இச்சமயத்தில் சட்டக்கல்வி படித்து வக்கீலாக விருப்பம் கொண்டார். ஆனால் பண வசதிக்கு எங்கே போவது? 'நான் இருக்கிறேன்' என்று முன் வந்து பொருளுதவியளித்தார் ராஜாராம பால்சிங் என்ற ஜமீன்

தார்: 'இந்துஸ்தான்' பத்திரிகை உரிமையாளர் அவர். வக்கீல் பரீட்சையில் தேறி வக்கீலானார் மாளவியா.

## பல்கலைக்கழகம் நிறுவியவர்

தான் படித்தால் மட்டும் போதாது. இந்நாட்டின் வருங்கால சந்ததிகள் இப்போதைய மக்களைப்போலன்றி கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க வேண்டும். அவர்கள் மூலமாகவே அந்நிய ஆட்சியை விரட்ட வேண்டும் என்று எண்ணினார். ஆங்கிலக் கல்லூரிகளில் படிப்பதால் எவ்விதப் பயனும் இல்லை என்பதை உணர்ந்த அவர், தானே ஒரு கல்லூரி அமைக்க வேண்டும் என்று எண்ணினார். தைரியம், ஊக்குவிப்பது என்பது மருந்துக்குக் கூட கிடைக்காத அந்தக் காலத்தில், விடாப்பிடியாக முனைந்து அதில் வெற்றியும் கண்டார். அவர் கனவு நனவாகியது. அவருடைய விடா முயற்சியின் பயனாக, காசி இந்து பல்கலைக் கழகம் தோன்றியது.

## உழைப்பாளி மாளவியா

பண்டிதர் சிறந்த உழைப்பாளி. தாய்மொழியில் பற்றும், தேச விஷயத்தில் சிரத்தையும் சமூக ஒற்றுமையில் ஊக்கமும் கொண்டு உழைத்தார். அலகாபாத் நகர சபையில் அங்கம் வகித்தார். நகர மேயராக மாறினார். மூன்றாவது காங்கிரஸ் மகா சபை சென்னையில் நடந்தபோது சட்ட திருத்தம் குறித்து அழகாக, அருமையாக ஆணித்தரமாகப் பேசினார். அவரது பேச்சைக்கேட்ட தலைவர்கள் அனைவரும் ஒரு மனதாகப் போற்றினர். அது முதல் காங்கிரசில் பண்டிதருக்கு நல்ல பெயர்.

1909-ல் காங்கிரஸ் அக்கிராசனராகப் பதவி யேற்றார். அப்போது மாளவியாவுக்கு வயது நாற்பதுக்கும் குறைவே. இந்த வயதில் எவருக்கும் அந்தப் பதவி கிட்டியதில்லை. அந்தப் பதவியையும் திறமையாக நிர்வகித்தார். அவரது திறமையைக் கண்டு வெளிநாட்டினரும் போற்றினர்.

அதன்பின் சட்டசபையில் நுழைந்தார். மக்களுக்காக உழைத்தார். எல்லா விஷயங்களைப் பற்றியும் பேசினார். அரசாங்கத்தின் வரவு—செலவுத் திட்டங்கள் பற்றி அவரைப்போல் அலசியவர்கள் வெகு சிலரே!

## பேச்சாளி மாளவியா

மாளவியா இன்றைய நாகரீகத்தின் அடிமையல்ல. அன்றைய புராதன நாகரீகத்தின்பால் மோகம் கொண்டவர். சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவர். கொள்கையின் எல்லையைத் தாண்டாதவர். உள்ளமும் உதடும் ஒருசேரப் பேசி அனைவரையும் கவரக் கூடிய சாந்தத்தைப் பெற்றவர். அவர் பேச்சில் பொருள் ஆழத்தைக் காணலாம். ஆணித்தரத்தையும் காணலாம். கம்பீரமும் கருணையும் ஒருசேரப் பேசுவார். வாக்கியத்தில் அழ

குறச் சொற்களைச் சேர்த்து கோவையாக மற்றவர் மனம் கோணுதபடி பேசுவார். வரம்பு மீறி ஒரு சொல் சொல்லமாட்டார்.

## பிச்சைப் பிரபுக்கள்

தன்னலத்திற்காகப் பிச்சை எடுப்போர் பலர். பொதுநலத்திற்காக நிதி கேட்டவர்களில் மகாத்மாவும், மாளவியாவுமே அதிகமாகப் பொருள் சேர்த்தனர். மகாத்மா ஏழைகளிடமிருந்து ஒரு கோடி ரூபாய் வரை சேர்த்தார். அவர் சேர்த்த நிதி 'திலகர் சுயராஜ்ய நிதி' ஏழைகளிடம் இருந்து எளிதில் பணம் பெற்றுவிடலாம். தனவந்தர்களிடமிருந்து பணம் சேர்ப்பது மிகவும் கஷ்டம். ஆனாலும் அவர்களிடமிருந்து ரூபாய் ஒரு கோடிக்குமேல் சேர்த்தார் மாளவியா. பணம் படைத்த மனிதர்களிடமிருந்து அவ்வளவு பணம் திரட்டியவர் மாளவியா ஒருவர்தான். இவ்விருவரையும் பற்றி ஒரு நண்பர், "பிச்சைப் பிரபுக்கள்" என்று புகழ்ந்தார். 1912-ல் கல்க்த்தாவில் அவர் பேசிய ஒரு பிரசங்கத்திற்குப் பின் செல்வந்தர்களும், வியாபாரிகளும் கட்டு கட்டாக பவுன்களாகக் கொண்டு வந்து குவித்தனர். அதைக் கண்டு பண்டிதர் அருகிலிருந்த ஸர். விசுவேசுவரய்யா அதிசயித்தார். அவர்மட்டுமென்ன? அப்போதைய அரசாங்கமும் அதிசயித்தது. மொத்தம் இரண்டு கோடிக்குமேல் பணம் சேர்ந்தது.

## சுதேசி உணர்வு

பிறந்த நாள் முதல் பண்டிதர் சுதேசியவாதி. சட்டைக்குப் பொத்தான் போடமாட்டார். கயிறுதான் கட்டிக்கொள்வார். ஊரெல்லாம் சுதேசியத்தைப் பரப்பினர். சுதேசியத் தொழில்களை ஆதரிக்கும் பொருட்டு அலகாபாத்தில்ஒரு வர்த்தகசாலை தோன்றியது. அதன் ஸ்தாபகர்களில் பண்டிதரும் ஒருவர்.

1930-ம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பில் பண்டிதரும் சிறையானூர். அவர் சிறையானதைத் தொடர்ந்து காசி இந்து சர்வகலாசாலை மாணவர்களும் போரில் ஈடுபட்டனர். அரசாங்கம் கலாசாலைக்கு அளித்து வந்த பண உதவியை நிறுத்தி விடப்போவதாகப் பயமுறுத்தியது. அதற்காக மாளவியாவும் மற்றவர்களும் ஒரு சிறிதும் மனம் கலங்கவில்லை. வித்யாலயத்தின் வீறும் குன்றவில்லை. 1933-ல் தேசமெங்கும் அவசரச் சட்டம் தாண்டவமாடியது. கல்கத்தாவில் மகாசபை கூடவேண்டும். மாளவியாதான் அக்ராசனர். அவரும் புறப்பட்டார். ஆனால், வழியில் அவரைப் போலீஸ் கைது செய்தது. அவரை மட்டுமின்றி கூட்டத்திற்கு வந்த அனைவரையும் கைது செய்தது. ஆனாலும் மகாசபை கூடித்தான் கலைந்தது.

## மகள் இறந்த போதும்...

சொன்னசொல் தவறுதவர்,

பண்டித மாளவியா. செய்வதைத் திருந்தச் செய்வதே அவரது குணத்தில் உள்ள தனிச் சிறப்பு. எக்காரணத்தைக் கொண்டும் தன்னுடைய சொல்லை மாற்றிக் கொள்ளமாட்டார். காசநோயால் அவரது அருமை மகள் இறந்தாள். அடுத்த நாள் காசி சர்வகலாசாலையில் ஒரு முக்கியமான விழா. மகளின் மரணத்திற்காக, மனம் உருகினலும், அதற்காக தன்னுடைய பயணத்தை நிறுத்தவில்லை. பண்டிதரின் தலைமையில் அவ்விழா சிறப்பாக நடந்தேறியது.

பண்டித மதன்மோகன் மாளவியா வருங்கால பாரத ரத்தினங்களுக்கு முன்னேடி. பாரத மக்களுக்காகப் பாடுபட்டவர். விடுதலைக்கு வித்திட்ட வீரர். மகாத்மா காந்தியை குன்றின் மேலிட்ட விளக்குக்கு ஒப்பிட்டால், பண்டித மாளவியாவை ஆலயத்தின் அகல் விளக்காகக் கூறலாம். காந்தி அஹிம்சா மூர்த்தி. மாளவியா கருணைக் கடல். ஒருவர் உயர்வுக்கு இமய மலையை ஒப்பிட்டால், மற்றவரின் மேதைக்கு புனித கங்கையை ஒப்பிடவேண்டும். மகாத்மா காந்திக்கு அடுத்தபடியாக மகிமை வாய்ந்த மகா புருஷர், பண்டித மதன் மோகன் மாளவியா!

—"கிராம நலம்"

# ரேஷன் தானிய வருடாந்திரக் கொள்முதல் மதிப்பு ரூ. 100 கோடி

### நிர்வாகச் செலவு ரூ. 1 கோடி ஆகிறது.

சென்னை, பிப். 25—ரேஷனை அமல் நடத்துவதற்காக சென்னை சர்க்கார் கொள் முதல் செய்யும் வருடாந்திர உணவு தானியங்களின் மதிப்பு சுமார் ரூ. 100 கோடி.

இந்தத் தகவலை சிவில் சப்ளை டைரக்டர் திரு. பி. கே. நம்பியார் தெரிவித்தார்.

இந்தக் கொள் முதல் மதிப்பில் அரிசியும் (ரூ. 56 கோடி), துவரம் பருப்பு கோதுமை (ரூ. 44 கோடி) முதலியனவும் அடங்கியுள்ளன.

இதில் ராஜ்ய சர்க்காரின் முதலீடு ரூ. 25 கோடியாகும்.

திரு. நம்பியார் மேலும் கூறினர். "ரேஷன் சம்பந்தமான நிர்வாகச் செலவு சுமார் ரூ. 1 கோடி ஆகிறது. இந்தத் தொகை உபயோகிப் போரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

ஆகவே உணவு தானியங்களின் மொத்த கொள் முதல் மதிப்பில் சுமார் 1 சதம் செலவாகிறது. இந்தச் செலவு அதிகமானதல்ல.

# செயிண்ட் ஜார்ஜ் கோட்டை

**வி. கோ.**

செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, இன்று சென்னை அரசாங்க அலுவலகம், சட்ட மன்றம் போன்ற முக்கிய அரசியல் துறை அரங்கமாக விளங்குகிறது. தலைநகரின் முக்கிய அங்கம் என்ற அந்தஸ்தும் கோட்டைக்கு உண்டு. பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வர்த்தகத்தில் ஈடு பட்டிருந்த கிழக்கிந்திய கம்பெனி, தனது வாணிபக்கிடங்காக உபயோகித்துக் கொள்ள சந்திரகிரி நாயக்கரிடமிருந்து "மதரூஸ் பட்டின"த்தில் நிலம் வாங்கி, பாதுகாப்பிற்காக அதைச் சுற்றி வலுவான அரண் அமைத்துக் கொண்டதாக கிழக்கிந்தியக் கம்பெனியின் தகவல்கள் கூறுகின்றன. எனவே, கோட்டை பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுப்பப் பெற்றது என்பது தெளிவாகிறது. கிழக்கிந்தியக் கம்பெனியின் சாஸனங்கள் கூறும் தகவல்களிலிருந்து ஆங்கிலேயர்கள் முதலில் சிறிய அளவில் கம்பெனியின் காரியாலயமாகவே கோட்டையை அமைக்க எண்ணினர் என்பது புலப்படுகிறது. பிற் காலத்தில் சுற்றுக்கள் பெருகி, கோட்டை விஸ்தீரணம் அடைந்திருக்கிறது.

கிழக்கிந்தியக் கம்பெனியார் முதலில் திட்டமிட்டது, நூறு சதுர அடிக்குள் அடங்கிய சிறு கோட்டையையே. இதனுள் கம்பெனி அலுவல்களின் ஒரு பகுதி, கம்பெனி ஊழியர்களுக்கான 'குவார்ட்டர்ஸ்' ஆகியவை அமைப்பதே அப்போதைய திட்டம். பிற் காலத்தில் கம்பெனியின் அலுவல்கள் பெருகவே அலுவலகமும் பெருகி விட்டிருக்கிறது!

## கோட்டையின் வரலாறு

கி.பி. 1650-ம் ஆண்டு-அதாவது 'மதராஸ் பட்டினத்'தில் கம்பெனி அலுவலகம் அமைக்க சந்திரகிரி மன்னரிடம் அனுமதி பெற்ற பத்தாண்டுகளுக்குப் பிறகு 100 சதுர அடிகள் விஸ்தீரணத்தில் கோட்டை கட்டப் பெற்றுவிட்டது. சில ஆண்டுகளுக்குள் கோட்டையே கிழக்கிந்தியக் கம்பெனியின் பிரதான காரியாலயமாக ஆகிவிட்டது மட்டுமன்றி, 'மாட்சிமை தங்கிய' கம்பெனியின் தென்பிராந்தியக் கோட்டையாகவும் ஆகிவிட்டது. இந்நாட்களில் கம்பெனியின் வர்த்தகம் வெகுவாக முன்னேற்றம் கண்டது. இந்திய உபகண்டத்தில் கம்பெனிக்கு 'பிரகாசமான' எதிர் காலம் இருப்பதை அறிந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்ய பூபதிகள் கம்பெனியை நிர்வகிக்க அந்தஸ்துமிக்க பிரிட்டிஷாரகளை அனுப்பி வைத்தனர். இந்நிலையில் கோட்டையில் பெரிய அளவில் அலுவலகங்கள் நடைபெற வேண்டியிருந்ததால் கோட்

டையை ஆங்கிலேயர்கள் விரிவு படுத்த எண்ணினர். அப்போது 1666-ம் ஆண்டில் கம்பெனியின் ஏஜண்டாக இருந்த ஆரன்பேகர் என்பவர் கோட்டைக்கு வெளிப் பக்கத்தில் மற்றோர் அரண் அமைத்து கோட்டையைச் சற்று விஸ்தீரணப் படுத்தியது மட்டுமின்றி, கூடுதலான பாதுகாப்புக்கும் வழி வகுத்தார். இந்தப் புதிய கோட்டைக்குள்ளேதான் பின்னர் செயிண்ட் மேரி சர்ச் எனும், இந்தியாவில் முதலாவதாகக் கட்டப் பெற்ற கிருஸ்துவ தேவாலயம் எழுந்தது.

## ஜார்ஜ் டவுன்

1746-ம் ஆண்டில், சென்னையில் பிரெஞ்சுக்காரர்கள் கொஞ்சம் அரசியல் செல்வாக்குப் பெற்று, கம்பெனிக்குத் தொல்லை கொடுத்தனர். சில பிரிட்டிஷ் காரர்கள், மற்றும் கம்பெனியின் இந்திய ஊழியர்கள், பிரெஞ்சுக் காரர்களால், சிறைப் பிடிக்கப் பட்டு பாண்டிச்சேரிக்கு அனுப் பப்பட்டனர். ஆயினும், விரைவிலேயே ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக் கொடிகள் பின்னேக்கிச் செல்வதைக் கண்டனர். இந்நேரத்தில் கம்பெனியின் கேந்திர ஸ்தானமாக விளங்கியது செயிண்ட் ஜார்ஜ் கோட்டை தான்.

கிழக்கிந்தியக் கம்பெனியில் சேவகம் புரிந்த இந்தியர்களுக்காகக் கோட்டையில் ஒரு தனிப் பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. கோட்டையின் வட புறமான அப்பகுதி 'பிளாக் டவுன்' எனப்பட்டது. பின்னர் 1906-ம் ஆண்டில் மன்னர் ஜார்ஜ் சென்னைக்கு வருகை தந்ததைக் கவுரவிக்கும் வகையில் இப்பகுதியின் பெயர் ஜார்ஜ் டவுன் என மாற்றப்பெற்றது.

## செயிண்ட் மேரி சர்ச்

செயிண்ட் ஜார்ஜ் கோட்டையின் உட்புறமுள்ள ஆங்கிலேயர் காலத்துச் சின்னங்களுள் செயிண்ட் மேரி சர்ச் முக்கியமானதாகும். அந்த சர்ச் முற்றிலும் சென்னை வெள்ளைக்கார கிருஸ்துவர் முயற்சியில் விளைந்தது. கி.பி. 1678-ஆம் ஆண்டளவில் சென்னை கவர்னராக இருந்த ஸ்டிரெயன்ஷம் மாஸ்டரால் தொடங்கப் பெற்ற சர்ச் பணி 1680-ஆம்ஆண்டில்முற்றுப் பெற்றது. செயிண்ட் மேரி சர்ச்சின் நிர்மாணப் பொறுப்பை கிழக்கிந்தியக் கம்பெனியின் பிரதம கட்டிட ஆலோசகராயிருந்த வில்லியம் டிக்ஸன் என்பவர் ஏற்றிருந்தார். இந்தச் சர்ச்சின் ஐந்தடி மட்ட அகலம் கொண்ட சிகரப் பகுதி ஓர் அரிய அமைப்பு எனப்படுகிறது.

இன்று சட்டக்கல்லூரி உள்ள பிரதேசம் அன்று கோட்டைவாசிகள் உபயோகித்த இடுகாடாக இருந்தது. பிரெஞ்சுக் காரர்களின் சடலங்கள் சிலவும் இங்கு புதைக்கப்பட்டதை அங்கு கிடைத்த சமாதிச் சின்னங்கள் புலப்படுத்தியிருக்கின்றன. முதல் கம்பெனி கவர்னரின் மனைவி எலிஸபெத் பேகன் 5-12-1652-ஆம் தேதி

யிட்ட மரண சாஸனப் பலகை, கோட்டையிலுள்ள சாஸனங்களுள் பழமையானது. மற்றும் பல இவ்வகை மரண சாஸனப் பலகைகள் நிறுத்த அடித்தளமாக உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

கோட்டையின் உள்ளே இருக்கும் புனித மேரி தேவாலயத்தில் கிழக்கிந்திய கம்பெனியில் சீரிய பணி புரிந்த பல ஆங்கிலேயர்களின் சமாதிகள் காணப்படுகின்றன. ஆறு கவர்னர்களின் சமாதிகளை அங்குக் காணலாம். கம்பெனி சாஸனங்களில் அப்பெரியார்களின் சேவை பாராட்டப் பெற்று, அஞ்சலியும் செலுத்தப்பட்டுள்ளது.

செயிண்ட் மேரி சர்ச்சில் நடைபெற்ற முதல் கிருஸ்துவத் திருமணம் 1680-நவம்பர் மாதம் 4-ம் தேதி எலிஹூயாலுக்கும், ஹிம்மர்ஸனுக்கும் நிகழ்ந்ததாகும். புனித மேரி தேவாலயத்தில் காணும் மற்றோர் சுவை மிக்க செய்தி 1753 பிப்ரவரி 18-ம் தேதி ராபர்ட் கிளைவுக்கும் மார்க்கரெட்டுக்கும் நடைபெற்ற திருமணம் பற்றியதாகும்.

## கோட்டை கட்டிடங்கள்

கோட்டையில் செயிண்ட் மேரி சர்ச்சைப் போன்ற வேறு சில முக்கியப் பகுதிகளும் உண்டு. அவற்றில் சமீபத்தில் சென்னை அரசாங்க "அக்கவுண்டண்ட் ஜெனரல்" அலுவலகமாகக் கொள்ளப்பட்ட கட்டிடம் குறிப்பிடத் தகுந்தது. செயிண்ட் மேரி சர்ச்சுக்கு மேற்காக அமைந்துள்ள இக்கட்டிடம் அன்று கோட்டை கவர்னரின் மாளிகையாயிருந்தது. இக்கட்டிடம் ராபர்ட் கிளைவால் அவர் தம் திருமண சமயத்தில் சொந்த உபயோகத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டதாக சில தகவல்கள் கூறுகின்றன. இக் கட்டிடம் வலுவான அமைப்பில் சிறந்த பொறியியல் திறனுடன் நேர்த்தியாக எழுப்பப்பெற்றிருக்கிறது.

"செகரடேரியட்டுக்கு வடபால் உள்ள 'ஆபீஸர்ஸ் மெஸ்' எனப்படும் கட்டிடத்தை ஆங்கிலேயர் குறிப்புகள் "பப்ளிக் எக்ஸ்சேன்சு ஹால்" என்று குறிப்பிடுகின்றன. இக்கட்டிடம் பற்றி சில சுவைமிக்க செய்திகள் உண்டு. இக்கட்டிடத்தை நிர்மாணிக்க தேவைப்பட்ட தொகை முழுவதும் "லாட்டரிச் சீட்டுகள்" மூலம் திரட்டப்பட்டது. சென்னை மாநகரின் முதல் "லைட் ஹவுஸ்" இக்கட்டடத்திலே தான் நிறுவப் பெற்றது. இக் கட்டிடம் ஓர் சிறந்த அமைப்பு எனலாம். கோட்டையிலுள்ள தற்போதைய 'செகரடேரியட்'டிற்கும் 'கவுன்சில் ஆப் சேம்பர்' கட்டிடத்திற்கும் இடையேதான் கம்பெனி கவர்னரின் அலுவலகம் அக்காலத்தில் இருந்தது.

கோட்டையினுள்ளே உள்ள கவுன்சில் கட்டிடத்தில் உள்ளே நிற்கும் கறுப்பு நிற கற்றூண் ஒன்றுக்குப் பின்னே ஒரு சுவையான வரலாற்று நிகழ்ச்சி மறைந்திருக்கிறது. சில வலுவான இக்

கற்றூண்களை 1734-ம் ஆண்டில் கவர்னர் ஸர். தாமஸ் பிட் நிறுவியதாக அறிகிறோம். இக் கல் தூண்கள் கோட்டை சதுக்கத்திலிருந்து கடற்கரையின் வாயில் வரை நெடுக நிறுவப்பட்டன. பிரெஞ்சுக்காரர்கள் 1746 ஆம் ஆண்டு சென்னையைக் கைப்பற்றியதும், அத் தூண்டுகளை பாண்டிச்சேரிக்குக் கவர்ந்து சென்று விட்டனர். பின்னர் 1771-ஆம் ஆண்டில் பிரிட்டிஷார் பிரெஞ்சுப் படைகளை பாண்டிச்சேரியில் வென்று, கவர்ந்து செல்லப்பட்ட கற்றூண்களை கைப்பற்றி மீண்டும் செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக்குக் கொண்டு வந்து நிறுவினர். அந்தக் கற்றூண்களில் ஒன்று 1910-ம் ஆண்டு கவுன்சில் கட்டிடத்தில் நிறுவப் பெற்றது.

## செக்ரடேரியட்டும் அசெம்பிளியும்

கோட்டையின் முக்கியமான பகுதிகளில் செக்ரடேரியட் அலுவலகமும், அசெம்பிளிக் கட்டிடமும் குறிப்பிடத்தக்கன. செக்ரடேரியட்டில் மாநில சர்க்காரின் பல இலாகாவின் பல்வேறு அலுவல்கள் நடைபெறுகின்றன.

சென்னை அரசாங்க சட்டசபை கோட்டையில் செயல் படுகிறது. கொஞ்ச நாட்களுக்கு வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்பட்டிருந்த சட்டசபை மீண்டும் கோட்டைக்கே வந்து சேர்ந்தது. இந்தக் கோட்டையில்தான் ஒரு காலத்தில் இந்திய மக்களின் சுதந்திரத்திற்குச் சவால் எழுந்தது. இன்று இங்கே இந்திய சுதந்திரக் கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது.

செயிண்ட் ஜார்ஜ் கோட்டையின் உள்ளே சமீப காலத்தில் பல புதிய சிறிய கட்டிடங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அவற்றில் மாநில அரசாங்க அலுவல்கள் நடைபெறுகின்றன. மத்திய அரசினர் அரும்பொருட்காட்சி சாலை ஒன்றும் கோட்டையில் இருக்கிறது.

கோட்டையினுள்ளே சிறிய ஹோட்டல்கள் சிலவும் உள்ளன.

## இன்றைய தோற்றம்

'செக்ரடேரியட் வரையிலும் போய் விட்டு வருகிறேன்' என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைபவர் சிலர். பலாப்பழம் இருக்கும் இடத்தில் ஈ மொய்க்கும் அல்லவா? அரசாங்க அலுவல்கள் ஆகவேண்டிய பலர் கோட்டையில் தவம் கிடப்பதை அங்கு காணலாம்.

கோட்டையில் அரசாங்க ஜீப்புகளின் அணி வகுப்பைக் காணமல் இருக்க முடியாது.

கோட்டை அகழியில் உள்ள நீர் சுகாதாரத்துக்குச் சவால் விடுகிறது.

கோட்டையில் செயல்படும். சிறிய ஹோட்டல்களின் தரம் பற்றி நாம் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. செக்ரடேரியட்டில் பணி புரியும் யாரையாவது ஒருவரைக் கேட்டுப் பாருங்களேன்.

"தினமணி சுடர்"

# மண் இல்லாமல் பயிர்

ச. கு. கணபதி ஐயர்

மண் இல்லாமல் எந்தச் செடியும் வளராது என்று நினைக்கிறோம்; ஆனால் இப்போது, மண் இல்லாமலே பயிரிடும் முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். மண்ணில் எருக்களைச் சேர்த்து உழுது நிலத்தைப் பண்படுத்தி அதில் விவசாயம் செய்வது பழங்காலத்திலிருந்து வரும் வழக்கம்.

மண்ணில் சில உலோகச் சத்துக்கள், உப்புக்கள் முதலியவை இயல்பாகவே இருக்கின்றன. தாவரங்களின் வளர்ச்சிக்கு வேறு வகைச் சத்துக்களும் தேவை. மனிதன் இந்தச் சத்துக்களை எரு வடிவில் நிலத்துக்குக் கொடுக்கிறான். அவன் ஊற்றும் நீரில் மண்ணிலுள்ள சத்துக்கள் கரைந்து வேர்கள் மூலம் செடிகளுக்குக் கிடைக்கின்றன.

வேர்களே செடியின் வாய். சத்துக்கள் கரைந்த நீரை வேர்கள் உட்கொண்டு தண்டின் வழியாக இலைகள் முதலிய பாகங்களுக்கு அனுப்புகின்றன. சத்து முழுவதும் செடியில் எல்லாப் பாகங்களுக்கும் பரவிய பிறகு எஞ்சியுள்ள நீர் இலைகளின் வழியே ஆவியாக வெளியேறி விடுகிறது. நீரை வெளியேற்றுவதற்கு இலைகளில் நுண்ணிய தொளைகள் அமைந்திருக்கின்றன. வேர்வை வாயிலாக நமது உடல் வேண்டாத நீரை வெளிப்படுத்துவதுபோல, இலைகளும், செடிகளுக்கு வேண்டாத நீரை ஆவியாக வெளிப் படுத்துகின்றன.

மண்ணிலுள்ள எருச் சத்துக்களைத் தவிர, செடிக்கு வெப்பமும் சூரிய வெளிச்சமும் பிராணவாயுவும் கரியமிலவாயுவும் அவசியம். சூரிய ஒளியை இலைகள் ஏற்றுக்கொள்கின்றன. வெப்பம் மண்ணிலிருந்து வேர்கள் மூலமும் ஆகாயத்திலிருந்து இலைகள் மூலமும் செடிக்குக் கிடைக்கிறது. வாயுக்களை வேர் மூலமும் செடி ஏற்றுக்கொள்ளுகிறது.

மண் நுண்ணிய அணுக்களால் ஆனது. இந்த அணுக்களின் இடை வெளிகளில் வாயுக்கள் நுழைந்து வேலை செய்கின்றன. நிலத்தில் கரியமில வாயு மிகுதியாக இருந்தாலும் செடிக்கு அவசியமான அளவில் அது கிடைப்பதில்லை. இந்த வாயுவை இலைகள் ஆகாயத்திலிருந்தே மிகுதியாக உட்கொள்கின்றன.

செடிக்கு ஊட்டம் தரும் சில சத்துக்களும், நீரும், வாயுக்களும், வெப்பமும், சூரிய ஒளியும் அவசியம் என்று தெரிந்துகொண்

போம். மண்ணில் நீர் அதிகமாகிவிட்டால் செடியின் வேர்கள் அழிந்துவிடும். ஆகையால், நிலத்தில் வடிகால் வசதி அவசியமாகிறது.

செடிகளின் இந்தப் பண்புகள் எல்லாம் நிரந்தரமானவை; மாற்ற முடியாதவை. மண் இல்லாப் பயிர் முறையிலும் இந்த ஏற்பாடுகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். மண்ணிலிருந்து செடி ஏற்றுக்கொள்ளும் சத்துக்கள் இன்னவை என்று அறிந்து அவற்றை ரசாயனப் பொருள்களாக நீரில் கரைத்து அந்த நீரில் வேர்கள் அமிழ்ந்தும்படி வைத்து, தொட்டிகளில் மண்ணின்றிச் செடிகளைப் பயிர்செய்யலாம். ஆகவே, செயற்கை முறையில் செடிக்கு வெப்பம், சூரிய வெளிச்சம் அவசியமான வாயுக்கள், வடிகால் வசதி ஆகியவற்றைக் கொடுத்து மண்ணில்லாப் பயிர் முறையை நீரிலே பல நாடுகளில் செய்துவருகிறார்கள்.

மண் இல்லாப் பயிர் முறை (Soilless Culture) வேறு பல பெயர்களாலும் வழங்கும். ரசாயனப் பயிர் முறை (Chemi-Culture), நீரில் இடல் (Hydro-ponics), நீர்ப் பயிர் முறை (Water - Culture), தட்டுக்களில் விவசாயம் (Tray-Agriculture), தொட்டி வேளாண்மை (Tank-Farming), மணற் பயிர் முறை (Sand-Culture), சிறு கற்கள் பயிர் முறை (Gravel Culture) என்பன மண் இல்லாப் பயிர் முறையைக் குறிக்கும் வேறு பெயர்கள். மணலும் கற்களும் மண் ஆக மாட்டா. ஆகவே, இவற்றில் செடிகளை விஞ்ஞான முறையில் பயிர் செய்வதும் மண் இல்லாப் பயிர் முறையே.

மண்ணில் வளரும் செடிகளை நீரில் வளர்க்கும் முறையை ரஸாயன அறைகளில் விஞ்ஞானிகள் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே கையாண்டு வந்திருக்கிறார்கள். செடிகளில் என்ன என்ன சத்துக்கள் இருக்கின்றன, அவை எந்த எந்த அளவில் உள்ளன, அவற்றுள் ஒவ்வொன்றும் செய்யும் வேலை என்ன என்பவைகளைப் பரிசோதிப்பதற்கே விஞ்ஞானிகள் இந்த முறையைக் கையாண்டு வந்தார்கள்; வருகிறார்கள். மண் இல்லாப் பயிர் முறையில் மகசூலை எடுக்கலாம் என்றும், மண் வசதி இல்லாத இடங்களில் இருப்பவர்களுக்குக் காய்கறிகளையும் மலர்களையும் பெறுவதற்கு இந்த முறை சாதகமாக உள்ளதென்றும் விஞ்ஞானிகள் அல்லாத சாதாரண மக்கள் 1929-க்குப் பிறகே இதனைக் கைக்கொண்டார்கள். முறை புதியதாகவும் விசித்திரமாகவும் இருப்பதால் இது பலருடைய கவனத்தையும் கவர்ந்தது. பலர் இதனைக் கைக்கொண்டதைக் கண்டு, சிலர் இந்த முறைகளைப் பற்றி நூல்கள் எழுதினார்கள். அரசாங்கம் பல அநுகூலங்களைத் தேடிப் பரிசோதனைகள் செய்து வந்தது. மண் இல்லாப் பயிர் முறைக்கு அவசியமான பொருள்

களை விற்கும் கடைக்காரர்கள் தங்கள் வியாபாரங்கள் விளம்பரங்களின் மூலம் இந்த முறையில் பொது மக்களுக்கு இருந்துவரும் ஆர்வத்தை அதிகப்படுத்தி விட்டார்கள். 'இனி வேளாண்மைக்கு மண்ணே அவசியமில்லை' என்றும், 'மண்ணில்லாமலே உணவுப் பெருக்கத்தைச் சரி செய்துகொள்ளலாம்' என்றும் வதந்திகளும் உற்சாகமுங்கூடக் கிளம்பியுள்ளன. இவைகளெல்லாம் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் நிகழ்ச்சிகள்.

மண்ணிலுள்ள சத்துக்கள் ஒன்பதுக்கு மேற்பட்டவை. அவைகளைச் செயற்கை முறையில் ரஸாயனப் பொருள்களாக நீரில் கரைத்து அந்த நீரில் செடிகளைப் பயிராக்கலாம். இந்தக் கரையத்தில் உள்ள ஊட்டப் பொருள்கள் 1. நைட்ரேட், 2. பாஸ்பரஸ், 3. பொட்டேஷியம், 4. மெக்னேஷியம் 5. இரும்பு, 6. கந்தகம் (Sulphur) 7. மாங்கனீஸ், 8. கால்ஷியம், 9. போரன் என்பன. சில செடிகளுக்கு இவைகளுடன் துத்தநாகம், தாமிரம் சம்பந்தமான சத்துக்களும் அவசியம்.

இந்தப் பொருள்களில் முதல் மூன்றும் முக்கியமானவை. அம்மோனியம் ஸல்ஃபேட், நைட்ரேட் அவ்சோடா என்ற பொருள்களில் நைட்ரேட் சத்துக்கள் உள்ளன. சூபர்ஃபாஸ்ஃபேட், போன்மீல் இவற்றில் ஃபாஸ்ஃபரஸ் உள்ளது. பொடேஷியம் குளோரைட், பொடேஷியம் ஸல்ஃபேட் என்பவை பொட்டேஷியச் சத்துள்ள பொருள்கள். மரச் சாம்பலிலும் இந்தச் சத்து இருக்கிறது.

செடிக்கு வேண்டிய ஊட்டப் பொருள்களில் ஒவ்வொன்றையும் எந்த அளவில் சேர்க்க வேண்டும் என்பது ரஸாயன அறிஞர்களுக்கே தெரியும். அவர்களின் ஒத்துழைப்பினாலேயே நாம் கலவையைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். மேல் நாடுகளில் ஒவ்வொரு வகைச் செடிக்கும் ஏற்ற சத்துக்கள் கலவையாக விற்பனைக்குக் கிடைக்கின்றன. இன்ன செடிக்கு இந்த அளவில் கரையப் பொருள்களைத் தயாரிக்க வேண்டும் என்ற விவரங்கள் அடங்கிய புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள் முதலியன வெளிநாடுகள் பலவற்றில் உள்ளன. நம் தேசத்தில் இவை இன்னும் பரவவில்லை.

பயிர் செய்வதற்குரிய மணலைக் கொதிநீரினால் கழுவி ஒரு பூந்தொட்டியில் போடவேண்டும். தொட்டியின் அடிப்பாகத்தில் மிகச் சிறிய தொளைகள் மூன்று இருக்கவேண்டும். தொட்டியில் முதலில் பாசி, மரத்தின் இழைப்புச் சக்கை, கம்பளி, ஒருவகைத் தாவர மட்கு (Peat) இவற்றுள் இரண்டொன்றைப் போட்டு மூன்று அங்குலப் படையை உண்டாக்கிச் சுத்தம் செய்த மணலை அதன்மேல் நிரப்ப வேண்டும். ஆழமுள்ள பீங்கான் அல்லது கண்ணாடித் தட்டில் தொட்டியை வைக்கவேண்டும். மண் மடக்

யையும் தட்டாக உபயோகிக்கலாம். செடிக்கு வேண்டிய ஊட்டப் பொருள்களின் கரையத்தை ஒரு மண்ஜாடியிலோ சீசாவிலோ ஊற்றித் தொட்டிக்கும் உயரமான இடத்தில் அதன் அருகில் ஒரு ஸ்டாண்டில் வைக்க வேண்டும். ஒரு மில்லி மீட்டர் அளவில் வாய் உடைய கரையமுள்ள பாத்திரத்தின் வாயோடு பொருத்தி, கார்க் முதலிய பொருள்களில் ஒன்றால் வாயை இறுக மூடிவிடவேண்டும். கரையம் குழாய் வழியாகக் கசிவது ஒன்றே முக்கியம். பிறகு பாத்திரத்தை ஒரு தட்டில் கவிழ்த்து வைக்கவேண்டும். ரப்பர்க் குழாயின் மற்றொரு நுனி தொட்டியில் படும்படி வைக்கவேண்டும்.

ஜாடி அல்லது சீசாவிலிருந்து கரையம் ரப்பர்க் குழாயின் வழியாக எப்பொழுதும் மணலில் கசிந்துகொண்டே இருக்கும். ஆனால், சட்டிச் செடியின் வேர்களுக்கு உணவு கிடைக்கும்படி மணல் ஈரமாகவே இருக்கவேண்டும். மணலில் நீர் தங்காது. அது மணலின் அடியிலுள்ள கம்பளி, மட்கு முதலியவற்றின் புடையில் தங்கி வேர்களுக்கு ஊட்டம் தரக்கூடும். இதில் தேங்கும் நீர், சட்டியின் அடித் துவாரங்களின் வழியாகக் கசிந்து அதன் அடியிலுள்ள தட்டை அடைகிறது. தட்டில் கரையம் சேரச் சேர அதனை மறுபடியும் கரையமுள்ள ஜாடி அல்லது சீசாவுக்கு மாற்றவேண்டும். பழைய கரையத்தை ஒரு மாதத்துக்கு மேல் பயன்படுத்தக் கூடாது. புதிய கரையம் அவசியமாகும்.

செடியில் இலைகள் மஞ்சள் நிறமாக மாறி வருமானால் இரும்புச் சத்துக் குறைவு என்று அறிய வேண்டும். அப்பொழுது அயர்ன் க்ளோரைடு சிறிதளவில் கரையத்துடன் சேர்த்துக் கொள்ளவேண்டும். மணலுக்குப் பதிலாகப் பொடிக் கற்களைத் (Gravel) தொட்டியில் போட்டுப் பயிர் செய்வதும் உண்டு. மணலையும் பொடிக் கற்களையும் கலந்து போட்டுப் பயிர் செய்வதும் உண்டு. தொட்டியில் செடி வளர வளர அதற்கு மூங்கிற் குச்சிகளைப் பற்றுக்கோடாக நட வேண்டும். தொட்டிக்கு மேல் உறுதியான நூல் கயிறுகளைச் சேர்த்து வைக்க வேண்டும்.

செடியின் வேர்கள் கரையத்திலேயே பரவும்படி வைத்து வளர்க்கும் முறை ஒன்று உண்டு. அதை நீரில் பயிர் செய்யும் முறை என்று கூறலாம். கரையத்தைக் கொள்ளும் பெட்டி, மரத்தாலோ கண்ணாடியாலோ பீங்கானாலோ செய்யப்பட்டதாக இருக்கலாம். 2 அடி சதுரத்தில் 9 முதல் 12 அங்குல உயரத்தில் இந்தத் தொட்டி இருக்கவேண்டும். தொட்டியில் 6 அங்குல உயரம் வரையில் கரையத்தை ஊற்றவேண்டும். அதன் மேல் காற்றுக்காக 3 அங்குல இடைவெளி விட்டுக் கம்பி வலை ஒன்றால் தொட்டியின் வாயை மூடிவிட வேண்டும். தொட்டி

யின் வாயை மூட ஒரு டிரேயை அல்லது மரத்தட்டைத் தயாரித்துக் கொள்ளலாம். தட்டின் அடிப்பாகம் கம்பி வலையாக இருக்கலாம்.

டிரேயின்மீது கம்பளம், தழை மட்கு, மரத்தின் இழைப்புச் சக்கை இவைகளைக் கலந்து ஒன்றரை முதல் இரண்டு அங்குலம் வரையில் பருமன் உள்ள படையை உண்டாக்க வேண்டும்.

நாற்றுச் செடியை டிரேயிலுள்ள வலையின் வழியாகக் கரையத்தில் வேர்கள் அழுந்தும்படி நுழைக்க வேண்டும். செடியை மண்ணில் பயிர் செய்யும்பொழுது செடி விழாமல் வேர்கள் மண்ணைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும். தொட்டியிலுள்ள கரையத்தில் வேர்களுக்கு இந்த வசதி இல்லை. டிரேயும் அதிலுள்ள படையும் செடிக்குப் பற்றுக்கோடாக அதன் தண்டைப் பிடித்துக் கொள்வதற்கே இருக்கின்றன.

புதிய கரையத்தைத் தொட்டியில் செலுத்துவதற்கு, தொட்டியின்மேல் ஒரு சிறிய துவாரமும் பழைய கரையத்தை வெளியேற்றத் தொட்டியின் அடியில் மற்றொரு துவாரமும் இருக்கவேண்டும். இந்தத் துவாரங்கள் கார்க்கினால் இறுக மூடப்பட வேண்டும்.

தொட்டியின் அடியில் மற்றொரு துவாரத்தின் மூலம் ஒரு ரப்பர்க் குழாயின் ஒரு நுனியைக் கரையத்தின் வழியாக நீர் மட்டத்துக்கு மேலுள்ள காற்றறைக்கு வரும்படி நுழைத்து அதன் மற்றொரு நுனியில் காற்றடிக்கும் பம்பைப் பொருத்த வேண்டும். ஒவ்வொரு நாளும் ஐந்து நிமிஷம் புதிய காற்றை உள்ளே செலுத்துவது அவசியம்.

தொட்டியைக் காற்றோட்டமானதும் சூரிய ஒளியைப் பெற்றதுமான இடத்தில் வைக்க வேண்டும். ஜன்னல் ஏற்ற இடமாகலாம். மேல் மாடிகளில் மழை நீருக்கு ஒதுக்குப்புறத்தில் அமைக்கலாம். இந்த முறையில் நீரே மண்; அதில் கரைந்துள்ள பொருள்களே மண்ணிலுள்ள சத்துக்கள்; மண்ணில் வாயுக்களின் இருப்பிடம் போன்றது காற்றறை. மண் செடியை விழாமல் பிடித்துக்கொள்வது போல் தண்டை டிரேயிலுள்ள மட்குப் படை பற்றிக்கொள்கிறது. தொட்டியின் கீழுள்ள துவாரம் மண்ணில் வடிகால் முறை இருப்பது போன்றது. மண்ணிலுள்ள செடிக்கு ஆகாயத்திலிருந்து வெப்பம், சூரிய ஒளி, கரியமில வாயு இவை கிடைப்பது போலவே இந்த முறையிலும் கிடைக்கின்றன.

செடி வளர வளர அதற்குப் பற்றுக் கோடாக மூங்கில்களையும், கயிறுகளையும் அமைக்க வேண்டும். செடியின் வளர்ச்சிக்கு ஏற்ப வேர்கள் நீரில் அழுந்தும்படி நீர் மட்டத்தை ஒழுங்குபடுத்த வேண்டும்.

இந்த வகைகள் எல்லோரும்

கைக்கொள்ளக்கூடிய எளிய முறைகள். வேறு சில முறைகளும் உள்ளன.

மணலிலே பயிர் செய்யும் போது விதைகளை மண்ணிலேயே புதைத்து விடலாம். அங்கே உள்ள விதைகள் செடிகளாக வளர்ந்துவிடும். நீரில் வளர்க்கும்போது நாற்றுக்களை மணற் பயிர் முறை மூலம் உற்பத்தி செய்துகொள்ளலாம். இல்லாவிட்டால் விதைகளை இரண்டாம் முறையில் விளக்கியிருக்கும் டிரேயிலுள்ள மட்குப் படையில் புதைத்து, கரையத்தை ஊற்றிப் படையை எப்பொழுதும் ஈரமாக வைத்து, நாற்றுக்களை உண்டாக்கிக் கொள்வது நல்லது. டிரேக்களைத் தனி இடத்தில் வைத்து நாற்றுக்களை வளர்க்க வேண்டும். நாற்றுச் செடிகளுக்குக் கரையத்தில் உள்ள பொருள்களின் அளவு குறைவாக இருக்க வேண்டும்.

செடிகளைப் பயிர் செய்வதற்கு மண் வசதி இல்லாத வீடுகள் பல. நகரத்திலுள்ள பல வீடுகளில் ஜன்னல்மீதோ தாழ்வாரங்களிலோ தொட்டித் தோட்டம் போடலாம். மண்ணில் பயிராகும் செடி தரும் அளவுக்கு மேல் இந்த முறையில் மகசூல் இராது. சத்துக்களை அளந்து ஒன்றையும் குறைக்காமல் எருவாக உபயோகிப்பதால் காய்கறிகளும் மலர்களும் நல்ல ஊட்டம் பெற்றவையாக இருக்கின்றன. மண் வேளாண்மையைவிட இதில் செலவு அதிகம். அடிக்கடி செடிகளைக் கவனிக்க வேண்டியிருப்பதால் உழைப்பும் அதிகம்; என்றாலும், நாமே புதிய முறையில் பயிர் செய்தவற்றை உண்பதில் ஆனந்தம் தோன்றுகிறது. சமையலுக்குக் காய்கறிகள் புத்தம் புதியனவாகக் கிடைக்கின்றன. பொழுது போக்காக ஒருவர் தம் விருப்பப்படி எவ்வளவோ செலவிடுகிறார். தொட்டித் தோட்டம் போடுவதைச் சிறந்த பொழுதுபோக்காகக் கொள்ள விரும்புகிறவர், இந்த வழியில் செலவாவதற்கு முணுமுணுக்க மாட்டார்.

இவ்வளவும் ஒருபுறம் இருக்கத் தொட்டித் தோட்டத்தின் அநுபவம் வீணாவதில்லை. இந்தப் பயிர் முறை அநுபவத்தைக் கொண்டு மண் வேளாண்மையை ஊதிய முறையில் ஒருவர் சிறப்பாக நடத்த முடிகிறது. மண்ணில் கொல்லைத் தோட்டம் போடுவோரும் வியாபாரத் தோட்டக்காரர்களும் நாற்றுக்களைத் தயார் செய்துகொள்ள இந்த முறை மிகவும் ஏற்றதாக இருக்கிறது. மண்ணில் நாற்று நடுவதைவிட மணலிலும் மட்கு முதலிய பொருள்களையுடைய டிரேக்களிலும் எருச் சத்துக்களை ஊற்றி ஊட்டம் கொடுத்து வளர்க்கும் நாற்றுக்கள் வலிவுடையனவாகவும் இருக்கின்றன; விரைவில் வளர்ந்து நல்ல பலனையும் தரக்கூடும்.

—"மஞ்சரி"

# தன்னுணர்ச்சிப் பாட்டு

க. த. திருநாவுக்கரசு எம். ஏ.
துணைத் தமிழ்ப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை.

மக்கள் உள்ளம் புதுமையை நாடுவது இயல்பு. அதைப் போன்றே மக்களினமும் பல புதிய கலைப் பொருள்களைப் படைத்துத் தருமாறு கலைஞர்களைத் தூண்டுகிறது. அக்கலைஞர்களும், தங்கள் இனத்தினரிடையே எழும் அமைகுறையான உணர்ச்சிகளுக்கு, முழு வடிவம் கொடுப்பதன்மூலம் பொன்றாப் புகழினைப் பெறுகின்றனர். கலைகளுக்குள் தந்நிகரற்ற தலைவியாக—கலைகளின் அரசியாக—விளங்குவது இலக்கியக் கலை. இவ்விலக்கியக் கலையினைப் படைத்து அளிக்கும் கலைஞர்களான புலவர்களும், தங்கள் இனத்தவரிடையே தோன்றும் அறிவுப் பசிக்கு ஏற்ற பலதிறப்பட்ட இலக்கியங்களைப் படைத்துத் தருகின்றனர்; அவ்விலக்கியப் படைப்புக்கள் காப்பியங்கள், நாடகங்கள், சிறு கதைகள் எனப் பலவகைப்படும். காப்பியம் மக்களினத்தின் ஒருவகைத் தேவையை அறிவுப் பசியைப் போக்குவதற்கு இயற்றப்பட்டதாகும். அதைப் பலவகை நோக்கங்களுக்கும், தத்தம் திறமைக்கும் ஆற்றலுக்குமேற்பப் புலவர்கள் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். இதைப்போன்றே நாடகமும் மக்களினத்தின் மற்றொரு வகைத் தேவையை நிறைவேற்றத் தோன்றியதாகும். தொல்பழங்காலத்தில் மக்களினம் இத்தகைய இலக்கியப் படைப்புகளைப் படைக்கத் தொடங்குவதற்கு முன்பு தோன்றிய இலக்கிய வகையே தன்னுணர்ச்சிப் பாட்டாகும்.

மக்கள் வாழ்க்கையில் தோன்றக்கூடிய உணர்ச்சிகள் பல வகைப்படும். மக்கள் வாழ்க்கையில் அமைகின்ற சூழ்நிலைகளுக்கும், உளப் பண்பாட்டிற்கும் ஏற்ப, மக்கள் உள்ளத்து உணர்ச்சிகள் தோன்றுகின்றன. அவ்வுணர்ச்சிகளுள் எக்காலத்தவருக்கும், எந்நாட்டவருக்கும் பொதுவானவை காதல், வீரம், இரக்கம், பிரிவாற்றாமை, அறவேட்கை முதலியனவாகும். சிறப்புமிக்க இவ்வுணர்ச்சிகளை நேர்முகமாக வெளிப்படுத்தும் பாட்டுக்கள் இலக்கிய உலகில் சிறப்பிடம் பெற்றுள்ளன. அப்பாடல்கள் ஓர் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உணர்ச்சியின் வெளியீடாக அமைகின்றன. இத்தகையை பாடல்களை மேனாட்டார் 'லிரிக்' (Lyric) என்பர். ஆங்கிலத்தில் 'லிரிக்' என்னும் சொல்லுக்கு, யாழில் (Lyre) இசைத்

துப் பாடும் பாட்டு என்பது பழைய பொருளாகும். தன்னுணர்ச்சிப் பாட்டுக்களாகிய இவை இசைக்கு ஏற்றதாக அமைந்ததில் வியப்பில்லை.

புலவனின் உள்ள உணர்ச்சிகளைச் சொல்லோவியமாக்கிக் காட்டுவதும், புலவன் பெற்ற அனுபவத்தைப் பிறரும் பெற்றுச் சிறப்புறுமாறு செய்வதுமே இப் பாட்டுக்களின் பண்பாகும். புலவனின் உள்ளத்தெழும் யாதாகிலும் ஓர் உணர்ச்சியை, அதற்கேற்ற குறுகிய வடிவில் வெளியிடும் பாட்டுக்கள் அனைத்தும் தன்னுணர்ச்சிப் பாட்டுக்களாகும். இப்பாட்டுக்களில் நாம் புலவனுடைய குரலை மட்டும் கேட்கின்றோம்; பிறருடைய குரலுக்கு இப்பாடல்களில் இடம் கிடையாது. புலவன் தானே பிறரை முன்னிலைப் படுத்திப் பேசுகின்ற முறையில் அமைந்ததையே தன்னுணர்ச்சிப் பாடல்கள். இப்பண்பே, பிற பாடல்களுக்கும், இப்பாட்டுக்கும் இடையே காணப்படும் அடிப்படை வேற்றுமையாகும். இழும் எனும் இனிய ஓசை நயம் இப் பாட்டுக்குரிய சிறப்பியல்பாகும்.

தனி மனிதன் ஒருவன் உள்ளத்தில் எளிதில் மறையக்கூடியதாய்த் தோன்றும் மனவெழுச்சியையோ, நெடுநேரம் தனி மனிதன் ஒருவன் உள்ளத்தில் நிலைத்து நிற்கக்கூடிய நாட்டுப் பற்றுப் போன்ற உணர்ச்சி அனுபவத்தையோ, எளிய, இனிய சொற்களால், சிறுசிறு பாடல்களின் மூலம் வெளிப்படுத்துவன எவையோ, அவையே தன்னுணர்ச்சிப் பாட்டுக்கள் எனப்படும். உள்ள உணர்ச்சியின் ஆழத்தையும் ஆற்றலையும் உணர்த்தும் சொற்களால், இழுமெனும் ஒலிநயத்தோடு சுருக்கமாகவும் செறிவாகவும் பாடப்படும் ஒருவகை இசைப்பாட்டே தன்னுணர்ச்சிப் பாட்டென்பது இதனால் தெளிவாகிறது. இப் பாட்டுக்களில் புலவனுடைய உள்ளத்தில் எழும் உணர்ச்சியே மேலோங்கி நிற்கும் என்றும், புலவனுடைய எண்ணங்கள் கற்பனைச் சிறகுகொண்டு வானுற உயர்ந்து பறப்பதை இப்பாட்டுக்களில் காணமுடியாது என்றும் இலக்கியத் திறனாய்வாளர்கள் மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

இத்தன்னுணர்ச்சிப் பாடல்கள் புலவனிடத்து ஆழ்ந்த உணர்ச்சிஉள்ளபொழுது தோன்றுவனவாகும். எனவே, இப் பாட்டுக்களில் தேவையற்ற சொற்களுக்கோ, வருணனைக்கோ இடமில்லை. மக்களினத்தின் பலதரப்பட்ட உணர்ச்சிகளையும் தழுவுவதாகவும், புலவனுடைய உள்ளத்தே யெழும் உணர்ச்சியின் வயப்பட்டு, அவனுடைய அனுபவத்தோடு ஒன்றி வெளிப்படுவதாகவும் தன்னுணர்ச்சிப் பாட்டுக்கள் உள்ளன. அதனால் பிற இலக்கிய மரபுகளைக் காட்டிலும், ஓரினத்தின் மனப்பாங்கினையும் அவ்வினம் வாழ்க்கையைப் பற்றிக்கொண்டுள்ள நோக்கத்தினையும் நுட்பமாக அறிவதற்கு இவை பெரிதும் பயன்படுகின்

றன. இப்பாட்டு தொல்பழங் காலத்தில் தோன்றிய முதல் இலக்கிய வகையாக இருந்தாலும், இன்றும் உலகெங்கும் பெரு வழக்குடையதாகவும், மிகத் தூய்மையானதாகவும் சிறப்புற்று விளங்குகிறது.

தமிழ் இலக்கியப் பூங்காவில் இத்தகைய வண்ணமலர் பூத்துக் குலுங்கவில்லை. எனினும், பண்டைத் தமிழ்ப் புலவர்கள் தம் உள்ள உணர்ச்சிகளோடு தாம் ஒன்றிப் பாடிய புறநானூற்றுப் பாடல்களும், இடைக்காலத்தில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் இறையின்பத்தில் மூழ்கித் திளைத்தபொழுது எழுந்த அருட்பாக்களும் பிற்காலப் புலவர்களின் தனிப் பாடல்களும், தற்காலப் புலவர்களின் தண்டமிழ்ப் பாடல்களும், தமிழ் இலக்கியப் பூங்காவில் பல்வேறு வண்ணங்களில் மலர்ந்து மணம் பரப்பி வருவதைக் காணுகின்றோம். அம்மலர்களின் வண்ணம்தான் மாறுபடுகின்றனவே அன்றி, அவற்றின் மணம் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரேவகையாக இருப்பதை இலக்கியச் சுவைஞர்கள் கண்டுணரலாம்.

பண்டைத் தமிழ்ப் புலவர்கள், தங்கள் அன்றாட வாழ்வில் தாம் பெற்ற அனுபவங்களை, அவ்வப்போது பாடல்களில் வடித்துத் தந்துள்ளனர். அவை, யாரோ ஒரு மனிதன் என்றோ ஒருநாள் பெற்ற அனுபவத்தை, இன்று வாழும் நாமும் உணர்ந்து போற்றத்தக்க வகையில் அமைந்துள்ளன.

செக்கர் வானத்தில் பறவைகள் கூட்டம் கூட்டமாகத் தங்கள் கூடுகளை நோக்கிப் பறந்து செல்கின்றன. தனது கடமையைக் காலை முதல் செம்மையாகச் செய்து முடித்த பெருமித உள்ளத்தோடு கதிரவன் தனது இல்லத்தை நாடி, விரைந்து செல்லுகிறான். அவ்வேளையில் பெருவழியே வந்துகொண்டிருந்த ஒருவர், பக்கத்திலுள்ள சிற்றாருக்குச் செல்லும் சிறிய பாதையைக் கண்டதும் அவ்வழியே திரும்புகிறார். பயணத்தால் களைத்த அவருடைய உடல் வியர்த்தும், சோர்ந்தும் காணப்படுகின்றது. அமைதி ததும்பும் அவருடைய முகம் 'எதையோ பறிகொடுத்தவர்' அவர் என்பதைச் சொல்லாமல் சொல்லுகிறது.

விரைவாக அவர் அவ்வூருக்குள் நுழைகிறார். அவ்வூரைச் சேர்ந்த வீரர்கள் சிறுசிறு கூட்டமாகவும், வாட்டமே வடிவாகவும் நின்றுகொண்டிருப்பதை அவர் காண்கிறார். அவரைக் கண்டவுடனே, அவ்வீரர்கள் சொல்லொணாத் துன்பத்தோடு கை கூப்பி வணங்குகின்றனர்.

சிறிது தொலைவு சென்றதும், அவர், 'மனைக்கு விளக்காக' விளங்கும் மகளிர், மாலைப்பொழுதில் ஒப்பனையின்றிப் 'புனையா ஓவியங்களாக'த் தங்கள் வீடுகளின் முற்றத்தில் சோகமே உருவெடுத்தாற்போன்று நிற்பதைப் பார்க்கிறார். அவருக்கு ஒன்றுமே புரியவில்லை; பெரிய வியப்பாக இருக்கிறது.

பல முறை அவர் அந்த ஊருக்கு வந்திருக்கிறார். இதைப் போன்ற காட்சியை அவர் கண்டதே இல்லை. எனவே, அவர் தன்னைப் போற்றிப் புரந்த வள்ளலின் வீட்டை நோக்கி விரைந்து செல்கிறார். யாழிசையில் வல்ல பாணன், தனது மனைவியுடன் சோர்ந்த உள்ளத்தோடு, தனக்கெதிரே வருவதைக் கண்டு அவர் திகைப்படைகிறார். அவர் தனது ஆருயிர் நண்பனின் வீட்டை அடைகிறார்; முற்றத்தில் பூத்துக் குலுங்கும், முல்லைக்கொடி ஒன்று காற்றால் அலைப்புண்டு அல்லற்படுவதைக் கண்டவாறே உள்ளே நுழைகிறார்.

அங்குத் தனது இன்னுயிர்த் தோழன்—போர்க்களங்கள் பலவற்றில் தனது வீரம் விளங்க, வலிய வேற்படையைக்கொண்டு, பகைவரை யெதிர்த்து வாகை சூடிய மாபெரும் வீரன்—மீளாப் பேருறக்கத்தில் ஆழ்ந்து கிடப்பதைக் கண்டு அவர் அதிர்ச்சியடைகிறார்; நெடுநேரம் மோனமாக நிற்கிறார்.

அந்த மாபெரும் வீரனோடு—தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாகிய அப்பெருந்தகையாளனோடு—தான் கடைசியாக அளவளாவிய காட்சி அவர் மனக்கண்ணில் மின்னி மறைகிறது. அச்சான்றோனோடு பழகிய 'அந்த நாட்களை' அவர் நெடிது நினைத்துப் பெருமூச்சு விடுகிறார். அது அவருடைய உள்ளக் குமுறலை எதிரொலிக்கிறது. கண்களில் பெருகும் நீரைத் துடைத்துக் கொண்டே தனது செயற்கரிய நண்பனை, அவர் மீண்டும் ஒரு முறை ஏக்கத்தோடு பார்க்கிறார். சிறிது நேரம் கழிந்து, அக்கம் பக்கத்திலுள்ளவர்களை அவர் நோக்குகிறார். அங்குள்ளோர் கற்சிலையாக நிற்பதைக் கண்டு, அவர் வீட்டின் முற்றத்திற்குச் செல்லுகிறார்.

பூத்துக் குலுங்கும் முல்லைக் கொடி அவருடைய கண்களில் படுகிறது. காற்றில் அங்குமிங்கும் அக்கொடி அலைவது, அது களிப்புடன் திரிவதைப்போன்று அவருக்குத் தோன்றுகிறது. அவருடைய இதயம் தாங்கொணாத் துன்பத்தால் துடிக்கும் நிலையில் முல்லைக்கொடி அவருடைய கருத்தைக் கவருகிறது. அவ்வூருக்குள் அவர் நுழைந்தவுடன் கண்ட காட்சிகள் நொடிப்பொழுதில் தோன்றி மறைகின்றன. அவருடைய வாய் மெல்ல முணுமுணுக்கிறது. எங்கும் நிலவிய அமைதியைக் குலைத்த வண்ணம் "முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே?" என்னும் அவருடைய இதயவொலி எங்கும் எதிரொலிக்கிறது. பின்வரும் பாட்டு, அந்நிலையில் அவர் பாடியதாகும்:

"இளையோர் சூடார்;
வளையோர் கொய்யார்;
நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான்; பாடினி அணியாள்;
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை

"முல்லையும் பூத்தியோ
ஒல்லையூர் நாட்டே?"
—புறநானூறு 242.

ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த தமிழ்ப் புலவன் ஒருவன் அடைந்த துன்பத்தின் கதை இது. அன்று குமுறும் எரிமலையாகக் கொந்தளித்த குடவாயில் கீரத்தனாரின் இதயத்தில் எழுந்த இதய வொலியை, இன்றும் நாம் கேட்கிறோம். கேட்பது மட்டுமன்று; அவருடைய துன்பத்தை நாமும் பகிர்ந்து கொள்ளுகிறோம்; நம்மை அறியாமல் கண்கலங்கவும் செய்கிறோம்.

இப்பாடலைப் பாடிய புலவர் பெருந்தகை கீரத்தனார் என்பவராவர். அவர் இக்காலத்தில் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள குட (வாயில்) வாசல் என்னும் ஊரைச் சேர்ந்தவர். தனது புரவலனும் தோழனுமான பெருஞ்சாத்தன் இறந்த பொழுது கீரத்தனார் இப்பாடலைப் பாடியதாகத் தெரிகிறது.

இத்தன்னுணர்ச்சிப் பாட்டு ஒரு செய்தியிலிருந்து மற்றொரு செய்திக்குக்காப்பியத்தைப்போல நம்மை அழைத்துச் செல்லவில்லை. ஆனால் நம்முடைய உள்ளத்தில் உறங்கும் உணர்வுகளை விழித்தெழுமாறு செய்து, ஒரு நிகழ்ச்சியைக் கூறுவதன் மூலம் நம் உள்ளத்தை உருக்குவதை உணருகின்றோம். இவ்வியல்பே தன்னுணர்ச்சிப் பாட்டின் தலையாய பண்பாகும்.

—"அறுவடை"

## பிரிட்டிஷ் வரி வருமானம் ரூ. 5,429 கோடி

லண்டன், பிப். 26—பிரிட்டனின் உள்நாட்டு வருமானத் துறை கமிஷனர்கள் வெளியிட்டுள்ள புள்ளி விவரப்படி 1964–65ல் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குக் கிடைத்த வரி வருமானம் ரூ. 5429 கோடியாகும். இது பற்றிய பட்ஜெட் மதிப்பீடு ரூ. 5384 கோடியாகும்.

மொத்த வருமானத்தில் வருமான வரியின் மூலம் கிடைத்தது ரூ. 4117 கோடியாகும். சர்டாக்ஸ் மூலம் ரூ. 245 கோடியும், லாபவரி மூலம் ரூ. 526 கோடியும் கிடைத்தன. இவை அனைத்தும் இது வரையில்லாத சாதனைகளாகும்.

எனினும் வாரிசு வரி மூலமான வருமானம் ரூ. 416 கோடியிலிருந்து ரூ. 393 கோடியாகக் குறைந்தது.

வரி வசூலுக்கான செலவு ரூ. 84 கோடியாகும்.

லட்சம் பவுனுக்கும் (ரூ. 13 லட்சம்) மேலான வருமானம் கொண்டவர்களின் தொகை 90லிருந்து 99 ஆக உயர்ந்துள்ளதாகவும் மேற்படி புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.

ஒரு லட்சம் பவுன் (ரூ. 13 லட்சம்) வருமானத்தில் சர்டாக்ஸ் வகையில் 83 ஆயிரம் பவுன் (ரூ. 11 லட்சம்) வரியாகக் கொடுத்தாக வேண்டும்.

# ஆராய்ச்சி வழியே உலகுக்கு நீர்வளம்

## [ லிண்டன் பி. ஜான்ஸன்—அமெரிக்க ஜனாதிபதி ]

நல்ல குடி தண்ணீர் எல்லையில்லாமல் கிடைப்பதற்கு விஞ்ஞானம் துணை செய்யுமானால், மக்கள் வரலாற்றில் அது ஒரு மகத்தான நிகழ்ச்சியாக இருக்கும்; அணுவை அடக்கியாளக் கற்றது போலவே இதுவும் ஒரு புதுமையாகவும் தனிச் சிறப்பு வாய்ந்ததாகவும் விளங்கும்.

தொன்று தொட்டே மக்களுக்குத் தண்ணீர் மிகவும் அருமையான ஒன்றாக இருந்து வந்துள்ளது. அதன் பொருட்டு நடந்த போர்கள் பல என்பதை வரலாறு நெடுகக் காணலாம். நீரின்றி இந்த நிலவுலகினின்று மறைந்துபட்ட நாகரிகங்களும் உண்டு.

அத்தொல்லை எல்லாம் இனிமேல் இல்லை என்று ஆக்கக் கூடிய வாய்ப்பு இந்தத் தலைமுறைக்கு இருக்கிறது. அந்த ஆற்றல் நமக்கு இருப்பதை நாம் அறிவோம். அது விஞ்ஞானத்தின் ஆற்றல். அந்த ஆற்றல் சரிவரப் பயன்பட வேண்டுமானால் எல்லா நாடுகளும் சேர்ந்து அதைப் பயன்படுத்த வேண்டும்.

அமைதிப் பணி உணவுத் திட்டத்தை எனது நாடு உற்சாகமாகத் தொடர்ந்து நடத்துகிறது. அமைதிப் பணி அணுத் திட்டத்தையும் நாங்கள் ஆதரிக்கிறோம். பயங்கர அணுவிசையை மக்கள் குல மேம்பாட்டுக்காக அடக்கியாள வேண்டும் என்பதே நாங்கள் வரித்துக் கொண்டுள்ள பொறுப்பு.

இன்று அமைதிப் பணித் தண்ணீர்த் திட்டம் ஒன்றையும் நாங்கள் தொடங்கியுள்ளோம். இதன்படி, மனிதனின் தண்ணீர்ப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குரிய மாபெரும் சர்வதேச ஒத்துழைப்புத் திட்டத்தில் அமெரிக்கா ஈடுபடும்.

உப்புத் தண்ணீரை நல்ல தண்ணீராக்கும் செலவைக் குறைக்க வழிவகை காணும் ஒரு புதிய ஐந்தாண்டுத் திட்டத்தை ஏற்கெனவே அமெரிக்கா தொடங்கியுள்ளது. 20 கோடி டாலர் (ரூ. 95 கோடி.) பிடிக்கும் ஆராய்ச்சித் திட்டம் இது. ஆனால் ஆராய்ச்சிக்கும் மேல் போகவேண்டிய காலம் வந்துவிட்டது.

தேவை உலகம் எங்கும் உள்ள ஒன்று. ஆகவே, அதற்கு ஈடு செய்யும் முயற்சியும் உலகமளாவியதாக இருக்க வேண்டும்.

ஆகவே, உலகத்தின் வறண்ட பகுதிகளுக்கெல்லாம், தாகமுள்ள மூலை முடுக்குகளுக்கெல்லாம், விஞ்ஞானத்தின் பயன் எட்டும்படி செய்ய அமெரிக்காவுடன் சேர்ந்து ஒரு சர்வதேச நிதியை உருவாக்குமாறு உலக நாடுகளையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

உலகத்தின் நீர்வளங்கள் பற்றிக் கவனிக்க அவசரமானசர்வதேசத் திட்டம் வேண்டும்; அதற்கு வேண்டிய வாய்ப்பு வசதிகளை வழங்க அமெரிக்கா தயா

ராக இருக்கிறது. பொது நோக்கம் ஒன்று ஈடேறவேண்டும்; அதற்கு மற்ற நாடுகளும் எங்களோடு சேர்ந்து உழைக்குமாறு கோருகிறோம்.

மக்கள்குலம் அனைத்திற்கும் தண்ணீர் அட்டின்றிக் கிடைக்க வேண்டும் என்பதே அந்தப் பொது நோக்கம்.

இந்நோக்கம் ஈடேற, ஏற்கெனவே தான் செய்துவரும் பணிகளோடு, மேற்கொண்டு பின்வரும் நடவடிக்கைகளையும் எடுக்க அமெரிக்கா தயாராக உள்ளது.

(1) (இந்தியா முதலிய 64 நாடுகள் கலந்துகொண்டதும் 1965 அக்டோபர் மாதம் அமெரிக்காவில் நடந்ததுமாகிய) நீரினின்று உப்பு நீக்கல் பற்றிய முதல் சர்வதேசக் கருத்தரங்கின் சாதனைகளை வைத்து மேலும் முன்னேற்றம் காணுமாறு உலகின் தண்ணீர்ப் பிரச்னைகளையெல்லாம் கவனிப்பதற்குரிய இன்னொரு பெரிய மாநாட்டை ஓர் ஆண்டுக்குள் கூட்டுவித்தல்.

(2) ஐ. நா. வுக்காகத் தண்ணீர்ப் பிரச்னைகள்பற்றி ஆராய்ந்துவரும் 70 நாட்டு விஞ்ஞானிகளுக்குத் தான் அளிக்கும் ஆதரவை அதிகரித்தல்.

(3) அமெரிக்கா வந்து மேற்கொண்டு ஆராய்ச்சி நடத்துவதற்குரிய வெளிநாட்டு விஞ்ஞானிகளை வரவழைப்பதற்கு வேண்டிய மானியத் திட்டங்களை ஏற்படுத்தும் பொருட்டு, அவ்வெளிநாடுகள் விரும்பிக் கேட்டால், அமெரிக்காவின் தலைசிறந்த நிபுணர்களை அனுப்பிவைத்தல்.

இவையெல்லாம் அமெரிக்காவின் முயற்சிகளுக்கு ஆரம்பமே தவிர முடிவல்ல.

உப்புத் தண்ணீரை நல்ல தண்ணீராக்குவதுதான் எதிர்கால வாழ்வுக்கு மிகப் பெரிய நம்பிக்கையாகும் என்பது எனது கருத்து—நெடுநாளாக எனக்கு இருக்கும் கருத்து.

பத்தாண்டுகளுக்கு முன்பு நான் அமெரிக்க செனட்டராக இருந்தபோதே கூறினேன்.

“குடித்தனத்திற்கும், உழவுக்கும், தொழிலுக்கும் இருக்கும் நீர் வளங்கள் போதுமா என்பதை இன்று மிகவும் கருத்தூன்றிக் கவனிக்கவேண்டிய நிலையை அடைந்துவிட்டோம்.... கையைக் கட்டிக்கொண்டு இருக்கக்கூடிய காலம் கடந்துவிட்டது.”

அன்று பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிடப் பிரச்னை இன்று அதிகம் கடுமையாகும். முன்னிலும் இன்று மக்கள் தொகை அதிகம். எனவே உணவு அதிகம் தேவை. குடி தண்ணீர் அதிகம் தேவை. வீடுகள் அதிகம் தேவை. தண்ணீர் இல்லாமல் இவற்றுள் எதுவும் வாராது.

சென்ற பத்தாண்டுகளில் சாதித்ததைவிட அடுத்த பத்தாண்டுகளில் இன்னும் அதிக முன்னேற்றம் காணவேண்டும்.

ஆகவே, கிழக்கும் மேற்கும், நாம் அனைவரும், பிரச்னைகளி

[58-ஆம் பக்கம் பார்க்க]

# போர்டு அறநிலையத்தின் 30 ஆண்டுப் பணிகள்

உலகமெங்கும் பரோபகாரப் பணிகளுக்காக ஏறக்குறைய 260 கோடி டாலர் வழங்கியுள்ள போர்டு அறநிலையத்துக்கு இந்த ஜனவரி மாதம் முப்பதாண்டுகள் நிறைவுற்றன.

இந்நிலையத்தை நிறுவியவர்கள் முதன்மையான அமெரிக்கத் தொழிலதிபர்களாகிய காலஞ் சென்ற ஹென்ரி போர்டு, அவர் மகன் எட்ஸல் இருவருமாவர். போர்டு மோட்டார் கம்பெனி வேறு, போர்டு அறநிலையம் வேறு. இது லாப நோக்கமற்ற பரோபகார நிலையமாகும்.

அற நிலையத்தின் அடிப்படை நோக்கம் மக்கள் நலம் பெருக வேண்டும் என்பதாகும். அதற்காக அது உலகெமெங்கும் பல வகையான திட்டங்களுக்குத் தொழில்நுட்ப உதவியும் பண உதவியும் செய்து வருகிறது. நின்று பலன் தரக்கூடிய நெடுங் கால வளர்ச்சித் திட்டங்களுக்கும், பொருளாதார, சமுதாய, பண்பாட்டுச் சூழ்நிலைகளைத் திருத்தி அமைக்கும் பணிகளுக்கும் அது உதவி புரிகிறது.

கல்விச் சாலைகள், விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்கள், பண்பாட்டுத் திட்டங்கள் முதலியவற்றுக்கு அது பண உதவி வழங்கியுள்ளது. உலகில் பல நாடுகளுக்கு விவசாயப் பொருளாதாரம், செய்திப் போக்குவரத்து முதலிய துறைகளில் உதவி செய்ய அது ஆலோசகர்களை அனுப்பியுள்ளது.

நாளதுவரை, அமெரிக்காவின் 50 மாநிலங்களிலும், இந்தியாவிலும் இன்னும் வேறு 75 நாடுகளிலும் ஏறக்குறைய 5,300 நிலையங்களுக்கு போர்டு அறநிலையத்திலிருந்து மானியங்கள் கிடைத்திருக்கின்றன.

இந்தியாவில் போர்டு அறநிலையத்தின் தொழில்நுட்ப உதவித் திட்டம் 1951-ல் தொடங்கியது. அன்று முதல் இந்நாட்டின் பல்வேறு நிலையங்களுக்கு அது கிட்

---

[57-ம் பக்கத் தொடர்ச்சி]

லெல்லாம் பெரும் பிரச்னையாகிய இதனைத் தீர்க்க நமது விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்துவோம்.

மனித குலத்தின் மிகப் பழைய எதிரிகளாகிய வறட்சியும், பஞ்சமும் தலையெடுக்க வொட்டாதபடி அவற்றைத் தடுத்து மனித குலத்தை விடுதலை செய்தவர்கள் என்று நம்மை வருங்கால மக்கள் பாராட்டட்டும்.

டத்தட்ட 10 கோடி டாலர் (ரூ. 48 கோடி) மானியங்களாகக் கொடுத்திருக்கிறது.

இந்தியாவின் விவசாய வளர்ச்சிக்கு ஆதாரவாகத் தீவிர சாகுபடி மாவட்டத் திட்டம் ஒன்றை அமைத்து அதன்படி சென்ற ஐந்து ஆண்டுகளாக போர்டு அறநிலையம் உதவி செய்து வருகிறது. உணவு விளைச்சலை விளைவாகப் பெருக்கும் முறைகள் என்ன, அவற்றைச் சரிவரப் பயன்படுத்தும் வழிகள் என்ன என்று விவசாயிகளுக்கு இத்திட்டம் எடுத்துக் காட்டுகிறது.

தீவிர சாகுபடித் திட்டம் முதன் முதலில் ஏழு மாவட்டங்களில் நடைபெறலாயிற்று. இம் மாவட்டங்களில் திட்டம் தொடங்குவதற்கு முன்பு மூன்று ஆண்டுகளில் விளைந்ததைவிட, 1964-65-ல் நூற்றுக்கு 35 பங்கு அதிகம் விளைந்தது. தீவிர சாகுபடித் திட்டத்துக்கு போர்டு அறநிலையம் 10 லட்சம் டாலர் (ரூ. 5·2 கோடி) செலவழித்திருக்கிறது.

இந்தியாவின் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கும் போர்டு அறநிலையம் பெரிதும் உதவி செய்கிறது. இவ்வகையில் 1962 முதல் அது 50 லட்சம் டாலர் (ரூ. 2.4 கோடி) கொடுத்திருக்கிறது.

மேற்கு வங்காள அரசாங்கம் நாலரை ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்திய கல்கத்தா நகர அமைப்பு நிலையத்துக்கு போர்டு அறநிலையம் 40,16,000 டாலர் (ரூ. 1·9 கோடி) வழங்கியுள்ளது.

கல்கத்தாவை "நம்பிக்கை ஒளி வீசும் நகரமாக" மாற்றவும், மேற்கு வங்கம், அஸ்ஸாம், பீகார், ஒரிஸா மாநிலங்களில் நகரங்களின் வளர்ச்சிக்கு வகை செய்யவும் வேண்டும் என்பதே கல்கத்தா நகர அமைப்பு நிலையத்தின் நோக்கம் என்று போர்டு அறநிலையத்துப் பிரதிநிதியாக இந்தியாவில் இருக்கும் டக்ளஸ் என்ஸ்மிங்கர் கூறுகிறார்.

இவ்வாறு போர்டு அறநிலையம் உலகமெங்கும் உதவிபுரிந்தாலும் அமெரிக்காவிற்குள்ளேயே கல்வித்துறைத் திட்டங்களில் ஈடுபடுவதுதான் அதன் தலையாய பணியாக இருந்து வருகிறது. உதாரணமாக, தனிப்பட்ட அமெரிக்கக் கல்லூரிகளையும் பல்கலைக் கழகங்களையும் பொறுக்கியெடுத்து அவற்றை அந்தந்த இடங்களிலும் நாடு முழுமைக்கும் தலைசிறந்த நிலையங்களாக்கும் போர்டு அறநிலைய முயற்சியைக் குறிப்பிடலாம்; இதற்கு அது செலவழிக்கும் தொகை சென்ற ஆண்டோடு நூறு கோடி டாலர்க்கு மேல் போய்விட்டது. இத்திட்டத்தில் இதுவரை 57 கல்லூரிகளும், 13 பல்கலைக் கழகங்களும் கலந்துகொண்டுள்ளன.

# ஏப்ரல் 1உ முதல் ஜில்லா போர்டு பள்ளிகள் சர்க்கார் பள்ளிகள் ஆகும்

சென்னை, மார்ச். 9—ஏப்ரல் 1–ந் தேதியிலிருந்து ஜில்லா போர்டு பள்ளிகள் முற்றிலும் சர்க்கார் பள்ளிகளாக ஆகிவிடும் என்று முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் இன்று தெரிவித்தார்.

சென்னை, கோவை கல்வி டிவிஷன்களைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர்கள் மகாநாட்டில், அவர் பேசினார்.

ஜில்லா போர்டு பள்ளிகளை சர்க்கார் மேற்கொள்ளுவதை உத்தேசித்து மேலும் பலஜில்லா கல்வி அதிகாரிகளை நியமிக்கவும் சர்க்காருக்கு ஆட்சேபமில்லை என்றார்.

ஆரம்பப் பள்ளிகளில் 3-வது வகுப்பிலிருந்து ஆங்கிலம் போதிக்கவும், தலைமை ஆசிரியருக்கு உதவிபுரியவும், மேலும் ஒரு செகண்டரி கிரேட் ஆசிரியர் இருக்கவேண்டும் என்று செகண்டரி கல்வி டைரக்டர் திரு. டைட்டஸ் தெரிவித்த யோசனையை அவர் ஒப்புக் கொண்டார். இது பற்றி சர்க்கார் விரைவில் முடிவு செய்யும் என்று முதல் மந்திரி கூறினார்.

பள்ளிக்கூட உதவி இன்ஸ்பெக்டர்கள் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை முதன் மந்திரி நிராகரித்தார். அவர்கள் கல்வி இலாகாவின் கீழ் தான் நீடித்து வருவார்கள் என்றார்.

மதிய உணவு திட்டத்துக்கு எல்லா பாஞ்சாயத்து யூனியன்களும் ஒரு மாணவனுக்கு 2 பைசா வீதம் நிதிஉதவி அளித்து வரவேண்டுமென்று திரு. பக்தவத்சலம் கூறினார்.

செகண்டரி கல்வி டைரக்டர் திரு. டைட்டஸ் வரவேற்றுப் பேசுகையில் 4-வது திட்டத்தின் போது கல்வி இலாகாவின் கீழ் ஏராளமான கட்டிடத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதால், மராமத்து இலாகாவைச் சேர்ந்த சில இஞ்சினீயரிங் சிப்பந்திகளை கல்வி இலாகாவுக்குத் தந்து உதவுவது பற்றி யோசித்துப் பார்க்குமாறு முதன் மந்திரியைக் கேட்டுக் கொண்டார்.

செகண்டரி கல்வி கூட்டு டைரக்டர் திரு. எஸ். வி. சிட்டிபாபு வந்தனோபசாரம் கூறினார்.

# எமது புதிய வெளியீடுகள்

(1965–ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டப்படி
தயாரிக்கப்பட்டவை.)

# HISTORY BOOKS

## சரித்திரம்

சிறுவர் வரலாறு

ஆசிரியர் :

**P. வீரராகவன்,** ஆசிரியர் : (ஆரம்பக்கல்வி)

**மூன்றும் வகுப்பு :** — ரூ. 0 50

ஆசிரியர் ;

**T. S. உமாபதி, M.A., L.T.,**

சென்னை அப்துல் ஹகீம் இந்து முஸ்லீம்
உயர்நிலைப்பள்ளி, (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்.)

| | | | |
|---|---|---|---|
| **நான்காம் வகுப்பு :** | சென்னை | — | ரூ. 0 87 |
| | செங்கற்பட்டு | — | ரூ. 0 87 |
| | வட ஆர்க்காடு | — | ரூ. 0 87 |
| | தென் ஆர்க்காடு | — | ரூ. 0 87 |
| | சேலம் | — | ரூ. 0 87 |
| | கோயமுத்தூர் | — | ரூ. 0 87 |
| | நீலகிரி | — | ரூ. 0 87 |
| | தஞ்சாவூர் | — | ரூ. 0 87 |
| | திருச்சி | — | ரூ. 0 87 |
| | மதுரை | — | ரூ. 0 87 |

| | | |
|---|---|---|
| இராமநாதபுரம் | — | ரூ. 0 87 |
| திருநெல்வேலி | — | ரூ. 0 87 |
| **ஐந்தாம் வகுப்பு :** | — | ரூ. 1 00 |

மாணவர் வரலாறு

**ஆறும் வகுப்பு :** — ரூ. 1 25

# GEOGRAPHY BOOKS

## பூகோளம்

சிறுவர் பூகோளம்

ஆசிரியர் : **P. வீரராகவன்,**

(ஆசிரியர் : ஆரம்பக்கல்வி.)

**மூன்றும் வகுப்பு :** — ரூ.

(எல்லா ஜில்லாக்களுக்கும்)

ஆசிரியர் : **T. S. உமாபதி, M.A., L.T.,**

**நான்காம் வகுப்பு :**

| | | |
|---|---|---|
| சென்னை | — | ரூ. 0 62 |
| செங்கற்பட்டு | — | ரூ. 0 62 |
| வட ஆர்க்காடு | — | ரூ. 0 62 |
| தென் ஆர்க்காடு | — | ரூ. 0 62 |
| சேலம் | — | ரூ. 0 62 |
| கோயமுத்தூர் | — | ரூ. 0 62 |
| நீலகிரி | — | ரூ. 0 62 |
| **ஐந்தாம் வகுப்பு :** | — | ரூ. 1 00 |

# MATHEMATICS BOOKS

## கணக்கு

### சிறுவர் கணக்கு நூல்

ஆசிரியர் : **P.** வீரராகவன். (ஆசிரியர் : ஆரம்பக்கல்வி.)

| | |
|---|---|
| இரண்டாம் வகுப்பு | — ரூ. 0 50 |
| மூன்றாம் வகுப்பு | — ரூ. 0 87 |
| நான்காம் வகுப்பு | — ரூ. 1 00 |
| ஐந்தாம் வகுப்பு | — ரூ. 1 25 |

### புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : **B. V.** நாகராஜன், **B.A., L.T.,**
முத்தியாலுப்பேட்டை, உயர்நிலைப்பள்ளி, சென்னை-1.

| | |
|---|---|
| ஆறாம் வகுப்பு | — ரூ. 1 50 |

# SCIENCE BOOKS

### இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் : **P.** வீரராகவன்,
ஆசிரியர் : "ஆரம்பக்கல்வி."

| | |
|---|---|
| இரண்டாம் வகுப்பு | — ரூ. 0 37 |
| மூன்றாம் வகுப்பு | — ரூ. 0 44 |

ஆசிரியர் : **M. விவேகானந்தா, B.Sc., L.T., M. Ed.,**

| | |
|---|---|
| நான்காம் வகுப்பு | — ரூ. 0 75 |

### சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர் : **K. லட்சுமிநாராயணசாமி, B.A., L.T.,**

| | |
|---|---|
| ஐந்தாம் வகுப்பு | — ரூ. 1 25 |

### பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : **K. லட்சுமிநாராயணசாமி, B.A., L.T.,**

| | |
|---|---|
| ஆறாம் வகுப்பு | — ரூ. 1 25 |
| ஒன்பதாம் வகுப்பு | — ரூ. 1 75 |

# Tamil Non-Detailed Text Books

அறிவுச்சுடர்

ஆசிரியர் : T. S. உமாபதி M.A., L.T.,

ஆறும் வகுப்பு — ரூ. 0 62

புலிகேசி

ஆசிரியர் : இராஜசிவ சாம்பசிவ சர்மா

ஒன்பதாம் வகுப்பு — ரூ. 0 87

# English Non-Detailed Text

## IOTHER INDIA SUPPLEMENTARY READER

Author : Mrs. Lucy ARULRAJ

Sixth Standard — Rs. 0 50

# TAMIL-DETAILED

ஆசிரியர் : T. S. உமாபதி, M.A., L.T.,

திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஒன்பதாம் வகுப்பு — ரூ. 1 75

# TAMIL GRAMMAR

இலக்கணமும் மொழிப்பயிற்சியும்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்

ஒன்பதாம் வகுப்பு — ரூ. 1 50

Edited Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.